காவ்யா



# வேலூர்ப் புரட்சி

4.03
N;2

பேராசிரியர் ந. சஞ்சீவி

# வேலூர்ப் புரட்சி

பேராசிரியர். ந. சஞ்சீவி

ANNA CENTENARY LIBRARY
0011016
21 JAN 2010
CHENNAI - 600 085

காவ்யா

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.
Acc. No. 0011016
Call No. 954.03 SAN;2
Number and Date of Invoice 78/21/1/16
Indian Price 50
Director

# வேலூர்ப் புரட்சி

வரலாறு

ஆசிரியர் : பேராசிரியர் ந. சஞ்சீவி
© பேராசிரியர் ச. எழிலரசி
முதல் திருந்திய பதிப்பு : ஆகஸ்ட் 2004

வெளியீடு - காவ்யா
14, முதல் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

☎ : 2480 1603

E-Mail : kaavyabooks@yahoo.co.in
www.kaavyabooks.com

கணினி அச்சு - சுந்தரம் கிராபிக்ஸ், சென்னை - 24.
அச்சாக்கம் : மணி ஆப்செட், சென்னை - 5.
அட்டை வடிவமைப்பு : முத்து

பக்கங்கள் : XVI + 88 = 104

விலை : ரூ. 50/-

# பதிப்புரை

பேராசிரியர் ந.சஞ்சீவி ஒரு பெருந்தகை. அவரை நான் 1973-ஆம் ஆண்டில் ஜூலை மாதத்தில் சந்திக்கப் போனேன். ஏற்கனவே இரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழக வகுப்பில் மாணவனாக இருந்திருக்கிறேன். அக்காலங்களில் அவருக்கு என்னையோ எனக்கு அவரையோ தனிப்பட்டமுறையில் பழக்கமில்லை. அவரது அறையின் வெளியே 'உத்திரவின்றி உள்ளே வரவும்' என்று எழுதியிருந்த தொடர்கள் எனக்கு அவர்மேல் மரியாதையை ஏற்படுத்திற்று. பார்த்தேன், பேசினேன், எழுந்து வந்தேன். அது ஒரு நல்லநேரம். அதற்குப் பிறகு அவரிடம் 5 ஆண்டுகள் ஆய்வு மாணவனாக இருக்கும் வரம் பெற்றேன். ஒரு குருவாக - ஒரு தந்தையாக - ஒரு நண்பராக என்னுடன் பழகினார். அவரது முதல் ஆய்வு மாணவன் என்பதில் எனக்கும் எனது கடைசி குரு அவர் என்பதில் அவருக்கும் மிகுந்த பெருமிதம் இருந்தது.

அவரது பல்வேறு ஆர்வங்களில் ஒன்று வரலாற்றுத்துறை. அதுவும் வீர மறவர்களின் வரலாற்றையும் விடுதலை இயக்கத்தின் வரலாற்றையும் பெரிதும் நேசித்தார். பல்வேறு சந்தர்ப்பங்களில் 1956 முதல் எழுதிவந்திருக்கிறார். தன் வாழ்க்கை வரலாற்றை கூட எழுதி வைக்க வேண்டும் என்று விரும்பினார். முடியவில்லை.

இந்தத் தொகுப்பை மாணவர் என்ற முறையில் நான் செலுத்தும் நன்றியாகவும் வைத்துக் கொள்ளலாம். தமிழரின் பெருமைக்கும் பீடுக்கும் இது ஒரு பதிப்புப் பட்டயம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். சிவகங்கைச் சிங்கங்கள், முதலில் முழங்கிய முரசு, வீரத்தமிழகத்தில் விடுதலை வேள்வி, வெள்ளையர் கண்ட தமிழ் வீரம், விடுதலை இயக்க வரலாறு, வெள்ளை ஆதிக்க வரலாறு, போரும் வேரும் என்று இவரால்

எழுதப்பட்ட வரலாற்றுக் கட்டுரைகள் கிடைக்காமல் போய்விட்டன.

இவரது நடை இந்நூலுக்கு மேலும் மெருகேற்றி வரலாற்று இலக்கியம் என்று சொல்லத்தக்க வகையில் செழுமையாக உள்ளது. உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க நடையிலேயே ஒரு வீர வரலாற்றினை எழுதுவது சாலச் சிறந்ததுதான்.

இது வேலூர்ப் புரட்சியைப் பற்றிய விரிவான நூலாகும். இதில் பேராசிரியரால் எழுதப்பட்ட வேலூர்ப் புரட்சி (1956) மற்றும் 1806 (1957) எனும் இரு நூல்களும் பிழைகள் திருத்தப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டும் வேலூரின் சிப்பாய்க் கலகத்தையே சித்தரிக்கின்றன.

இந்நூல் வெளிவர பெரிதும் உதவியவர் எனது பேராசிரியரின் மகளும் எனது சகோதரியுமான முனைவர் எழிலரசி அவர்களே. அவரது ஒப்புதலும் ஒத்துழைப்பும் என்னை நெகிழவும் மகிழவும் செய்தன. அவரது குடும்பத்திற்குக் 'காவ்யா' மட்டுமல்ல தமிழ் உலகமும் கடமைப்பட்டுள்ளது.

- காவ்யா சண்முகசுந்தரம்.

# அணிந்துரை

ஆகஸ்டு மாதம் பேராசிரியரால் பெரிதும் மதிக்கப் பட்ட மாதம். காந்தி அடிகள் வெள்ளையனை வெளியேறச் சொல்லியதும், அதை இந்திய மக்கள் தாரக மந்திரமாய் ஏற்றதும் (9.8.1942) அதன் பயனாக ஐந்து ஆண்டுகளுக்குப் பின் பாரதநாடு விடுதலை பெற்றதும் (15.8.1947), வீரத்தலைவர் பூலித்தேவர் வரலாற்றை முதன் முதலாக நூல் வடிவில் வெளியிட்டுப் பெருமை கொண்டதும் (15.8.1958) இந்த ஆகஸ்டு மாதத்தில் தான். இதே மாதம் பேராசிரியரின் நினைவுநாள் மாதமாயும் அமைந்தது (22.8.1988) இறைவன் நடத்தும் விந்தைகளுள் ஒன்றே. பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு பேராசிரியரின் பதினாறாம் நினைவு நாளில் அவர் மனதில் தனியிடம் பெற்றிருந்த அவரது முதல் ஆய்வு மாணவர் திரு. சண்முகசுந்தரம் அவர்களின் 'காவ்யா' மூலமாக அவரது வரலாற்று நூல்கள் மறுபதிப்பாய் மலர்வது பேராசிரியரின் நீண்ட கால ஆசிரியப் பணிக்குக் கிடைத்த இணையில்லாப் பரிசு.

சற்றேறக் குறைய இருபது ஆண்டுகளாகப் பேராசிரியர் அவர்களின் நூல்கள் சுழற்சியில் இல்லாதது என் னுள் பெரும் ஏக்கமாகவே நிலை கொண்டிருந்தது. அதைச் செயல்படுத்தும் எண்ணமிருந்த போதும், நடைமுறைச் சிக்கல்களால் அதற்கு வாய்ப்பின்றியே போனது. திரு. சண்முகசுந்தரம் அவர்கள் பேராசிரியரின் நூல்கள் அனைத்தையும் வெளியிடும் விருப்பை வெளிப்படுத்திய விதம் எனது தயக்கங்களை முழுவதுமாய் வென்றது. இதற்கே இந்த இடைவெளி அமைந்தது போலும்!. பேராசிரியரின் நூல்களும், கையெழுத்துப் படிகளும் இனி

'காவ்யா'வின் துணையுடன் தமிழகம் முழுவதும் வலம்வரும் எனின், அதற்கு திரு.சண்முக சுந்தரம் அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரியது.

எழிலரசி பாலசுப்பிரமணியன்

ஆகஸ்டு 2004.

## உள்ளுறை

1. பழைய வரலாறு
2. புதிய விழிப்பு
3. வேலூரின் விழுப்புகழ்
4. நாமார்க்கும் குடியல்லோம்! நரகத்தில்
இடர்ப்படோம்!
5. நமனை அஞ்சோம்! நல்லுயிரை ஈவோம்!
6. பலி பீடத்தில்
7. புரட்சியின் எதிரொலி
8. நன்றி மறவோம்
9. பிற்சேர்க்கை எண் I
10. " எண் II
11. " எண் III

'வேலூர்ப் புரட்சி 1857-ல் நடந்த பெரும் புரட்சிக்கு ஒரு ஒத்திகை ........
இப்புரட்சியில் சிப்பாய்கள் இளவரசர்களாலும் மக்களாலும்
ஈர்க்கப்பட்டுவிட்டனர். சந்தைகளில் பிரச்சாரகர்கள் பக்கிரிகளைப் போல
வேடம் புனைந்துக் கொண்டு பிரச்சாரம் செய்தனர். புரட்சிக்குரிய
நேரத்தைக் குறிக்கும் வகையில் சப்பாத்திகள் கூட வழங்கப் பெற்றன.
சமயத்தின் பெயரையும் சுதந்திரத்தின் பெயரையும் இந்துக்களும்
முகம்மதியர்களும் ஒன்றுபட்டு புரட்சி புரிய வீறிட்டனர்'.

**- வீர சாவர்க்கர்**

**(இந்தியாவின் முதல் சுதந்தரப் போர் என்னும் நூலில்)**

**''எனவே தோல் தொப்பிகள் வேலூர்ப்புரட்சிக்கு வழிகோலின.
அவ்வாறே ஐம்பதாண்டுகட்குப் பின்னால் நடைபெற்ற
பெரும்புரட்சிக்கு தோட்டாக்கள் வழிகோலின''**

**- டாக்டர் சுரேந்திரநாத் சென்**
**(ஆயிரத்து எண்ணூற்றைம்பத்தெழு --------**

இன்பத் தமிழகத்தின் வடஎல்லை மீட்சிக்காக
அயராமல் பாடுபட்டு
உயிர்துறந்த உத்தமர்

**திரு. மங்கலங் கிழார்**

அவர்கள் அன்பின்
நினைவாக

ஆசிரியரின் காவ்யா பதிப்புகள்

1. வீரத்தலைவர் பூலித்தேவர்
2. மானங்காத்த மருதுபாண்டியர்
3. வேலூர்ப் புரட்சி
4. கால்டுவெல்லின் திருநெல்வேலி சரித்திரம்

## முன்னுரை

'பின் நாட்களில் கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் பிரபு சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் காரியங்களை எல்லாம் கவனித்து வந்தான். அவன் ஆளுகைக்கு உட்பட்டிருந்த அம்மாகாணத்தில்தான் ஓர் ஊரில் பேரழிவிற்கு உரிய செயல்கள் நடைபெற்றன. அச்செயல்கள் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பேரதிர்ச்சியை - நடுக்கத்தைத் தந்தன. அவை இரத்தம் தோய்ந்த எழுத்துக்களால் சரித்திர ஏடுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.'[1]

* * *

'(வேலூர்ப்) புரட்சி விரைந்து பரவியிருக்கும். அச்சந்தர்ப்பத்தில் சுதந்தரப் போரில் கலந்து கொள்ளப் பல்லாயிரக்கணக்கான மக்கள் மனக்கொதிப்புடன் தயாராக இருந்தனர். ஆனால் ஒரு சிறு பிரிட்டிஷ் படையின் தலைவனாக இருந்த கில்ஸ்பீ என்ற ஒரு மனிதனின் தீரத்தால் இந்தியாவில் அப்போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் காப்பாற்றப்பட்டது. பேரழிவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியை கில்ஸ்பீ பாதுகாத்தான் என்று நாம் சொல்லாமற் போனாலும் திகிலிற்கும் இரத்த வெள்ளத்திற்கும் அது இரையாவதினின்றாவது காப்பாற்றினான் என்றேனும் சொல்லத் தான் வேண்டும்.'[2]

வீரம் செறிந்த வேலூர்ப்புரட்சியைப் பற்றி அப்புரட்சி நடைபெற்ற பல்லாண்டுகட்குப் பின்னர் அது குறித்து வரலாறெழுத முனைந்த வெள்ளை வரலாற்றாசிரியர்களின் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களே மேற்கண்ட வாசகங்கள். தமிழகத்தின் வட எல்லையில் நடைபெற்ற ஒரு புரட்சியைப் பற்றிக் கருதுந்தொறும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாகிய வெள்ளை வரலாற்று ஆசிரியர்கள் உள்ளம் எவ்வாறு கலங்கியது என்பதைத் தெளிவாகக் காட்டும் திறம் படைத்தவை அன்றோ இம்மொழிகள்?

ஆனால் எண்ணுந்தொறும் ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்கள் நடுக்கங் கொள்ளும்படி நடைபெற்ற இப்பெரும் புரட்சியை - தமிழினத்தின் தலைவாயிலில் நடைபெற்ற வீரப்புரட்சியைப் பற்றி இந்நாள் வரை நாம் யாதும் அறியோம். ஆனால் எட்டாண்டுகட்கு முன்வரை நம்மைக் கல்நெஞ்சத்தோடு அடக்கி ஆண்ட பறங்கியரே அது பற்றி அதிகம் அறிவர்.[3] ஆம். அடிமைப்பட்ட ஒரு நாடு தன் பெருமையைத் தான் அறிந்து போற்றுவதும் கூட இயலாத செயல்போலும்! என்னே அடிமை வாழ்வின் கொடுமை! நிற்க.

சென்ற சில மாதங்களில் எனக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழகத்தின் தெற்கெல்லையில் நடைபெற்ற 'பாளையக்காரர் சுதந்தரப் போர்' பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களைத் தொகுப்பதில் ஆர்வம் கொண்டிருந்தேன். அதுபோழ்து எதிர்பாராத வகையில் யான் கண்டெடுத்த வரலாற்றுப் புதையலே 'வேலூர்ப் புரட்சி'.

வேலூர்ப் புரட்சி பற்றிய விழுமிய குறிப்புக்களை யான் படிக்கப் படிக்க என் உள்ளத்தில் பொங்கி எழுந்த உணர்ச்சிகள் பல. அவற்றுள் முக்கியமானது 'இத்தகைய பெருமை சான்ற வரலாற்றை விளக்கமாக அறிந்து கொள்ள இத்தனை நாளும் தமிழகம் முயலவில்லையே' என்ற வருத்தம்தான். என் மனத்தில் தோன்றிய அவ்வருத்தம் தமிழினம் அறிந்து பெருமை கொள்ளத்தக்க இச்சீரிய வரலாற்றைப் பாரி நிலையத்தார் அன்புடன் வெளியிடுவதன் வாயிலாக ஒருவாறு நீங்குகிறது. அவர்கள் ஆதரவுக்கு என் உளங்கெழுமிய நன்றி.

இந்திய விடுதலைக்காக நடைபெற்ற முதல் சுதந்தரப் போர் என்று இந்நாள்வரை பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களால் தவறாகக் கருதப்பட்டுவரும் சிப்பாய்ப் புரட்சி நடைபெறுவதற்கு ஐம்பது ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தின் வட எல்லையில் நடைபெற்ற முதல் இந்திய ராணுவப் புரட்சியின் ஆராய்ச்சியாக அமைந்துள்ள இவ்வரலாற்று நூல் தமிழ் மக்கட்கு மிக்க மகிழ்வூட்டுமென்று நம்புகிறேன்.

1. A later Governor - General, Lord William Bentinck administrated the affairs of Fort St. George. It was at a station under that presidency that those disastrous occurrences took place, which at the time excited no inconsiderable alarm both in India and at home, and which are recorded in characters of blood.

- The Mutiny of Vellore p.4.

2. The revolt would have spread: there were known to be disaffected men, by many thousand, ready to join any successful insurrction, but there was at hand a Man (Col : Gillespie) at the head of a little knot

of heroes, and the British Empire in India was saved from much blood-shed and dismay, if not from ruin.

- Adventures of an Arcot Rupee - p. 271

3. இக்கூற்றின் உண்மை இந்நூலில் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுள்ள ஆங்கில வரலாற்று நூல்களின் பட்டியலால் புலனாகும்.

இந்நூலின் கையெழுத்துப்படியைப் பார்த்துத் தக்க திருத்தங்கள் செய்துதவிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் உயர் திரு. வித்துவான். பு. ரா. புருஷோத்தமநாயுடு அவர்கட்கு என் நன்றி நிறைந்த வணக்கங்கள் உரியன.

வாழ்க சுதந்திரம்! வெல்க தமிழினம்!

சென்னை

மன்மத - தை - கஎ ந. சஞ்சீவி.

ஜனவரி 1956


# மேற்கோள்


தமிழ்

1. இராசமாணிக்கம். மா. - சேக்கிழார்
2. சாமிநாத ஐயர், உ.வே. (பதிப்பித்தவர்) - பத்துப்பாட்டு
3. " " - புறநானூறு
4. செந்தமிழ்ச் செல்வி - சிலம்பு - 19
5. சேதுப்பிள்ளை, ரா.பி. - ஊரும் பேரும்
6. துரைசாமிப் பிள்ளை (பதிப்பித்தவர்) - புறநானூறு
7. வீரசாவர்க்கர் - எரிமலை
8. சிறப்புப் பெயரகராதி
9. 1806
10. சுதந்தரச் சுடர்

ஆங்கிலம்

1. Cox. A. F. - North Arcot District Manual.
2. Furnel. S. S. - Mutiny of Vellore
3. Kirly Charles. F. - Adventures of an Arcot Rupee
4. Vibart. H.M. - Military History of the Madras Engineers Vol. I.
5. Wilson W.J. - History of The Madras Army Vol.III.
6. Manual of Madras Information Vol. III.
7. Tamil Culture Vol.
8. Modern Review
9. The Lirtnet
10. 1857 - Dr. Sundaranath Sen
11. Indian war of independence - V.D. Savarkar



# வேலூர்ப் புரட்சி

# 1. பழைய வரலாறு

'அரசன் இல்லாத அரண்மனை; மூர்த்தி இல்லாத கோவில்; அதிகாரமில்லாத போலீஸ்' இருக்குமிடமொன்று தமிழகத்தில் உண்டு என்றால் வியப்பாக இருக்கின்றதல்லவா? ஆம். அந்த ஊர்தான் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வேலூராகும்.

வேலூரின் வரலாறு பழைமை சான்றது; பெருமை மிக்கது. அரண் வலி சான்ற அவ்வழகிய திருநகரின் வரலாற்றில் தமிழகத்தின் வரலாறே ஒருவாறு காட்சி அளிக்கின்றது என்றால் அது உண்மைக்கு மாறாகாது. பசும்புல்லின் நுனியில் நிற்கும் பனிநீர்த் திவலையில் மாமலையின் காட்சியும் ஒளிர்வதுபோல் வேலூரின் வரலாற்றில் தமிழ்நாட்டின் வரலாறே காட்சி தருகின்றது.

'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்று பாடினாள் அறிவிற் சிறந்த ஔவை. அவள் நல்வாக்கால் அழியாப் புகழ்பெற்று விளங்கும் தொண்டை நாட்டின் வரலாறு தொன்மைச் சிறப்பு மிக்கது. இற்றை நாளில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சித்தூர் எனப்படும் மாவட்டங்களையும் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியையும் தன்னகத்தே கொண்டு திகழ்ந்த புகழ் மலிந்த நாடே தொண்டைநாடு. அந்நாட்டில் நால்வகை நிலங்களின் ஐந்திணை வளங்களும் செறிந்து விளங்கும். இயற்கை அன்னையின் கருணை பாலாறாய்ப் பாய்ந்து மக்களை ஊட்டி வளர்க்கும். தொண்டை நாட்டின் மணி முடியாய்த் திகழும் வேங்கடமலையே தமிழ்நாட்டின் வடஎல்லை. கடவுள் அன்பில் தலை சிறந்து விளங்கி நாளாறில் கண் இடந்து அப்பவல்ல பண்பு படைத்த கண்ணப்பனைக் கண்ட காளத்திமலை விளங்குவதும் இத்தொண்டை நாட்டில்தான். அருணகிரியார் திருப்பாடல்களால் அழியாப் பெருமை பெற்று விளங்கும் திருத்தணிகைமலை விளங்குவதும் இம்மண்டலத்தில்தான். சுருங்கச் சொன்னால் மலைவளமும் காட்டுவளமும் நிறைந்து காட்சி அளிக்கும் தகைமை சான்றது தொண்டை நன்னாடு.[1] இத்தகைய இயற்கைப் பெருவளம் செறிந்த இப்பகுதியை அணி செய்யும் பேரூர்களுள் எல்லாம் பல்லாற்றானும் தலைசிறந்து விளங்குவது வேலூரே ஆகும்.

தொண்டை நாட்டை ஆதியில் கைப்பற்றி ஆண்டவர்கள் குறும்பர்கள் எனப்படுவர். அக்குறும்பர்களே தொண்டை மண்டலத்தை இருபத்துநான்கு

கோட்டங்களாக வகுத்துக் கொண்டனராம். பிற்காலத்தில் ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்பவன் குறும்பரை வென்றான்; குடிபுரந்து ஓம்பினான். அன்று முதலே 'தொண்டை நாடு' என்ற பெயர் நிலைக்கலாயிற்று என்ற செவிவழிச் செய்தியை வரலாற்று நூல்களில் பரக்கக் காணலாம். ஆதொண்டைச் சக்கரவர்த்திக்குப் பின் தொண்டைநாடு கரிகாலன் ஆட்சியிலும், இளந்திரையன் ஆட்சியிலும் ஏற்றமுற்றது என்ற வாய்மையைச் சங்க இலக்கியங்களாலும் சரித்திர நூல்களாலும் நாம் அறியலாம். மணிமேகலை காலத்தில் தொண்டை நாட்டில் செங்கோல் செலுத்தியவன் இளந்திரையனாவன். அவனுக்குப்பின் சோழர் ஆட்சியில் செழித்திருந்த தொண்டைநாடு பல்லவராட்சிக்குட்பட்டது. கல்வியில் கரையிலாத காஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவ மன்னர்களின் அறிவாலும் ஆற்றலாலும் தொண்டைநாடு கண்ட சீரும் சிறப்பும் பலவாகும். பல்லவர் காலத்திற்குப் பின் பிற்காலச் சோழர்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின் தொண்டை நாட்டைக் கைப்பற்றி நானூறு ஆண்டுகட்கு மேல் ஆட்சிபுரிந்தனர்.

பிற்காலச் சோழர்களுக்குப் பின் தொண்டைநாடு யாதவர்கள் கையில் சில காலமும் விஜயநகரப் பேரரசர்கள் ஆட்சியில் பல காலமும் வாழ்வு பெற்றது. இக்காலத்திற்குப்பின் முகம்மதிய ஆட்சியில் பிணிப்புண்ட தொண்டை நாட்டின் ஒளி தமிழகத்தின் ஏனைய பகுதிகளைப் போலவே மங்கலாயிற்று. இடையிடையே மராத்தியர்களுடைய படையெடுப்பிற்கும் இரையாகிய தொண்டைநாடு ஆர்க்காட்டு நவாபுகளின் ஆட்சியில் சிக்கியது. நாட்டின் மானத்தை ஆடிக் காற்றில் பட்டம் விடும் சிறுவர்களைப் போல் பறக்கவிடுவதில் சற்றும் பின் வாங்காத நவாபுகளின் போக்கை நாம் நன்கறிவோம். ஆர்க்காட்டு நவாபுகளோடு பங்கு போட்டுக் கொண்டு தேசத்தின் வாழ்வையும் வளத்தையும் நாசமாக்கிக் கொண்டிருந்தனர் பேராசை பிடித்த கிழக்கிந்தியக் கம்பெனிக் கொள்ளைக் கூட்டத்தினர். ஆர்க்காட்டு நவாபுகளின் செயலற்ற தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு நாளடைவில் நாடு முழுவதையும் அடக்கி ஆளும் கொடுங்கோலர்களாகவும் அவர்கள் மாறினார்கள். வயிறு வளர்க்க வந்த வெள்ளை வணிகக் கூட்டம் சுகபோகத்துடன் வாழ வசதிகள் அனைத்தும் வலிந்து செய்து கொடுத்த முகம்மதலி 1795-ஆம் ஆண்டு இறந்தான். அவன் மகன் உமதுத்-அல்-உமாரா அரியணை ஏறினான். கர்நாடகத்தின் பல்வேறு பகுதிகளையும் வெள்ளை வெறியர்கள் கைப்பற்றுவதற்குப் படையொடு சென்று பல்லாற்றானும் துணைபுரிவதில் பெரும் பயிற்சியடைந்திருந்த உமதுத்-உல்-உமாரா அரியணையிலமர்ந்ததும் ஆங்கிலேயரைச் சற்றே முறைத்துப் பார்த்தான். ஆனால் சென்னைக் கோட்டையில் கொடி போட்டுக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்த

வெள்ளை நரிகள் உமதுத்-உல்-உமாராவின் முறைப்பைக் கண்டு முணுமுணுக்கக் கூட இல்லை. புன்முறுவலே பூத்தன. ஆர்க்காட்டு நவாபுவின் கழுத்தை இறுக்கவல்ல கயிறு தங்கள் கையிலேயே இருக்கின்றது என்பதை அந்நாடோடிகள் நன்றாக அறிந்திருந்தனர். மேலும் உமதுத்-உல்-உமாரா 1792-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆர்க்காட்டு நவாப்-ஆங்கிலேயர் உடன்படிக்கையை மீறி கர்நாடகத்தின் வருமானத்தைக் கண்ட பேர்களுக்கெல்லாம் உரிமையாக்கி இருந்தான். இதன் விளைவாக நாட்டிலே விளைந்த குழப்பங்களும் அடிபிடி சண்டைகளும் மக்கள்பால் ஏற்பட்ட மனக்கசப்பும் அளவிறந்தனவாகும். உள்நாட்டு அரசர்கள் ஒருவரோடொருவர் மோதி மண்டையை உடைத்துக் கொள்வதற்கு மட்டும் தன் படைவலியைத் தாராளமாகத் தந்துதவிய வெள்ளை ஏகாதிபத்திய வர்க்கம் இந்த உள்நாட்டுச் சீரழிவைப் போக்க ஒரு சிறிதும் கவலை கொள்ளவில்லை. அதற்கு நேர் மாறாக 'இத்தனைக்கும் காரணம் ஆர்க்காட்டு நவாபுவின் ஆற்றலின்மையே. எனவே நாட்டில் அமைதி நிலவ நவாபுவின் அதிகாரத்தைப் பூரணமாகப் பறிமுதல் செய்ய வேண்டும்' என்று குரல் எழுப்பிப் போர்க்கோலம் பூண்டனர் வெள்ளைத் தளபதிகள். உமதுத்-உல்-உமாராவுக்கு ஆசை காட்டியும் அச்சமூட்டியும் தங்கள் எண்ணத்தை நிறைவேற்ற எவ்வளவோ முயற்சிகளைச் செய்தனர் வெள்ளையர். ஆனால் அரியணையிலமர்ந்தபின் உமதுத்-உல்-உமாராவின் போக்கே மாறிவிட்டது. எதற்கெடுத்தாலும் 'முடியாது' என்று நிமிர்ந்து பேசினான் ஆர்க்காட்டு நவாபு. பார்த்தனர் வெள்ளையர். உமதுத்-உல்-உமாராவை வழிக்குக் கொண்டு வருவது அல்லது அரியணையிலிருந்து வீழ்த்துவது என்ற முடிவிற்கு வந்தது பிரிட்டிஷ் அரசாங்கம். ஆம், முற்பகல் இன்னா செய்யின் பிற்பகல் தானே விளையும் என்பது பொய்யா மொழியன்றோ- தமிழ் நாட்டில் சுதந்தர ஆட்சி நடத்திய எத்தனை உள்நாட்டு அரசுகளை அழித்து ஒழித்துக் கட்டுவதில் ஆர்க்காட்டு நவாபுவான முகம்மதலியும் அவன் மகனாகிய இந்த உமதுத்-உல்-உமாராவும் இரவு பகலாய்ப் பாடுபட்டனர்? மற்றவர்களுக்கு அப்பனும் பிள்ளையும் செய்த தீங்குகளத்தனையும் ஒன்று திரண்டு திரும்பிவந்து தாக்கும் காலம் ஆர்க்காட்டு அரண்மனைக்கு நெருங்கிவிட்டது. காலம் பார்த்துக் காத்திருக்கும் கொக்குபோல் தக்க தருணத்தை எதிர் நோக்கி இருந்தது கும்பினி அரசாங்கம். சீரங்கப்பட்டணம் வீழ்ந்தது. திப்பு இறந்தான். மைசூர் அரண்மனையிலிருந்த ஆவணங்கள் அலசி ஆராயப்பட்டன. அதன் விளைவாக உமதுத்-உல்-உமாராவுக்கும் திப்புவுக்கும் இடையே கள்ள நட்பு இருந்ததென்று ஊகிக்கப்பட்டது. இந்த ஊகத்தைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் பல இருந்தன. ஆயினும் கும்பினி அரசாங்கம் அதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. நல்ல நாயைக் கொல்லுவதானாலும் அதற்கு வெறி பிடித்ததெனப் பழி சுமத்திக் கொன்றால்

தவறில்லை என்று கருதும் 'அறவோர்கள்' அல்லவா கும்பினி ஆட்சியாளர்கள்? எனவே திப்புவுக்கும் உமதுத்-உல்-உமாராவுக்குமிடையே கள்ள நட்பு என்ற காரணத்தை எண்டிசையும் எதிரொலிக்கப் பறையறைந்து தங்கள் கனவை நனவாக்க முற்பட்டனர் கும்பினித் தளபதிகள். நம்பிக்கைத் துரோகி உமதுத்-உல்-உமாரலா என்ற பழியை எங்கும் பரப்பினர். கம்பெனிக்குத் துரோகம் இழைத்ததால் உமதுத்-உல்-உமாராவிடம் எஞ்சியிருந்த அதிகாரங்கள் அத்தனையும் பறிமுதல் செய்ய வேண்டும் என்று முழங்கினர். இந்நிலையில் நோய் வாய்ப்பட்ட உமதுத்-உல்-உமாரா மரணப் படுக்கையில் வீழ்ந்தான். தனக்குப் பின் சிங்காதனம் ஏறத் தன் மகன் அலி-உசேன் என்பவனை நியமித்தான். இதை அறிந்த கும்பினி அரசாங்கம் அலி உசேனிடம் நய உரைகள் பேசின. கர்நாடகம் முழுவதையும் ஆட்சி செலுத்தும் அதிகாரத்தைத் தங்களிடம் ஒப்படைத்தால் அன்றி அவன் அரசுரிமை ஏற்பதைத் தங்களால் அங்கீகரிக்க முடியாது என்று வெள்ளை அரசாங்கம் மிரட்டியது. கும்பினியின் நயஉரைகட்கும் பயமொழிகட்கும் இணங்க மறுத்தான் அலி உசேன். உடனே கும்பினி அரசாங்கம் வேறொரு ஆர்க்காட்டுப் பொம்மையின் மீது கவனம் செலுத்தியது. அது சமயம் காலஞ்சென்ற ஆர்க்காட்டு நவாபின் உறவினனான அஜீம்-உல்-உமாரா 'அரசுரிமை எனக்கே' என்று ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினான். திரை மறைவில் கும்பினி அரசாங்கத்திடம் கர்நாடகத்தின் அதிகாரம் முழுவதையும் ஒப்படைத்து விடுவதாக வாக்குறுதி செய்தான். 'அமர அரியணை கிடைத்தால் போதும், நாட்டின் ஆட்சி உங்களுக்கே' என்று பேசினான் தன்மானமற்ற அந்த அஜீம்-உல்-உமாரா. 1801-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் தேதி இந்த மனிதப் பதருக்கும் கும்பினி அரசாங்கத்திற்குமிடையே ஒப்பந்தமொன்று எழுந்தது. ஆம். அறிஞர் கால்டுவெல் கூறுவதுபோல வாள்முனையால், வாய்வாதங்களால் சாதிக்க முடியாத காரியத்தை வாளினும் வல்லமை பொருந்திய தங்கள் பேனா முனையால் சாதித்துக் கொண்டனர்.[2] அதன் விளைவாகக் கர்நாடகம் நாடோடிகளின் உரிமையாயிற்று. தமிழக வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு ஆர்க்காட்டு நவாபின் அலங்காரத்திற்கு என்று முடிவு செய்யப்பட்டது. 'அந்தோ! பழம்பெருந் தமிழகமே! இமயத்தின் சாரலிலும் குமரி முனையிலும் உன் புகழ் எதிரொலித்த காலம் போய், மேலைக் கடலலைகளும் கீழைக்கடலலைகளும் உன் விஞ்சுபுகழை விளம்பியகாலம் போய் நீ இப்படியா பரதேசிகளுக்கு அடிமைப்பட வேண்டும்?' என்று நூலோரும் மேலோரும் நினைந்து நினைந்து நெஞ்சம் புழுங்கும் காலம் தமிழகத்திற்கு நேர்ந்தது. நல்லோர் நெஞ்சம் புழுங்கினால் நாட்டில் அமைதி நிலவுமோ?

■

# 2. புதிய விழிப்பு

இன்றைய வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆரம்ப நாட்களில் சித்தூர் மாவட்டமும் சேர்ந்தே இருந்தது. வட ஆர்க்காடு மாவட்டம் பிரிட்டிஷ் ஆட்சியில் உருவான வரலாற்றை 'வட ஆர்க்காடு மானுவல்' தெளிவாக விளக்குகிறது. அதன்படி சந்திரகிரி, சித்தூர், பழமனேரி, வாலாஜா, குடியாத்தம், வேலூர், போளூர், வந்தவாசி, ஆர்க்காடு முதலிய தாலுக்காக்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் அடங்கிக் கிடந்தன. பழைய வட ஆர்க்காடு மாவட்டத்தின் வட எல்லை வேங்கடமே. 1911-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதிதான் வட ஆர்க்காடு மாவட்டத்தை நிர்வாக வசதிகள் என்ற காரணம் காட்டிப் பிரிட்டிஷ் அரசாங்கம் கூறுபோட்டது. அதன் பயனாக உருவாகியதே சித்தூர் மாவட்டம். பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழகத்திற்குச் செய்த அநீதிகளுள் இதுவும் ஒன்று. இந்த அநீதியின் விளைவைத்தான் விடுதலை பெற்ற இந்தியாவிலும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். வட ஆர்க்காடு மாவட்டம் அன்று அவ்வாறு பிளக்கப்படாமல் இருந்திருந்தால் தமிழகத்தின் எல்லையாகிய திருப்பதிக்காக அண்டை நாட்டு ஆந்திரரோடு நாம் போராட வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது என்பது திண்ணம். இவ்வாறு வேங்கடத்தை வட எல்லையாய், போளூரைத் தெற்கெல்லையாய், மைசூரை மேற்கெல்லையாய், பழவேற்காடு ஏரியை கிழக்கெல்லையாய்க் கொண்டிருந்த வட ஆர்க்காடு மாவட்டத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எண்ணற்ற பாளையக்காரர்கள் வாழ்ந்து வந்தார்கள். விஜயநகரப் பேரரசர் காலத்தில் இப்பாளையக்காரர்களின் பரம்பரை தோன்றியது. அந்நாள் தொட்டு சிற்சில சந்தர்ப்பங்களைத் தவிர பெரும்பாலும் குறுநில மன்னர்களாய் ஆட்சி செலுத்தி வந்த இப்பாளையக்காரர்கள் முகம்மதியர் ஆட்சிக் காலத்தில் தங்கள் முழு அதிகாரத்தையும் நாட்டு மக்களிடத்திலே காட்டத் தொடங்கினர். எவருக்கும் கைகட்டிக் கப்பம் செலுத்த மறுத்தனர். இப்படித் தனி அரசு நடத்திவந்த இப்பாளையக்காரர்களின் சுதந்திர உணர்ச்சி காலப்போக்கை ஒட்டி நாளுக்கு நாள் வளர்ந்து வலுப்பெறலாயிற்று. ஆர்க்காட்டு நவாபுவின் காலத்தில் இவர்களுடைய விடுதலை வேட்கை எல்லைமீறிச் சென்றிருந்தது. இந்நிலையில்தான் கர்நாடகம் முழுவதையும் ஆர்க்காட்டு நவாபுவிடமிருந்து கைப்பற்றிய ஆங்கில அரசாங்கம் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பாளையக்காரர் அனைவரையும் கைகட்டிக் கப்பம் செலுத்தக் கட்டளையிட்டது. சுதந்தர உணர்ச்சி மேலிட்ட வட ஆர்க்காடு

மாவட்டப் பாளையக்காரர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் கப்பம் செலுத்த மறுத்தனர்; விடுதலை முரசு கொட்டினர். ஆத்திரம் கொண்டது கும்பினி அரசாங்கம். வட ஆர்க்காடு மாவட்டத்தின் முதல் கலெக்டராகிய ஸ்ட்ரேட்டன் **(Mr. Stratton)** துணை கொண்டு பாளையக்காரர்களை நொறுக்கி எறியத் திட்டம் தீட்டியது. வட ஆர்க்காடு பாளையக்காரர்களோ கலங்காது போர்க்களம் புகத் துணிந்தனர். பத்துக்கு மேற்பட்ட பாளையக்காரர்கள் சுதந்தரப் போரில் கலந்து கொள்ளத் தோள் கொட்டினர். ஆம், தமிழகத்தின் வட எல்லையில் ஒரு நெற்கட்டுஞ்செவ்வலையும் பாஞ்சாலங் குறிச்சியையும் சிவகங்கையையும் உண்டுபண்ண அவர்கள் உள்ளம் துடித்தது. வட ஆர்க்காடு மாவட்டத்திலும் பூலித்தேவர்களும் கட்டபொம்மன்களும் ஊமைத்துரைகளும் மருது பாண்டியர்களும் தோன்றுவார்களோ என்று எண்ணி மனம் கலங்கியது கும்பினி அரசாங்கம். 'கூடிய வரையிலும் கொஞ்சிக் குலாவிக் காரியத்தைச் சாதிப்போம்; முடியாவிட்டால் கொலைவாளை எடுப்போம்; பீரங்கிகளைப் பயன்படுத்துவோம்' என்று முடிவு செய்தது வெள்ளை முதலாளி வர்க்கம். எவ்வழியாலும் வட ஆர்க்காடு மாவட்டத்துப் பாளையக்காரர்கள் இதயத்தில் பொங்கி எழுந்த சுதந்தரத் தீயை அவிக்க முடியாது என்று கண்டவுடன் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் கர்னல் டார்லேயின் தலைமையில் 1804-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் தேதி ஒரு பெரும்படையைச் சித்தூருக்கு அனுப்பியது. அப்படை சித்தூருக்குள் ஜூலை மாதம் 17-ஆம் தேதி புகுந்தது. காக்பர்ன் என்ற ஒரு அதிகாரியை மாவட்டத்தின் நிர்வாகம் முழுவதையும் ஏற்றுக் கொள்ளும் பொருட்டும் அனுப்பி வைத்தது வெள்ளை ஏகாதிபத்தியம். ஸ்ட்ரேட்டன், காக்பர்ன், டார்லி **(Mr. Stratton, Mr. Cockburn, Lieut-col. Dorley)** இந்த மூவர் மூளையும் தமிழகத்தின் வட எல்லையில் எழுந்த சுதந்தரக் கிளர்ச்சியை ஒடுக்குவதில் தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தன. 'பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிபணிய மாட்டோம்' என்று போர்க்கோலம் பூண்டிருந்த பாளையக்காரர்களுக்கெல்லாம் காக்பர்ன் கடிதம் எழுதினான். 'பணிந்து விடுங்கள்; இல்லையேல் வந்திருக்கும் பட்டாளம் உங்களைக் கொன்று குவிக்காது திரும்பாது' என்று மிரட்டினான். முகாமிலிருந்து கொண்டு பாளையக்காரர்களின் முகத்தைப் பார்க்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த காக்பர்னின் ஆசையெல்லாம் மண்ணாயிற்று. வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பாளையக்காரர் எவரும் வெள்ளை அதிகாரி இருக்கும் திக்கைக் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. தங்களுக்குப் பதிலாக தங்கள் வழக்கறிஞர்களை மட்டும் அவர்கள் அனுப்பி வைத்திருந்தனர். தன்னைப் பார்க்கவந்த வழக்கறிஞர்களைப் பார்த்து பார்த்து 'எங்கே உங்கள் ராஜாக்கள்' என்று உறுமினான் காக்பர்ன். ஒரு வழக்கறிஞர், 'எங்கள் தலைவர் இன்று உண்ணாவிரதம் இருக்கின்றார்; விரத நாள் ஆதலால் வெளியே வரமாட்டார்'

என்றார். இன்னொருவர் 'எங்கள் அரசர் இன்றுதான் விளக்கெண்ணெய் குடித்திருக்கிறார்; அவர் விரும்பினாலும் வந்து பார்ப்பது முடியாத காரியம்' என்றார். மற்றொருவர் 'நெடுநாளைக்குப் பின் இன்றுதான் எங்கள் ராஜா காட்டுக்கு வேட்டையாடப் புறப்பட்டிருக்கின்றார்' என்றார். வக்கீல்களின் பதிலைக்கேட்ட காக்பர்ன் வயிறு எரிந்தது; கண்கள் சிவந்தன; நெஞ்சம் குமுறியது. 'சரி சரி தமிழகத்தின் தெற்கெல்லையில் மாண்டு மடிந்த மாவீரர்கள் மீண்டும் இங்கே நம்மைப் பலி கொள்ள வந்து விட்டார்கள் போலும்' என்று கருதிப் பதறினான்.

காக்பர்னின் அழைப்பை ஏற்க மறுத்த வட ஆர்க்காடு மாவட்டப் பாளையக்காரர்கள் போருக்கான ஏற்பாடுகள் எல்லாவற்றையும் மின்னல் வேகத்தில் செய்து முடித்தனர். அவர்கள் ஆயுதபலம் ஆங்கிலேயர்களின் படைவலியை நோக்கக் குறைவுதான். ஆனால் தென் பாண்டிச் சீமையைப் போலவே வட ஆர்க்காடு மாவட்டத்திலும் அம்பு புகமுடியாத அடர்ந்த காடுகளும் எளிதில் எவராலும் ஏறி உச்சியைக் காண முடியாத உயர்ந்த மலைகளும் பல பல உண்டு. இயற்கையாக அமைந்த இவ் அரண்களை எல்லாம் பயன்படுத்திக் கொண்டு வட ஆர்க்காடு மாவட்டத்துப் பாளையக்காரர்கள் சுதந்தரப் போரில் குதித்தனர். பாளையக்காரர்களை அடக்க இருமுறை பறங்கிப் பட்டாளம் படையெடுத்தது. மைசூரிலிருந்தும் கூட படைகள் வரவழைக்கப்பட்டன. காடுகளிலும் மலைச்சாரல்களிலும் கோட்டைகளிலும் மறைந்து மறைந்து எட்டு மாதங்கள் விட்டு விட்டுப் போராடினார்கள் விடுதலை வீரர்கள். ஆனால் ஒழுங்கான ராணுவப் பயிற்சி பெறாத பாளையக்காரர்களின் வீரர்களால் நாலாயிரத்துக்கு மேற்பட்ட காலாட்படைகளையும் குதிரைப் படைகளையும் கொண்ட ஏகாதிபத்திய சேனையை முறியடிக்க முடியாமற் போயிற்று. தனிமனிதர்கள் எவ்வளவுதான் வீர உணர்ச்சி படைத்தவர்களாயிருந்தாலும் பயிற்சி இல்லாத ராணுவத்தைக் கொண்டு பலம் பொருந்திய மாற்றார் படையை எதிர்த்து வெற்றி கொள்வது எங்ஙனம்? எனவே போராட்டத்தின் முடிவு பாளையக்காரர்களின் வீழ்ச்சியாகவே அமைந்தது. படைவன்மை மிக்க பாண்டி நாட்டுப் பாளையக்காரர்களாலேயே வெள்ளையரை வெற்றி காண்பது அரிதாக இருந்தது எனில் சிறு சிறு படைகளையே வைத்திருந்த வடஆர்க்காடு குறுநிலத் தலைவர்களால் கொள்ளை அடிக்க வந்த கும்பினிப் படையைச் சிதறியோடச் செய்ய முடியாமற் போனதில் விந்தை ஒன்றுமில்லைதான். ஆனால், பேய்க்குணம் படைத்த வெள்ளை வெறியர்கள் பாளையக்காரர்களின் வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் செய்த அட்டூழியங்களை நினைக்கும்பொழுது நெஞ்சம் புண்ணாகும். பலம் பொருந்திய பாண்டி நாட்டில் செய்தது போலவே வட ஆர்க்காடு மாவட்டத்திலும் விளங்கிய வன்மைமிக்க

கோட்டைகளை எல்லாம் இடித்துத் தள்ளி மண்மேடாக்கினர். சுதந்தர வீரர்களைப் போராட்டக் காலத்தில் அணைத்துக் காப்பாற்றிய காடுகளை எல்லாம் அழித்து நாசமாக்கினர். வேல்பிடித்து வீரப்போர் புரிந்த தமிழர்களை எல்லாம் சுட்டுக் கொன்றனர். நாடாளும் உரிமை படைத்த குறுநில மன்னர்களை எல்லாம் விலங்கு பூண்டு வாழும் கைதிகளாக்கினர். தமிழகத்தின் தெற்கெல்லையில் செய்தது போலவே வட ஆர்க்காடு மாவட்டப் பாளையக்காரர் நடத்திய சின்னஞ்சிறு சுதந்தரப் போரில் வெள்ளையருக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்த ஒன்றிரண்டு துரோகிகளுக்கு ஊராளும் உரிமையைக் கொடுத்ததோடு பணமூட்டைகளையும் பரிசாக அளித்தனர். இவ்வாறு பல்வகையாலும் அல்லலுற்றும் அவமானமடைந்தும் மனங்கொதித்துக் கொண்டிருந்த வட ஆர்க்காடு மாவட்டத் தமிழர்கள் நயவஞ்சக வெள்ளை நரிகளைக் கொன்று குழியில்புதைக்க என்றேனும் ஒருநாள் வாய்க்காதா என்று ஏங்கிக் கிடந்தனர்.

1805-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ஆம் தேதி சென்னையிலிருந்த கும்பினி அரசாங்கத்துக்கு வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் ஒரு கடிதம் எழுதினான். 'ராணுவ பலத்தால் வட ஆர்க்காட்டை அடக்கிவிட்டோம்' என்று அதில் அவன் எக்காளமிட்டிருந்தான். ஆனால் அக்கடிதம் எழுதி ஓராண்டுதான் ஆயிற்று. அடுத்த ஆண்டு முடிவதற்குள் அவன் குலை நடுங்க - அவனுக்குச் சோறிட்ட பரதேசிக் கூட்டம் பதைபதைக்கப் - பாரத நாடே நடுநடுங்கிப் போகும் வண்ணம் மாபெரும் நிகழ்ச்சி ஒன்று வட ஆர்க்காடு மாவட்டத்திலே நடந்தது. ஆம். இத்தனை நாளும் தமிழர்களாகிய நாம் கூட மறந்து போய்விட்ட அப்பெருநிகழ்ச்சி - வீரப்புரட்சி - வட ஆர்க்காடு மாவட்டத்தில் எங்கே ஏன் எவ்வாறு நடந்தது என்பது பற்றிய மெய்சிலிர்க்க வைக்கும் செய்திகளை எல்லாம் இனி வரும் இயல்களில் விரிவாகப் பார்ப்போம்.

▪

# 3. வேலூரின் விழுப்புகழ்

பண்டு தொண்டை நாட்டை ஆண்ட குறும்பர்கள் தங்கள் ஆட்சிக்குரிய பகுதியை இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரித்து அரசோச்சினர் என்பர். அப்பிரிவினை அவர்களுக்குப் பின் தமிழகத்தின் வட பகுதியை ஆண்ட பல்லவர்களாலும் பிற்காலச் சோழர்களாலும் பின்பற்றப்பட்டு வந்தது. புழல்கோட்டம், ஈக்காட்டுக் கோட்டம், மணவிற்கோட்டம், செங்காட்டுக் கோட்டம், பையூர்க் கோட்டம், எயில் கோட்டம், தாமல் கோட்டம், ஊற்றுக்காட்டுக் கோட்டம், களத்தூர்க்கோட்டம், செம்பூர்க் கோட்டம், ஆம்பூர்க் கோட்டம், வெண்குன்றக் கோட்டம், பல்குன்றக் கோட்டம், இலங்காட்டுக் கோட்டம், கலியூர்க் கோட்டம், செங்கரைக் கோட்டம், படுவூர்க் கோட்டம், கடிகூர்க் கோட்டம், செந்திருக்கைக் கோட்டம், குன்ற வட்டான கோட்டம், வேங்கடக் கோட்டம், வேலூர்க் கோட்டம், சேத்தூர்க் கோட்டம், புலியூர்க் கோட்டம் என்பனவே அவ்விருபத்து நான்கு கோட்டங்களாகும்.[4]

சங்க காலத்துத் தமிழகத்தை அரசோச்சிய ஈரமும் வீரமும் ஒரு சேரப் பொருந்திய வேந்தர்களுள் ஒருவன் ஓய்மா நாட்டு நல்லியக் கோடன். கடையெழு வள்ளல்களுக்குப் பின் அவர்கள் புகழை எல்லாம் தன் புகழாகக் கொண்டு வாழ்ந்த இம்மன்னனே பத்துப் பாட்டுள் மூன்றாவது பாட்டாகிய சிறுபாணாற்றுப்படை போற்றும் தலைவன். இவன் நாடு ஓய்மா நாடு என்பது இவன் பெயருக்கு முன் நின்று சிறப்பிக்கும் அடைமொழியால் விளங்குகின்றது. வலிமை பொருந்திய ஓவியர் குடியில் பிறந்தமையால் 'உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்'[5] என்று புலவர் பாடும் புகழ் பெற்ற இப்பெருந்தகை ஆண்டநாடு தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திண்டிவனத்தைச் சூழ்ந்த நாடு என்பர்.[6] இந்நாடு இன்றைய தென் ஆர்க்காடு மாவட்டத்தின் பெரும்பகுதியையும் வட ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது என்பது ஆராய்ச்சியால் புலனாகும் உண்மையாகும்.[7] புறநானூற்றிலும், சிறுபாணாற்றுப் படையிலும் பெரிதும் போற்றப்படும் நல்லியக் கோடனுடைய ஊர்களுள் பெருமை பொருந்தியனவாக ஐந்து ஊர்கள் குறிப்பிடப் பெறுகின்றன. அவை கிடங்கில், மாவிலங்கை, எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்பனவாம். இவ்வைந்துள்ளும் அரண்வலி சான்ற கோட்டையாய்ப் - புலவர் பலரை ஈன்றெடுத்த அருமை சான்ற ஊராய் -

சங்க காலத்தில் திகழ்ந்த கிடங்கில் இப்பொழுது திண்டிவனத்தருகே ஒரு சிதைந்த சிற்றூராய்க் காட்சி அளிக்கின்றது.[8] நல்லியக்கோடனின் தலைநகர் எனக் கருதப்படும் மாவிலங்கை புனல் நாட்டுக்கு வடக்குள்ள அருவர்நாடு, அருவா வடதலைநாடு என்ற இரண்டும் சேர்ந்த இடமென்று கூறுவர்.[9] ஆழ்ந்த அகழியும் ஓங்கி உயர்ந்த மதிலும் கொண்டு விளங்கிய இம்மாவிலங்கை தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலூக்காவில் இன்றும் இப்பெயர் திரியாது திகழ்கிறது.[10] ஏனைய மூன்று ஊர்களைப் பற்றியும் மிகச் சிறந்த குறிப்புக்கள் சிறுபாணாற்றுப்படையில் காணப்படுகின்றன. அவற்றுள் எயிற்பட்டினமும், வேலூரும், ஆமூரும் தொண்டைநாட்டு இருபத்து நான்கு கோட்டங்களுள் மூன்று கோட்டங்களுக்குரிய தலைநகரங்களாகும். அவற்றுள் சிறந்ததாகிய வேலூர்க் கோட்டத்தின் தலைநகராகிய வீரப்புகழ் வாய்ந்த வேலூரைப் பற்றியே ஈண்டு நாம் சற்றே விரிவாகவும் விளக்கமாகவும் ஆராயக் கடமைப்பட்டுள்ளோம்.

வேலூர் என்ற சொல்லின் பொருள் யாது? அப்பெயரால் ஓர் ஊரும் கோட்டமும் வழங்கப்பட்டதேன்? பழந்தமிழகத்தில் ஓர் ஊரோ அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியோ அவ்வூரிலே மலிந்திருக்கும் இயற்கைப் பொருள்களை ஒட்டிப் பெயர் பெற்ற வரலாறு தமிழகத்து இடப் பெயர்களை ஆராய்ந்து விளக்கியுள்ள அறிஞர்களின் நூல்களாலும் கட்டுரைகளாலும் இனிது புலனாகும். அவ்வாராய்ச்சி வழி நின்று காணுங்கால் வேலமரங்களை மிகுதியாகப் பெற்றிருந்தமையால் வேலூர் என்ற பெயர் அமைந்தது என்பது தெள்ளிதின் விளங்கும்.[11] இனி சங்க நூலாகிய சிறுபாணாற்றுப்படையால் வேலூரைப் பற்றிய வேறொரு வியத்தகு குறிப்பும் கிடைக்கின்றது. ஓய்மா நாட்டு நல்லியக்கோடனைப் பற்றிச் சற்றுமுன் சிந்தித்தோமல்லவா? அந்நல்லியக் கோடன் புலவர்பால் குழந்தைபோல் பழகும் அருள் நிறைந்த பண்பினன். ஆனால் மாற்றார்க்கோ காலனை ஒத்தவன். அத்தகையவனின் வலியை அறியாது போரிட வந்த பலர் அழிவையும் இகழ்ச்சியையுமே முடிவில் கண்டனர். தன் வாழ்நாளில் எத்தனையோ வெற்றிகளைக் கண்டிருந்தான் நல்லியக்கோடன். அப்புகழ்ப் பெருமை எவ்வாறோ அவன் நெஞ்சில் ஒரு சிறிது ஆணவத்தையும் வளர்த்துவிட்டது. இயற்கையில் மிக நல்ல பண்பினன், உயர்ந்த நோக்கினன் நல்லியக்கோடன். ஆயினும் புகழ் பொல்லாததன்றோ? தமிழ்ப் புலவரை ஆதரிப்பதில் அளவிலா இன்பம் கண்டதைப் போன்றே தமிழ் மக்களின் பழம் பெருந் தெய்வமாகிய முருகவேளைப் போற்றிப் பணிவதிலும் எல்லையில்லா இன்பமும் அமைதியும் கண்டு வந்தான் நல்லியக்கோடன். முருக வழிபாட்டால் பெரிதும் பண்பட்டிருந்த அவனுடைய இதயத்தில் புகழ் காரணமாக ஒரு சிறிது வேர் விட்டிருந்த அகந்தைக் கிழங்கையும்

அகழ்ந்தெடுக்க அயில்வேல் முருகன் ஒரு சமயம் அவாவினானாம். நல்லியக்கோடன் ஒருமுறை மாற்றார் படையை எதிர்த்து முறியடித்துப் புறமுதுகு காட்டி ஓடும்படிச் செய்தான். புறமுதுகு காட்டி ஓடும் படைகள் தன் நாட்டின் எல்லையைக் கடந்து வெகுதூரம் செல்லும் வரையில் விரட்டிக் கொண்டே சென்றான். அந்நிலையில் எதிர்பாராத வகையில் அவன் படைகள் சோர்ந்தன; அவனும் களைப்புற்றான். நல்லியக்கோடனும் அவன் படைகளும் சோர்ந்ததை அறிந்த ஒன்னார் சேனை பேராரவாரத்துடன் திரும்பியது. வெற்றியன்றி வேறொன்றையும் கண்டறியாத நல்லியக்கோடன் உள்ளம் கலங்கியது. மனக் கலக்கத்தைத் தன் ஆண்மையால் மறைத்துக் கொண்டு வலிமை சான்ற தம் படைகட்கு மேலும் மேலும் ஊக்கமூட்டி மாற்றரை மோதத் தூண்டினான். இரு தரப்பிலும் கடும்போர் நடைபெற்றது. அந்நிலையில் அந்தி வந்தது. ஆதவன் மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது. நல்லியக்கோடன் தன் பாசறைக்குச் சென்றான். படுக்கையில் கிடந்தான். அவன் உள்ளம் உருகியது. 'முருகா! வீரத் தமிழ்க் கடவுளே! உன் அடியவனன்றோ நான்? என் வேலால் எந்நாளும் இவ்வையகத்தைப் பணிய வைக்கலாம் என்று எண்ணி இறுமாந்திருந்தேன். அந்த இறுமாப்பு இன்றோடு தொலைந்தது. என் வேலினும் பெரியது வேலவன் கருணை என்பதை உணர்ந்து கொண்டேன். ஆண்டவனே! நான் உடல்; நீதான் உயிர். உன் அருளில்லா வழி என் ஆண்மை இயங்குமோ? வெல்லுமோ' என்று கரைந்தான்; விம்மினான்; கண்ணீர் மல்கினான்; கை கூப்பித் தொழுதான். வீர வேந்தனுக்குத் தன் விழிகளில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்ற நினைவு கூட இல்லை. செயலற்றுச் சோர்வுற்றுக் கிடந்தான். அவன் திருவிழிகள் சிறிதே மொட்டவிழ்ந்த தாமரை இதழ்களைப் போல் இருந்தன. ஆம், அவன் கனவு உலகத்தில் ஆழ்ந்துவிட்டான். அவ்வேளையில் அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பருளக் கோயிற்கு ஏற்றும் விளக்காகிய மலைமகள் மகன் அரசனின் அகக் கண்கட்குக் காட்சி அளித்தான். அறுமுக வேளின் திருவாயினின்றும் அமுதம் போன்ற மொழிகளைக் கேட்டான் நல்லியக்கோடன். 'அதோ! அங்கிருக்கும் கேணியில் இதோ என் கையிலிருக்கும் வேலின் கூரிய முனை போன்று வெள்ளிய மலர் ஒன்று கண் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறதல்லவா? அத் திருமலரை எடுத்து உன் கூர்வேலில் சூட்டிக் கொண்டு மாற்றாரைக் கலக்கப் புறப்படு; வெற்றி பெறுவாய்; வாழ்க நின் கொற்றம்!' - இதுவே முருகவேளின் பேச்சு. சரேலென விழித்தான் நல்லியக்கோடன். முருகன் திருவடிகளை வணங்க நினைத்தான். ஆனால் அவன் அகக்கண்களுக்குக் காட்சியளித்த தெய்வம் புறக்கண்கட்குப் புலனாகவில்லை. 'என்ன விந்தை! எந்தையே முருகா! உன் கருணையன்றோ இது!' என்று எண்ணி இறைவன் கருணையில் சிந்தையைப் பதித்தவனாய் எஞ்சிய இரவுப் பொழுதைக் கழித்தான். பொழுது புலர்ந்தது.

குமரவேள் சுட்டிக்காட்டிய அழகிய கேணியை நோக்கி வேலும் கையுமாய் விரைந்து சென்றான் நல்லியக்கோடன். செங்கதிரோன் வானவெளியில் புறப்படுவதற்கு முன்பே நீராடினான். பைஞ்சுனையில் தோன்றிய பரமனை - முருகனை - நினைந்து வழிபட்டான். தன் கண் எதிரே புன்முறுவலுடன் நின்ற வெள்ளிய மலரைப் பக்தியோடு கொய்தான். பணிவோடு தன் வேலில் சூட்டிக் கொண்டான். பாசறை நோக்கித் திரும்பினான். தன் வீரப் படைகளுக்கு வேண்டும் ஆணைகள் பிறப்பித்தான்; எழுந்தது போர்! முழங்கியது முரசு! நல்லியக்கோடன் களம்நோக்கிச் சீறினான். அவன் சீற்றத்துக்கு ஆற்றாது உளைந்தது ஒன்னார் படை. எதிர்பாரா வகையில் மிகக் குறைந்த நேரத்தில் வெற்றி கண்டான் வேந்தன் நல்லியக்கோடன். அவன் வீரப் படைகள் செய்த ஆரவாரம் முருகனுக்கெழுந்த பூசையோ என்று எண்ணும்படி இருந்தது. வாகை சூடிய நல்லியக்கோடனின் வாழ்க்கையில் நடைபெற்ற இந்த விந்தை நிகழ்ச்சியைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார் சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் நல்லூர் நத்தத்தனார்.

'திறல்வே னுதியிற்பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர் எய்தி'

-சிறுபாணாற்றுப்படை, 172-173

என்பது அப்புலவர் பெருமானின் வாக்கு. வேலவன் அருளால் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சி நடைபெற்ற இடம் வேலூர் ஆதலின் அவ்வூர்க்கு அப்பெயர் அமைந்தது என்றும் கருதுவர்.[12]

வேலூரின் இயற்கைவளத்தைச் சிறுபாணாற்றுப் படை சித்திரித்துக் காட்டும் அழகு நினைந்து நினைந்து இன்புறற்குரியது. 'வேலூர் முல்லையும் குறிஞ்சியும் சேர்ந்திருக்கும் நிலப்பகுதியில் உள்ளது. அங்கே அவரை பவழம் போல வளர்ந்திருக்கும். மயிலின் கழுத்தைப் போன்ற நிறத்துடன் காயா மலர்கள் பூத்திருக்கும். மகளிரின் கைவிரல் போல் காந்தள் காட்சி அளிக்கும். நெடிய வழிகளிலெல்லாம் இந்திர கோபம் இயற்கை அழகுடன் பொலிவுற்றுத் திகழும். காணுமிடங்களிலெல்லாம் முல்லைக்கொடிகள் கவினுறக் காட்சி தரும். இத்தகைய வேலூரை, வெடிப்புகளில் துள்ளிக் குதிக்கும் அருவிகள் கொண்ட வேலூர் மலையில் வெங்கதிரோன் மறையும் அந்திக்காலத்தே அடையலாம். அங்குள்ள எயிற்றியர் நீயும் உனது குடும்பமும் உண்டு பசி தீரும் படி புளிங்கறி இடப்பட்ட சோற்றைக் காட்டுப் பசுவின் சூட்டிறைச்சியுடன் வழங்குவர்.'

பைந்தனை அவரை பவழங் கோப்பவுங்
கருநனைக் காயாக் கணமயில் அவிழவுங்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்

கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கால் அருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வேல் நுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர் எய்தின்
உறுவெயிற் குலைஇய உருப்பவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொ
டாமான் சூட்டி மைவரப் பெறுகுவிர்

- சிறுபாணாற்றுப்படை, 164-177

இவ்வாறு சிறிய யாழினை ஏந்திய கலைஞனை நல்லியக் கோடன்பால் ஆற்றுப்படுத்தும் முகமாக வென்றி மிக்க வேலூரின் விழுப்புகழை எடுத்து ஓதியுள்ளார் வாய்மை நெறிதவறா சங்கப் புலவர். ❈

சங்ககாலம் முதல் புகழுடன் விளங்கிய வேலூர் இன்றும் வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலை சிறந்த திருநகர்களுள் ஒன்றாய் விளங்கும் பெரும் பேற்றினைப் பெற்றுள்ளது. வேலூரிலுள்ள கோட்டையும் கோவிலும் இன்றும் அப்பெருநகரின் அழகிற்கு இன்றியமையா அணிகலன்களாயுள்ளன. தமிழகத்தின் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஒரு சில கோட்டைகளுள் ஒன்றாய் - ஒப்புயர்வற்றதாய் - அது விளங்குகிறது என்றால் மிகையாகாது. பலம் வாய்ந்த அக்கோட்டை சுமார் 600 ஆண்டுகட்கு முன் கிருஷ்ணாநதிக் கரையிலுள்ள பத்ராசலத்து பொம்மி ரெட்டியார் என்ற ஒருவரால் கட்டப்பட்டதாம். பத்ராசலத்தார் சதுரவடிவாய் மிக்கசதுரப்பாட்டுடன் கட்டிய அக்கோட்டை பல நூற்றாண்டுகட்குப் பின் வந்த பிரிட்டிஷ் நிபுணர்களும்[13] கண்டு வியக்கும் அளவிற்குச் சிறந்த இராணுவக் கட்டடக் கலை அமைப்பைப் பெற்று விளங்குகிறது என்றால் அக்கோட்டையைக் கட்டிய ரெட்டியாரின் போர்க்கலை அறிவை என்னென்று போற்றுவது? போர் நிகழும் காலங்களில் மாற்றாரை வெற்றியடையாவண்ணம் மருட்டித் தடுத்துத் துரத்தியடிப்பதற்குத் தகுதியான உறுப்புக்கள் அனைத்தும் பொருந்திவிளங்கும் கோட்டைக் கட்டிடக் கலைக்குத் தென்னிந்தியாவில் இக்கோட்டையே சிறந்த எடுத்துக் காட்டாகும். இக்கோட்டையின் வெளிப்புறச் சுவர்கள் யாவும் சுண்ணக் கூட்டின்றி ஒன்றோடொன்று ஒழுங்காகப் பொருந்திய கருங்கற்களால் உருவாக்கப்பெற்றுள்ள திறம் குறிக்கத்தக்கது. கோட்டையைக் கட்டிய பொம்மி ரெட்டியார் கோட்டையின் வடகிழக்குப் பாகத்தில் அழகியதோர் கோவிலையும் நிறுவினார். இக்கோட்டையின் சிற்ப வேலைப்பாடுகள் மதுரையைக் காட்டிலும்

மாண்புடையன என்பது சில அறிஞர்களின் கருத்து. வேலூர்க் கோவிலும் கோட்டையும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்டன என்பது குடியாத்தம் தாலுக்காவில் உள்ள மலையன்பட்டி தேவாலயக் கல்வெட்டு ஒன்றால் விளங்குகிறது. வேலூர் கோவிலின் வாயிலில் அமைந்த கோபுரம் சிற்ப வேலைப் பாடுகள் நிறைந்து விளங்குகின்றன. அச்சிற்ப வேலைப் பாடுகளின் நடுவில் வேலூர்க் கோட்டையைக் கட்டிய பொம்மி ரெட்டியின் உருவச்சிலை ஒன்றும் பெருமிதத்துடன் காட்சி அளிக்கிறது.

தென்னாட்டுச் சிற்பக் கலைத்திறன் ஒளிர அமைந்த வேலூர்க் கோவிலில் உள்ள கல்யாண மண்டபம் சிறந்த சிற்பக்கலைக் களஞ்சியமாக விளங்குகிறது. இங்குள்ள தூண்களில் சிறந்த கைவன்மையுடன் ஒற்றைக் கற்களில் உருவாக்கப் பெற்றுள்ள அழகிய உருவச் சிலைகளையும், சுற்றியுள்ள தூண்களில் வீரம் ததும்ப நின்று கொண்டிருக்கும் குதிரைவீரர்களின் அழகையும், இன்னும் பல தூண்களில் எழுந்து விளங்கும் கலைச் செல்வங்களையும், மண்டபத்தின் கூரையில் தலைகீழாகத் தொங்கிய வண்ணம் தாமரைப்பூவின் மலர்ந்த இதழ்களைத் தம் கூரிய நகங்களிலும் அலகுகளிலும் சில கிளிகள் பற்றிக் கொண்டிருப்பதாக அமைந்துள்ள இணையில்லாச் சிற்பத் திறத்தினையும், பிற அற்புதக் காதற் சிற்பக் காட்சிகளையும் கண்டு அதிசயிக்காதவர் இல்லை.[14]

சிற்பக் கலையில் சிறந்து விளங்கும் வேலூர்க் கோவிலின் கல்யாண மண்டபத்தை, நிலத்தை அகழ்ந்து கற்பரசி சீதையைத் தொல்லிலங்கை இராவணன் தூக்கிச் சென்றது போல் அப்படியே தோண்டி எடுத்துக் கொண்டு போய் இங்கிலாந்தில் பிரைட்டன் என்னும் இடத்தில் வைக்கச் சுமார் நானூறு ஆண்டுகட்கு முன் கிழக்கிந்திய கம்பெனியார் பெருமுயற்சி செய்தார்கள். ஆனால் தமிழ் அன்னையும் தமிழ் மக்களும் செய்த நல்வினையின் பயனாகக் 'கல்யாண மண்டபத்தை' - வேலூரின் விழியை - பிடுங்கி எடுத்துக் கொண்டு போக ஏற்பாடு செய்திருந்த புகைக்கப்பல் இந்தியாவிற்கு வரும் வழியில் கடலில் மூழ்கிவிட்டது. அதனால் கும்பினிக் கூட்டத்தின் சதித் திட்டமும் பாழாயிற்று. வேலூர்க் கல்யாண மண்டபமும் தான் பிறந்த மண்ணிலேயே - ஈன்ற அன்னையின் கைகளிலேயே - எக்களிப்புடன் வாழும் பேற்றையும் பெற்றது. வேலூரை இன்று போய்ப் பார்த்து வருபவர்கள்,

கோட்டை இருக்குது; மலையிருக்குது;
படைகள் இல்லாத தடபுடல்!
கோவில் இருக்குது; சிலையிருக்குது;
தேவனில்லாத தரிசனம்!
போலீஸ் படைகள் தடபுடல் பழகுது;
அதிகாரமில்லாத அதிசயம்!

என்று பாடுவது இயற்கை. ஆனால் நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்புகூட வேலூர்க் கோட்டைக்கு இருந்த வீரப் பெருமையை நினைந்தால் நம்மை அறியாமல் நம் நெஞ்சில் பெரியதொரு வியப்புணர்ச்சி பெருக்கெடுக்கும்.

அரசனில்லா அரண்மனையாய், மூர்த்தி இல்லாக் கோவிலாய், அதிகாரமில்லாப் போலீசாய் இன்று காட்சி அளிக்கும் வேலூரில் இற்றைக்குச் சரியாக ஒன்றரை நூற்றாண்டுகட்கு முன் உலகமே கண்டு திகில் கொள்ளும் படியான வீரப்புரட்சி ஒன்று நடைபெற்றது. ஆம், பத்ராசலத்து ரெட்டியார் கட்டிய கோட்டை ஏகாதிபத்திய வெறியர்களுக்குக் கல்லறையாக மாறியது. சுதந்தர வீரர்களின் பாசறையாகவும் காட்சியளித்தது. உண்மையில் சொன்னால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சட்டரீதியாகப் பாரதத்தில் வேரூன்றியபின் நடைபெற்ற முதல் பெரும் புரட்சி - அதுவும் ராணுவப் புரட்சி - வேலூரில்தான். வீரசாவர்க்கரே தம் நூலில் மறைவின்றிக் குறிப்பிட்டிருப்பது போல் வட இந்தியாவில் நடந்த சிப்பாய்க் கலகத்திற்கு வழிகோலிய முதல் பெரும் புரட்சி தமிழகத்தின் வட எல்லையாகிய வேலூரில்தான் நடந்தது. ஏகாதிபத்திய வெறியர்கள் பாரத நாட்டில் - இன்பத் தமிழகத்தில் காலூன்ற முயன்ற நேரத்திலும் அவர்களை எதிர்த்துப் போராடி வீர சொர்க்கத்தை விரும்பியதும் தமிழினம்தான். ஆயுத பலத்தால் ஆங்கிலக் கொடுங்கோலர்களின் ஆட்சி நாட்டில் வேரூன்றிய நேரத்திலும் அவ்வேரை வெட்டிச்சாய்க்க முதன் முதலாக நடந்த இந்திய ராணுவப் புரட்சியும் வேலூரில்தான். இவ்வாறு தமிழகத்தின் தெற்கெல்லையும் வடக்கெல்லையும் சேர்ந்து பறங்கி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்ற முதல் இந்திய தேசிய இனம் தமிழினம்தான் என்று நினைக்கும்போது 'பெருமை கொள்வாய் தமிழா' என்று பூரிப்புடன் பாட நமக்குத் தோன்றுகிறதல்லவா?

■

# 4. நாமார்க்கும் குடியல்லோம்! நரகத்தில் இடர்ப்படோம்!

இலக்கியப் புகழும் வரலாற்றுச் சிறப்பும் ஒருங்கே பொருந்திய வேலூர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அஞ்சத்தக்க எரிமலையாய் உருக்கொண்டது என உருவகித்துச் சொன்னால் உண்மைக்குச் சிறிதும் மாறாகாது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தலை நிமிர்ந்து நின்ற திண்மை வாய்ந்த கோட்டைகள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்ட கொடுமையையும், இத்தனை நாளும் வரி வசூல் செய்து நாடாள்வதில் கண்ணும் கருத்துமாய் இருந்த குறுநில மன்னர்கள் அனைவரும் வெள்ளைப் படையின் வேகத்திற்கு ஆற்றாது சாய்ந்துபோன அவலத்தையும் நாம் இந்நூலின் இரண்டாவது இயலிலேயே பார்த்திருக்கிறோம். தங்கள் மாவட்டத்திற்கு நேர்ந்த பெருங்கேடுகளை நினைந்து நினைந்து உள்ளம் குமுறிய வட ஆர்க்காடு மக்களின் நெஞ்சம் கொல்லன் உலைக்களம்போல் கொதித்துக் கொண்டு இருந்தது. வட ஆர்க்காடு கலெக்டர் துரை கும்பினி அரசாங்கத்திற்கு 'எங்கள் மாவட்டத்தில் அமைதியை நிலைநாட்டி விட்டோம்' என்று எக்களிப்புடன் கடிதம் எழுதி ஓராண்டும் சில திங்களுமே ஆகியிருந்தன. அதற்குள் மக்களின் ஆவேசமாகிய எரிமலை வெடித்தெழுந்தது.[15] வட எல்லைத் தமிழர்களின் சுதந்திர ஆவேசத்திற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு என்பதை நாம் அறிவோம். மேலும் சிலவற்றை ஈண்டுக் காண்பது இன்றியமையாதது. சீரங்கப்பட்டணம் வீழ்ச்சியுற்றதும் வெள்ளைக் கொடுங்கோலர்கள் திப்புவின் 12 ஆண்பிள்ளைகளையும் 6 பெண்மக்களையும் வேலூர்க்குக் கொண்டு வந்து பலத்த காவலுக்கிடையே கோட்டையில் குடி வைத்தனர். வேலூர்க் கோட்டையையும் அதைத் சுற்றியிருந்த ஆழ்ந்த அகழிகளையும் கடந்து சென்று திப்புவின் பிள்ளைகள் நாட்டிலே புரட்சி விளைப்பது இயலாத காரியம் என்று எண்ணியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். திப்புவின் பிள்ளைகளில் இருவருக்கு ஏற்கனவே திருமணமாகி இருந்தது. எனவே அவர்கள் தங்கள் குடும்பத்தோடும் ஏவலாளிகளுடனும் வேலூர்க் கோட்டையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவே கோட்டைக்குள் நூற்றுக்கு மேற்பட்ட ஆட்கள் இருந்தனர். 'நாட்டில் எங்கும் அசைக்க முடியாத வகையில் அரசாங்கத்தை

நிலைநாட்டி விட்டோம்' என்ற இறுமாப்புக் கொண்டிருந்த கும்பினி ஆட்சி திப்பு சுல்தான் மக்களுக்கும் அவர்கள் சிப்பந்திகட்கும் தங்குவதற்குத் தனியிடம் அமைத்துத் தந்தனர். அவர்களுடைய தனிமையும் அமைதியும் கேடுறாதவகையில் ஆவன புரிந்தனர். எப்போதோ ஒரு சமயம் வெள்ளைத் தளபதி ஒருவன் அவர்கள் இருப்பிடத்தைப் பார்வையிட வருவான். அவ்வளவுதான். மற்றக் காலங்களில் எல்லாம் திப்புவின் குடும்பத்திற்குப் பரிபூரண சுதந்திரம்தான். இந்தச் சமயத்தில் வேலூர்க் கோட்டையைக் கும்பினி அரசாங்கம் தன் படையின் பல்வேறு பிரிவுகளின் மூலம் மிக வன்மையாகப் பாதுகாத்து வந்தது. 1500-க்கு மேற்பட்ட இந்தியர்களும் 379 ஐரோப்பியர்களும் படைக்காவல் புரிந்தனர். இந்நிலையில் வேலூர்க் கோட்டையிலிருந்த தமிழ் வீரர்களின் இதயத்தில் ஈட்டி எடுத்துக் குத்துவது போன்ற கொடிய செயல்களைக் கும்பினி அரசாங்கம் செய்ய ஆரம்பித்தது. சர். ஜான் கிராடக் என்பவன் அப்பொழுது சென்னைப் பட்டாளத்தின் தளகர்த்தனாய் இருந்தான். அவன் சற்றும் முன்பின் எண்ணிப் பார்க்காமல் இந்திய வீரர்களின் உள்ளத்தைப் புண்படுத்தும் உத்தரவுகளை வெளியிட்டான். போர்க் குணத்தாலும் பொருளாதாரச் சிக்கல்களாலும் தமிழர்களில் பலர் பட்டாளத்தில் சேர்ந்திருந்தனர். என்றாலும் கூழாட்பட்டு அவர்கள் தங்கள் சுயமரியாதையை விற்றுவிட ஒரு நாளும் தயாராக இல்லை. தலைமுறை தலைமுறையாகத் தங்கள் குருதியில் ஊறிவந்த பண்பாடுகளை இழிவுபடுத்த அவர்கள் மனம் இணங்கவில்லை. ஆனால் அவர்களை அவ்வாறு செய்யுமாறு கட்டாயப்படுத்தியது நாட்டு மக்களின் மனப்பாங்கைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாத கும்பினி அரசாங்கம். அவசியமற்ற அறிவற்ற ஆணைகளை எல்லாம் பிறப்பித்தனர் வெள்ளை அதிகாரிகள். ஆணவம் படைத்த ஆங்கிலத் தளபதிகள் இந்துக்கள் ராணுவப் பயிற்சிக்கு வரும்போது தங்கள் காதுகளில் கடுக்கன்களை அணியக்கூடாது என்றும் நெற்றியிலே திருநீறோ, திருமண்ணோ இடக்கூடாது என்றும் கட்டளையிட்டனர். முகம்மதியர்களோ தங்கள் தாடிகளை முற்றிலும் களைந்துவிட வேண்டும் என்றும் மீசையையும் கூட ஒரு குறிப்பிட்ட வகையில் குறிப்பிட்ட அளவிற்கே கத்தரித்துக் கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக 1805-ஆம் ஆண்டு நவம்பர் 14-ஆம் தேதி சென்னையிலிருந்த ராணுவப் பெருந்தலைவன் **(Commander-in-Chief)** இந்தியச் சிப்பாய்கள் தங்கள் தலையிலே ஒருவகையான புது தலைப்பாகையை அணிந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை இட்டான். இத்துடன் அவர்கள் புது வகைக் காலுறைகளும் **(Socks)**, தோலால் செய்யப்பட்ட குல்லாய்ச் செண்டுகளும் **(Leather cockades)** இறகுச் செண்டுகளும் **(Plumes)** அணிய வேண்டும் என்று ஆணை பிறப்பித்தான். மேலும் மார்பிலே சிலுவையைப் போன்ற ஒரு பொருளை **(Turnscrew)**த் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டும் என்றும்[16] வற்புறுத்தினர்.

இத்தகைய தேவையற்ற திடீர் உத்தரவுகளால் இந்தியச் சிப்பாய்களிடையே பெரும் மனக்கசப்பு ஏற்பட்டது. நாளடைவில் சுயமரியாதையையும் சொந்த மதத்தையும் இழந்து கிறிஸ்தவர்களாக மாறவேண்டி நேரிடும் என்ற கலக்கமும் தமிழ் வீரர்கட்கு உண்டாயிற்று. அதனால் அவர்கள் அடைந்த மனத்துயர் மிக அதிகம். அந்நிலையில் 1806-ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் புதுத் தொப்பிகள் வேலூர்ப் பட்டாளத்திற்கு அனுப்பப்பட்டன. அவற்றை உடனே அணிந்து கொள்ளும்படியும் சிப்பாய்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். இச்சமயத்தில் வேலூரிலிருந்த ஒரு படைப்பிரிவினர்[17] 'அரசாங்கத்தின் புதிய உத்தரவுகள் எங்கள் மனத்தைப் பெரிதும் புண்படுத்திவிட்டன. எங்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தொப்பிகள் கிழக்கிந்தியப் பாண்டு வாத்தியக்காரர்களின் குல்லாய்கள் போல் இருக்கின்றன. எனவே நாங்கள் அவற்றை நிச்சயமாக அணிய முடியாது' என்று உறுதியாக மறுத்துவிட்டனர். அச்சமயத்தில் வேலூரில் படைத்தலைவர் களாயிருந்த லெப்டினட் கர்னல் டார்லியும் **(Lieutenant Colonel Darly)**, கர்னல் பான்கோர்ட் **(Colonel Fancourt)**ம் தம் கீழிருந்த சிப்பாய்களின் உள்ளக் கருத்தை மேலிடத்திற்கு எடுத்துச் சொல்லிப் பொருளற்ற புதிய கட்டளைகளை உடனடியாக மாற்றும்படி மிகவும் மன்றாடினர். ஆனால் மேலிடத்தார்க்கு அவர்கள் செய்து கொண்ட வேண்டுகோள் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல் ஆயிற்று. வேலூர்ப் படைத் தலைவர்களின் வேண்டுகோளைச் சென்னையிலிருந்த கம்பெனி வர்க்கம் ஏற்க மறுத்தது மட்டுமன்றி எவராலும் சகிக்க முடியாத அடாத செயல் ஒன்றையும் புரிந்தது. நேர்மையாகவும் சுதந்தர உணர்ச்சியோடும் ஒழுங்குக்கு உட்பட்டுத் தங்கள் உள்ளக்கிடக்கையை வெளியிட்ட வேலூர்ச் சிப்பாய்களின் முக்கிய தலைவர்களைக் கைது செய்து சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நடக்க இருக்கும் வழக்கில் தோன்றும்படி அனுப்ப வேண்டும் என்று கட்டளைப் பிறப்பித்தது. சொந்த புத்தியின்றித் தன் சிப்பந்திகளின் அறிவற்ற யோசனையை ஆராய்ச்சியின்றி நம்பிய வண்ணம் சென்னையிலிருந்த ராணுவப் பெருந் தளபதியிடமிருந்து இவ்வுத்தரவு கிடைத்ததும் வேலூரிலிருந்த இரு கர்னல்களும் பேராபத்தை விளைவிக்கக் கூடிய பொருளற்ற இக்கட்டளையை மாற்ற எவ்வளவோ முயன்றனர். ஆயினும் ஆணவம் மிக்க ஆங்கிலத் தலைவன் தன் மதிகெட்ட செயலைத் திருத்திக் கொள்ள மனங்கொள்ளவில்லை. 'சொந்த புத்தியுமின்றி சொல் புத்தியுங்கேளாது' இவ்வாறு அந்த ஆங்கிலத் தலைவன் முழுமூடனாக இருக்கப் பேருதவி புரிந்தவன் தமிழகத்தின் தெற்கெல்லையில் அடாத செயல்கள் பல புரிந்து நாட்டு மக்களின் வயிற்றில் எல்லாம் அக்கினியை அள்ளிக் கொட்டிய கர்னல் அக்கினியூ **(Colonel Agnew)** துரையே என்பது அறிஞர் வில்சன் ஆராய்ந்து எழுதிய 'சென்னை ராணுவ வரலாற்'றால் தெளிவாகிறது.

கொடிய நெஞ்சம் படைத்த கர்னல் அக்கினியூ இச்சந்தர்ப்பத்தில் சென்னை ராணுவப் பெருந்தலைவன் சார்பில் எழுதியுள்ள இரு கடிதங்களை இந்நூலின் பிற்சேர்க்கையில்[18] காணலாம். 'போட்ட உத்தரவை மாற்ற முடியாது; மீண்டும் எண்ணிப் பார்க்க எதுவும் இல்லை. கம்பெனியின் கட்டளைக்குப் பணிய மறுத்த வேலூர்ச் சிப்பாய்களைப் பழிவாங்க அரசாங்கம் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது' என்ற போக்கில் சொல்லுக்குச் சொல் தன் கல்நெஞ்சைக் காட்டக் கூடிய அவன் கடிதங்களை இன்று நாம் படித்தாலும் வேலூர்ப் புரட்சி ஏன் விளைந்தது என்பது எளிதில் புலனாகும்.

உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த எண்ணங்களை ஒளியாமல் வெளியிட்ட வேலூர் வீரர்கள் கைக்குட்டைகளால் (handkerchiefs) முக்காடிடப்பட்டுச் சென்னைக் கோட்டைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரையும் கொலைகாரக் கும்பினி அரசாங்கம் 'விசாரணை' செய்தது. ஆம். அந்த வழக்கு நாடகத்தை நடத்தி முடிந்ததும் 'நீதி'யின் பெயராலும் தீர்ப்பு வழங்கியது கும்பினி ஆட்சி. அதன்படி ஒரு முஸ்லீமுக்கும் ஒரு இந்துவுக்கும் முறையே தொள்ளாயிரம் தொள்ளாயிரம் சாட்டையடிகள் கொடுக்கப்பட்டன. சாட்டையடிகளால் பிழிந்து சக்கையாக்கப்பட்ட அவர்களை உத்தியோகத்தினின்றும் உதறி எறிய வேண்டும் என்று கும்பினி அரசாங்கம் உத்தரவிட்டது. எஞ்சிய பத்தொன்பது பேர்கட்கு ஐந்நூறு சாட்டையடிகள் கொடுத்துத் தாராளமாக மன்னிப்பும் வழங்கியது வெள்ளை அரசாங்கம். இவ்வாறு தனி நபர்களைத் தண்டித்ததோடு திருப்தி கொள்ளாத பறங்கிப் பேய்கள் தங்கள் கருத்தைத் திடமாக எடுத்துரைத்த வேலூர்ப் பட்டாளத்தின் பிரிவையே கலைத்தெறிந்து அதனிடத்தில் புதிய படைப்பிரிவு ஒன்றை நியமித்தது. இந்திய ராணுவத்திடையே அச்சமூட்டும் பொருட்டு கும்பினி அரசாங்கம் தான் புரிந்த இவ்வநீதிகளைச் சற்றும் வெட்கமின்றி அறிக்கை வாயிலாகப் பகிரங்கப் படுத்தவும் துணிந்தது.

இவ்வாறெல்லாம் வெள்ளை வெறியர்கள் விலங்குமனங் கொண்டு புரிந்த காட்டுமிராண்டிச் செயல்களை இன்று நினைத்தாலும் நம் நெஞ்சம் 'பகீர்' என்கிறது. ஆனால் அதே நேரத்தில் இந்திய சுதந்தரத்திற்காக முதன் முதலாகத் தோளோடு தோள் நின்று தொள்ளாயிரம் சாட்டையடிபட்ட அவ்விரு இந்து - முஸ்லீம் வீரர்களை - அவர்களின் தேசீய ஒற்றுமை உணர்ச்சியை - உன்னும்போதெல்லாம் நம் உள்ளம் உருகுகிறது. மதத்தால் இந்துவானாலும் முஸ்லீமானாலும் தாய் நாட்டின் மானங்காக்கும் போராட்டத்தில் அனைவரும் ஒருதாய் வயிற்று மக்களே என்ற உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, விலங்கு மனம் படைத்த வெள்ளை வெறியர்களின் கொடுங்கோன்மைக்கு இரையான அந்த ஊர்பேர் தெரியாத வீரப் பெருமக்களின் தியாக உணர்ச்சியைத் தமிழகம் என்றென்றும் நன்றி உணர்ச்சியோடு நினைவிற் கொண்டு போற்றுமாக!

வேலூரிலிருந்த ஒரு படைப்பிரிவை ஒழித்துக் கட்டியதன் மூலம் தமிழ்ச் சிப்பாய்களிடையே அமைதியை நிலைநாட்டியதாக மனப்பால் குடித்தது கும்பினி அரசாங்கம். ஆனால் உண்மையில் கும்பினி அரசாங்கத்தின் கொடுஞ் செயல்கள் மேலும் வேலூர்ச் சிப்பாய்கள் உள்ளத்தில் ஆத்திரத் தீயை மூட்டவும் ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டவுமே பெரிதும் பயன்பட்டன. ஏற்கனவே புண்பட்டிருந்த சிப்பாய்கள் இதயத்தில் காய்ச்சிய இரும்புக் கம்பியை நுழைத்ததுபோல் வெள்ளை அதிகார வர்க்கம் புரிந்த அறிவற்ற செயல்கள் வெள்ளையர்களாலேயே கண்டிக்கப்பட்டது.[19]

சென்னை ராணுவப் பெருந்தலைவன் 1806-ஆம் ஆண்டு மே மாதம் நந்திய துர்க்கத்திற்கு அங்குள்ள படையினைப் பார்வையிடச் சென்றிருந்தான். அங்கே முகாமடித்திருந்த அவனுக்கு அப்போதைய ராணுவ தணிக்கையாளர் **(Military Auditor General)** தலைவராகிய கர்னல் ஜேம்ஸ் ப்ரண்ட்டன் **(Lieutenant Colonel James Brunton)** என்பவர் ஒரு அவசரக் கடிதம் எழுதினார். அறிவாலும் ஆற்றலாலும் அனுபவத்தாலும் எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்ட அத்துரைமகன் தான் எழுதிய கடிதத்தில் 'புதுவகையான தலைப்பாகைகளை அணியும்படி இந்தியச் சிப்பாய்களை வற்புறுத்துவதன் மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள மனக்கசப்பு வரம்புமீறிச் செல்கிறது. பட்டாளம் முழுவதுமே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. எனவே தயவு செய்து தேவையற்ற அந்த உத்தரவை உடனே மாற்றுங்கள்' என்று வேண்டிக் கொண்டிருந்தார். கர்னல் ப்ரண்ட்டன் கடிதத்தை - அது தந்த எச்சரிக்கையை - அவ்வளவு சுலபமாக ராணுவப் பெருந்தலைவனால் புறக்கணிக்க முடியவில்லை. எனவே, ஜூன் மாதம் 29-ஆம் தேதி அவன் கர்னல் ப்ரண்ட்டன் கடிதத்தோடு தான் எழுதிய ஒரு குறிப்பையும் வைத்து இரண்டையும் சென்னை அரசாங்கத்தின் உத்தரவுக்காக அனுப்பி வைத்தான். கர்னல் ப்ரண்ட்டன் கடிதத்தைப் பற்றித் தான் எழுதியிருந்த குறிப்பில் கர்னல் அக்கினியூ, மேஜர் பியர்ஸ் **(Major Pierce)** ஆகிய இருவரின் யோசனையின் மேலேயே புதிய குல்லாய்களைத் தரும் ஏற்பாடு நிச்சயமாகியது என்றும், இந்தச் சிறு விஷயத்தில் அனுபவம் வாய்ந்த அவ்விரு அதிகாரிகளின் அறிவுரையை ஏற்பதைத் தவிர தனக்கு வேறு வழி இல்லாது போயிற்றென்றும், ஆனால் தற்போது பட்டாளம் முழுவதிலும் ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பைப் பார்க்கும்பொழுதும், சிப்பாய்கள் அனைவரும் வெகு சீக்கிரத்தில் கிறிஸ்தவர்களாக மாற்றப்படுவார்கள் என்று அஞ்சுவதைக் காணும் பொழுதும், தம் கருத்திலே பெருமாற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்நிலை பிரிட்டிஷ் படைகளின் மத்தியில் ஏற்பட்டிருந்தால் தான் கொஞ்சமும் கவலைப்பட்டிருக்க வேண்டியிருந்திருக்காது என்றும், ஆனால் இந்தியச் சிப்பாய்களிடையயே அதுவும் அவர்களுடைய சமய உணர்ச்சியைப் புண்படுத்தும் வகையில்

ஏற்பட்டிருக்கும் இக்குழப்பத்தை எண்ணும் போது தான் சென்னை அரசாங்கத்தின் அறிவுரையை நாடித்தீர வேண்டியுள்ளது என்றும் எழுதியிருந்தான். ராணுவப் பெருந் தலைவனின் தடுமாற்றம் மிக்க நீண்ட கடிதத்தைக் கண்டது கும்பினி அரசாங்கம். அதன் புத்தி அவன் புத்தியைக் காட்டிலும் அதிகமாகத் தடுமாறியது என்றாலும் ஏதோ ஒரு வகையில் தன் முடிவை ஜூலை மாதம் 4-ஆம் தேதி ராணுவப் பெருந்தலைவனுக்கு ஒரு கடிதம் வாயிலாகத் தெரிவித்தது. அக்கடிதத்தில் 'உடை மாற்றத்தால் ராணுவத்திடையே ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பும், தங்கள் சமய உணர்ச்சிக்குக் கும்பினி அரசாங்கம் ஊறுசெய்வதாக இந்தியச் சிப்பாய்கள் கருதுவதும் உண்மையே என்றால் நாம் நம் புதிய உத்தரவைச் சிறிதும் தயக்கமின்றி மாற்றிவிட வேண்டும். ஆனால் இறுதியாக வேலூரில் நடந்த ஒரு பரிசீலனையின் வாயிலாக நமக்குச் சில முடிவுகள் கிடைத்துள்ளன. அதன்படி உடைமாற்றத்தைப் பற்றி எவ்விதமான எதிர்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே ஏதோ ஒரு காரணம் பற்றி எழும் கூக்குரலுக்காக நாம் பணிந்து போவதைக் கூடிய வரையில் தவிர்ப்பதே நல்லது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி கடிதத்தின் வாயிலாகக் கும்பினி அரசாங்கத்திற்கிருந்த தடுமாற்ற நிலை நன்கு புலனாகும். இக்கடிதத்தில் கும்பினி அரசாங்கம் குறிப்பிட்டுள்ள 'இறுதிப் பரிசீலனை'யைப் பற்றி அறிஞர் வில்சன் தம் நூலில் ஒரு பயனுடைய குறிப்பைத் தந்துள்ளார். அக்குறிப்பில் கூறப்படும் செய்தி பின்வருமாறு: 'மே மாதம் 14-ஆம் தேதி வேலூரில் கர்னல் மக்கீரஸ் **(Lieutenant-colonel Mckerras)**சும், கர்னல் போர்பஸ் **(Lieutenant Forbes)**சும், கர்னல் மாரியட் **(Lieutenant-colonel Marriott)**டும் சேர்ந்து விசாரணை நடத்தினர். அதன் முழு விபரங்களையும் நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ராணுவப் பெருந் தலைவனின் குறிப்பு ஒன்றினால் மேற்படி அதிகாரிகளால் விசாரணையின் போது புதுவகைக் குல்லாய்களுக்கு எதிர்ப்பாக எவ்வித சாட்சியங்களும் பதிவு செய்யப்படவில்லை என்றும், ஆனால் அந்த இரு அதிகாரிகளும் பழைய குல்லாய்களை மாற்றாமலிருப்பதே நல்லது என்று தங்கள் கருத்தை தெரிவித்திருந்ததாகவும் அறிய முடிகிறது.

'சற்றுமுன் நாம் கண்டவாறு சென்னை அரசாங்கம் ராணுவப் பெருந் தலைவனுக்குக் கண்டிப்பான உத்தரவை அனுப்பிய கையோடு இன்னொரு சுற்றறிக்கையையும் அனுப்பி வைத்தது. அச்சுற்றறிக்கையில் 'இந்திய சிப்பாய்களைக் கிறிஸ்தவர்களாக்கும் நோக்கம் அரசாங்கத்திற்குச் சிறிதும் இல்லை' என்று வற்புறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இச் சுற்றறிக்கையும் கூட ராணுவப் பெருந்தலைவனால் தேவை இல்லை என்று கருதப்பட்டதால் வேலூர்ச் சிப்பாய்களுக்குக் காட்டப்படாமலே வைக்கப்பட்டு விட்டது'.

வேலூரில் நடைபெற்ற புரட்சிக்குப் பின் நந்தியா துர்கத்திலிருந்து ராணுவப் பெருந் தலைவன் எழுதிய கடிதத்தைப் பற்றிய விவாதம் மீண்டும் கிளம்பியது. அப்போது கவர்னராயிருந்த வில்லியம் பெண்டிங் பிரபுதான் ஏன் அப்புரட்சியைத் தவிர்க்கக் கூடிய வகையில் நடந்து கொள்ள முடியவில்லை என்பதை ஒருவாறு தெளிவு படுத்தினார். அவர் தன் தெளிவுரையில் கூறிய முதல் காரணம் சிப்பாய்களுக்குப் புதுவகைத் தொப்பிகளைத் தரவேண்டும் என்று ராணுவப் பெருந்தலைவன் சென்னை அரசாங்கத்தைக் கலந்து கொள்ளாமலே முடிவு செய்து விட்டான் என்பதுதான்; இரண்டாவதாக அவர் காட்டிய காரணம் வேலூரிருந்த ஒரு படைப்பிரிவினர் **(Regiment)** புதுவகைக் குல்லாய்களை அணிந்து கொள்ள முடியாது என்று மறுத்ததும் அவர்கள் பணிவின்மையை முறித்துக் கட்டப்போவதாக ராணுவப் பெருந்தலைவன் விட்டிருந்த அறிக்கையைக் கண்ணுற்ற சென்னை அரசாங்கம் புதிய தொப்பிகளை மாற்ற வேண்டும் என்று கட்டளையிடுமானால் அது ராணுவத்தின் ஒழுங்கைப் பெரிதும் பாதிக்கும் என்று அஞ்சிற்று என்பது; மூன்றாவதாக அவர் காட்டிய முக்கிய காரணம் வேலூரில் புதிய உத்தரவுகளினால் ஏற்பட்டிருந்த பெருங் கொந்தளிப்பை ராணுவத் தளபதிகள் சென்னை அரசாங்கம் புரிந்து கொள்ளும்படிச் செய்யவில்லை என்பது; இறுதியாகக் கவர்னர்பிரபு காட்டிய காரணம் கர்னல் ப்ரண்ட்டன் எச்சரிக்கைக்குச் சென்னை அரசாங்கம் அதிக மதிப்பு வைக்கவில்லை. ஏனென்றால் அத்தளபதி பெரிதும் நோய்வாய்ப்பட்டு உடல்வலிமை இழந்திருந்தமையால் ஏற்பட்ட மனத்தளர்ச்சியே அவருடைய அச்சத்திற்குக் காரணமாயிருக்கலாமென்று அரசாங்கம் கருதியதுதான் என்பது.

இதுவரை நாம் கண்ட வரலாற்றுச் செய்திகளின் வாயிலாக வேலூரில் ஏற்பட்ட பெருங் கொந்தளிப்பிற்குக் காரணம் அறிவற்ற வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்களின் நெறியற்ற செயலே என்ற உண்மை தெளிவாவது திண்ணம்.

இனி வேலூரில் மேற்கொண்டு நடைபெற்ற மிக முக்கியமான நிகழ்ச்சிகளில் நம் கருத்தைச் செலுத்துவோம். அறநெறி பிறழாது தங்கள் கருத்தை வெளியிட்ட தம் தலைவர்களுக்கு நேர்ந்த கதியினை அறிந்த வேலூர்ச் சிப்பாய்கள் உள்ளம் எரிமலையாயிற்று. புகைந்து கொண்டிருக்கும் எரிமலை தீ கக்க ஆரம்பிக்குமுன் சில அறிகுறிகளைக் காட்டுமல்லவா? அத்தகைய அடையாளங்கள் வேலூர்க் கோட்டையில் மிக விரைவாகத் தோன்றலாயின. அறிஞர் வில்சன் தம் நூலில் கூறுவதுபோல் வேலூர்ப் படைப்பிரிவினர்க்குக் கும்பினி அரசாங்கம் புரிந்த கொடுமைகள் சிப்பாய்களின் உள்ளத்தில் பழிவாங்கும் உணர்ச்சியை முன்னினும் அதிகப்படுத்தியது. சிப்பாய்களும் மனிதர்கள் தானே! அவர்கள் உடம்பில்

ஓடியதும் இந்திய இரத்தம்தானே! எனவே அவர்கள் இதயத்தில் சூழ்நிலை காரணமாக உறங்கிக் கிடந்த சுதந்தர உணர்ச்சி அடக்குமுறை என்ற சூடுபட்டு 'சரேல்' என விழித்தெழுந்தது. தூங்கும் புலியும் சிங்கமும் விழித்தால் - சீறினால் என்ன ஆகும் என்பதை அறியாதார் யார்? வேலூர்க் கோட்டையில் நள்ளிரவு நேரங்களில் இரகசியக் கூட்டங்கள் நடைபெற்றன. மறைமுகமாகவும் புரட்சி வேலை செய்ய மன்றங்கள் நிறுவப்பட்டன. நள்ளிரவு தோறும் நடைபெற்ற கூட்டங்களில் சிப்பாய்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்று புரட்சி புரியவேண்டுமென்று ஆவேசம் மிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. 'வெள்ளை ஆதிக்கத்தை வேரறுப்போம்; அடக்குமுறையை எதிர்த்தே தீருவோம்; நாமார்க்கும் குடியல்லோம்; நரகத்தில் இடர்ப்படோம்' என்ற மந்திரங்கள் இடைவிடாமல் ஓதப்பட்டன. இக்கூட்டங்கட்கெல்லாம் மறைந்த மாவீரன் திப்புவின் மக்களும் வேலூர்ப் பட்டாளத்தின் சுதேசி அதிகாரிகளில் பெரும்பாலோரும் வந்திருந்து 'ஓங்குக புரட்சி; அடைக வெற்றி' என்று ஆசி கூறிவந்தனர். இந்நிகழ்ச்சிகள் யாவும் ஆரம்பத்தில் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. என்றாலும் நாளடைவில் ஊர்வாயை மூடுவது ஒல்லாததாகிவிட்டது. வேலூரிலும் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் 'எரிமலை வெடிக்கப் போகுது ஐயோ! வெள்ளைச் சீமான்கள் குடல் வேகப்போகுது' என்று காதோடு காதாகப் பேசிக் கொண்டனர். நெஞ்சத் துணிச்சல் படைத்த ஒரு இஸ்லாமிய பக்கிரி மட்டும் வேலூர் வீதிகளிலே ஒய்யாரமாக உலாவி ஒளிவுமறைவின்றி புரட்சிக்குரல் கொடுத்துவந்தான். 'ஆங்கில ஆட்சியே! உன் அந்திமக் காலம் நெருங்கிவிட்டது!' என்று ஓயாது அவன் முழங்கினான். இரவு நேரங்களில் ஏராளமான பல்லக்குகள் திரையிட்டு மூடப்பட்ட கோலத்துடன் கோட்டைக்குள் நுழைந்தன. 'உள்ளே என்ன?' என்று அதட்டிய கோட்டைக் காவலாளிகட்கு 'திப்புவின் மகனுக்குரிய மகளிர்' என்று பதில் இறுத்தனர் அப்பல்லக்குகளைத் தாங்கி வந்தவர்கள். ஆனால் உண்மையில் பல்லக்குகளுக்குள் அயில்விழி மாதர் இல்லை. அஞ்சத்தக்க போர்க்கருவிகளே நிறைந்திருந்தன. இதைப்பற்றி எல்லாம் கேள்வியுற்ற வெள்ளைத் துரைமார்களோ 'கிடக்கிறார்கள் பைத்தியக்காரர்கள்; நாம் ஆடுவோம் கூத்து; குடிப்போம் மதுபானங்களை; உறங்குவோம் குறட்டைவிட்டு' என்று திமிர்வாதம் பேசினர். உருவாகிவரும் புரட்சியைப் பற்றி வேலூரிலிருந்த வெள்ளைத் தளபதிகள் ஒரு சிறிதும் கவலை கொள்ளாத காரணத்தால் புதிய படைகள் எதுவும் கோட்டையைப் பாதுகாக்க வரவழைக்கப்படவில்லை. பாதுகாப்பிலிருந்த மைசூர் இளவரசர்கள் குடும்பத்தினர்க்கும் வீரத் தமிழ்ச் சிப்பாய்களுக்கும் இடையே நிலவிவந்த நெருக்கமான உறவைப்பற்றிப் பன்முறை கேள்வியுற்றும் வெள்ளைப் பட்டாளம் பயமின்றி இருந்தது தமிழ் வீரர்கட்கு எல்லையில்லா

மகிழ்ச்சியைத் தந்தது. மேலும் மேலும் அவர்கள் தங்கள் புரட்சி வேலைகளில் கண்ணும் கருத்துமாயிருக்கத் தூண்டு கோலிட்டது.

1806-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் தேதி முஸ்தாபா என்ற ஒரு துரோகி தன் பட்டாளத் தலைவனாகிய கர்னல் போர்பசிடம் சென்று வெள்ளையர் அத்தனைப் பேரையும் வெட்டிப் புதைக்க நடந்துவரும் புரட்சித் திட்டங்களைப் பற்றி உளவு கூறினான். ஆனால் நல்ல வேளையாக அப்பேடியின் பேச்சில் நம்பிக்கை கொள்ளவில்லை அப்பறங்கித்துரை. 'இந்திய சிப்பாய்களுக்கு இவ்வளவு தைரியமும் உண்டோ' என்று எண்ணினான். அதோடு நில்லாமல் அந்த மேதாவி இந்திய அதிகாரிகளைக் கொண்டே இந்நிகழ்ச்சிகள் பற்றி விசாரணை செய்யக் கட்டளை இட்டான். குற்றத்தை விசாரித்த இந்திய அதிகாரிகள் தான் புரட்சி வேலைகளின் தலைவர்கள். எனவே வழக்கு விசாரணையை அவர்கள் மிகத் திறமையாகவும் உற்சாகத்தோடும் நடத்தினர். முடிவிலே இந்திய சிப்பாய்கள் அனைவரும் அப்பழுக்கில்லா இராஜ விசுவாசிகள்; கும்பினியின் செல்வங்கள்; எந்த வகைக் குல்லாய்களையும் எப்போதும் அணியத் தயாராக இருக்கிறார்கள்; மாசற்ற வீரர்களைப் பற்றி மதிகெட்டுப் பேசிய முஸ்தாபாவுக்குச் சிலகாலமாகவே மூளைக்கோளாறு ஏற்பட்டு இருக்கிறது. எனவே அவன் நல்வாழ்வைக் கருதியும் ஊரின் அமைதியை முன்னிட்டும் சில காலமேனும் முஸ்தாபாவைப் பைத்தியக்காரர்களின் மருத்துவசாலையில் பத்திரமாகக் காவலில் வைக்க வேண்டுமென்றும் ஒருமனதாகத் தீர்ப்புக் கூறினர். விசுவாசமே வடிவெடுத்த (!) இந்த அதிகாரிகளின் பேச்சைக் கேட்ட தளபதி போர்பஸ் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான். அந்தோ! முஸ்தாபா சிகிச்சைக்கு அனுப்பப்பட்டான். முஸ்தாபாவின் கதி இதுவாகப் புரட்சி வீரர்களைப் பற்றிக் கோள்மூட்டிய இன்னொரு வெள்ளை மாது எக்கதிக்கு ஆளானாள் என்பதையும் தெரிந்து கொள்வது மிக்க சுவையுடையது.

ஒரு நாள் கர்னல் பான்கோர்ட் அலுவலகத்திற்குள் அவசர அவசரமாக நுழைந்தாள் ஒரு வெள்ளைக்காரி. 'என்ன சேதி' என்றான் படைத்தலைவன். நடக்கின்ற அநியாயங்கள் இவை இவை என்று பட்டியலை விரித்தாள் பறங்கித் துரை மகள். மேலும் காலஞ் சென்ற தன் கணவனுக்குச் சேர வேண்டிய பரிசுத்தொகை பற்றியும் கேட்டாள். அவளை முறைத்து முறைத்துப் பார்த்தான் வெள்ளைத் தளபதி. 'உங்கள் கணவன் எங்கே?' என்றான். 'நான் ஒரு விதவை' என்றாள் அவள். 'சே! சே! வெளியேறு' என்றான் துரை. இவ்வாறெல்லாம் நடைபெற்றது ஒரு வகையில் தமிழ் வீரர்களின் நல்லூழே என்று மேற்போக்காக ஆராயும்போது தோன்றினும் ஆழ்ந்து சிந்திக்கும்போது இத்தகு நிகழ்ச்சிகளால்தான் வேலூர் வீரர்கள் தயாரித்த புரட்சித் திட்டத்திற்கும் தடைகள் நேர்ந்தன என்றும் கருத இடமுண்டு.[20]

ஜூலை மாதம் 9-ஆம் தேதி வெள்ளைச் சிப்பாய்களும் தளபதிகளும் இந்திய சிப்பாய்களின் மத்தியிலேயே உறங்கப்போனார்கள். அன்று காலையிலேயே அவர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தும் தைரியமாக உறங்கச் சென்றது அனைவருக்கும் வியப்பை அளித்தது. மேலும் இந்நாளில் தான் வெள்ளை அதிகாரி ஒருவன் இந்திய சிப்பாய் ஒருவனால் பகிரங்கமாகப் பயிற்சி புரியுமிடத்தில் அவமானப்படுத்தப்பட்டிருந்தான். இன்னும் புரட்சி பொங்கி எழப்போகிறது என்பதற்கான அறிகுறிகள் பலவும் வேலூர்க் கோட்டையில் காணப்பட்டன.

இந்நிலையில் ஜூலை மாதம் 10-ஆம் தேதி ஒரு ராணுவ நாள் கொண்டாடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முதல்நாள் இரவே சிப்பாய்கள் அனைவரும் கோட்டைக்குள்ளேயே உறங்குவதற்கு அனுமதிக்கப்படுவது வழக்கம். அப்பொழுதுதான் அவர்கள் அதிகாலையிலேயே எழுந்து பயிற்சிக்குத் தயாராக முடியும். வேலூரிலிருந்த பட்டாளத்தின் ஒரு பிரிவில் மிக முக்கியமான புரட்சிக்காரர்கள் இருந்தார்கள். அவர்களே அன்றைய தினம் இரவு கோட்டையின் காவலாளிகளாகவும் நியமிக்கப்பட்டார்கள். முக்கிய பொறுப்பிலிருந்த ஒரு முகம்மதிய அதிகாரி கோட்டையின் உள்ளே இரவுக் காவலுக்காகத் தன் நம்பிக்கைக்குரிய ஆட்களில் எத்தனை பேரை நியமிக்க முடியுமோ அத்தனை பேரையும் நியமித்தான். இன்னும் புரட்சி வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பலரும் பல்வேறு சாக்குகளைச் சொல்லிக் கொண்டு கோட்டைக்குள்ளே இரவு நேரத்தைக் கழிக்க முடிவு செய்தனர். இவர்களுள் பெரும்பாலோர் திருநெல்வேலியில் ஆறு ஆண்டுகட்குமுன் பெரும் புரட்சி விளைத்த பாளையங்காரர்கள் மரபினரே என்று ஆராய்ந்து கூறுகிறார் வரலாற்று அறிஞராகிய வில்சன்.

ஜூலை மாதம் 9-ஆம் தேதி இரவு நேரத்தை வேலூர்க் கோட்டைக்குள்ளேயே கழிப்பதில் வெற்றி கண்ட வீரச் சிப்பாய்களுள் தலைசிறந்தவன் ஜமேதார் ஷேக் காசிம் என்பவனே. கோட்டையின் தலைவாயிலில் அன்றிரவு கண்ணுறங்காது பாதுகாக்கக் கடமைப்பட்ட ஒரு வெள்ளை அதிகாரி 'ஏதும் விளையாது' என்று எண்ணி, ஏதோ சில சொந்தக் காரணங்கட்காக வீட்டிற்குச் சென்று ஓய்வு கொள்ள விரும்பினான். அவன் கருத்தறிந்த ஜமேதார் ஷேக் காசிம் மெல்ல அவனை அணுகி நயமாகவும் பணிவாகவும் பேசித் தானே அவன் கடமையை அன்றிரவு முழுவதும் கண்ணும் கருத்துமாகச் செய்வதாக ஏற்றுக் கொண்டான். வேலூர்ப் புரட்சிக்குக் காரணமாயிருந்த சிப்பாய்களுள் மிக முக்கியமானவனாகிய ஜமேதார் ஷேக் காசிம் இவ்வளவு திறமையாகக் காரியத்தைச் சாதித்ததன் விளைவு மறுநாள் மூண்ட வேலூர்ப் புரட்சிக்குப் பெருந்துணையாக இருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

1806-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ஆம் தேதி இரவு. எங்கும் ஒரே அமைதி. ஆம். கல்லறை அமைதி. வானவெளியில் எண்ணற்ற விண்மீன்கள் கண்களைச் சிமிட்டிச் சிமிட்டி ஒன்றோடொன்று ரகசியம் பேசிய வண்ணம் இருந்தன. ஆம். ஒருவேளை தமிழகத்தின் வடவெல்லையில் - பாலாற்றங் கரையில் - நடைபெற இருக்கும் இரத்தப் புரட்சியைப் பற்றித்தான் அவை சாடை காட்டிப் பேசிக் கொண்டனவோ? இயற்கை அன்னை இட்ட முத்துப் பந்தர்போல் விளங்கிய அம்மோகனக் காட்சியினை அண்ணாந்து பார்த்தவண்ணம் படுத்துக் கிடந்த தமிழ் வீரர்கள் உள்ளம் பொருமினர்; பெருமூச்சு எறிந்தனர்; பற்களை மாவாய்ப் பொடி செய்வதுபோல் நற நறவெனக் கடித்துக் கொண்டனர்! 'நீலவானே! கோலமதியே! ... .....! உன்மேல் ஆணை! நீ போட்டிருக்கும் முத்துப்பந்தரைக் கலைக்க நாளைக் காலையில் வெங்கதிரோன் வருமுன் எங்கள் தாயகத்தைக் கொள்ளையடிக்க - எங்கள் தமிழகத்தின் சுயமரியாதையைச் சூறையாட - முகாம் அடித்திருக்கும் இந்த வெள்ளைப் பரங்கியர்கள் மார்பைக் கிழித்து நாங்கள் பலிபோடுவோம். அதன் பின்னரே நீராடுவோம்; உணவு உண்போம்' என்று அவர்கள் உள்ளம் குமுறியது. பட படவென்று துடித்துக் கொண்டிருந்த அவர்கள் இதயம்,

நாலுதிசையும் ஸ்வாதந்தர்ய நாதம் எழுகவே!
நரகமொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே!

என்று மௌனமாக - ஆனால் உறுதியாக - முழங்கிக் கொண்டிருந்தது.

■

# 5. நமனை அஞ்சோம்! நல்லுயிரை ஈவோம்!

1806-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி விடியற்காலம்; வெள்ளி முளைத்து வியாழன் உறங்கிய நேரம்; கனன்று கொண்டிருந்த புரட்சி எரிமலை குபீரென வெடித்துத் தீக்குழம்பை வாரி வீசத் தொடங்கியது. இந்திய அதிகாரிகளின் ஆணையின் பேரில் இந்திய ராணுவத்தின் ஒரு பகுதி பயிற்சிக் களத்தில் அணிவகுத்து நின்றது. குறிபார்த்துச் சுடும் பயிற்சிக்கு ரவைகளை வழங்குவதுபோல் துப்பாக்கிக் குண்டுகள் வழங்கப்பட்டன. இந்த ஏற்பாடுகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும்பொழுதே வெள்ளையர்களால் சூழப்பட்டிருந்த கோட்டையின் தலைவாயிலை நோக்கி நம் படையின் ஒரு பகுதி அரவமின்றி அமைதியாக நடந்து சென்றது. ஏற்கனவே அந்த இடத்தில் துப்பாக்கியும் கையுமாகக் காவல் காத்துக் கொண்டிருந்த சுதேசி சிப்பாய்கள் இப்படையினரின் வரவை எதிர் நோக்கி இருந்தனர். இரு படைகளும் ஒன்று சேர்ந்தன. 'டுமீல்', 'டுமீல்' என்று துப்பாக்கிகள் வெடித்தன. குழுமியிருந்த பறங்கிக் கூட்டத்தின் குலை நடுங்கியது; அவர்கள் ஆவி பஞ்சாய்ப் பறந்து பரமபத மடைந்தது. ஆம். புரட்சி எரிமலையின் முதல் வீச்சு இவ்வாறு தொடங்கியது; கோட்டை எங்கும் ஒரே கொந்தளிப்பு; சிப்பாய்ப் புரட்சியின் முதல் முழக்கத்தைக் கேட்டவுடன் இன்னொரு படை சுதேசி அதிகாரிகளின் ஆணையைத் தலை மேல் தாங்கி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வெள்ளைப் பட்டாளத்தின் மீது குண்டு மழையைப் பொழிந்து தள்ளியது. அடியுண்ட நாகங்களைப் போல் பறங்கித் துரைகள் சுருண்டு சுருண்டு நாற்காலிகளுக்கும் தூண்களுக்கும் பின்னே ஓடி ஓடி ஒளிந்த காட்சி விடுதலை வீரர்கட்கு நகைச் சுவையை ஊட்டியது; சுதந்தர சிப்பாய்களின் இந்த முதல் வேட்டை முடிவதற்குள் தளவாடங்கள் இருக்கும் பேரறை உட்பட கோட்டையின் முக்கியமான இடங்களை எல்லாம் புரட்சி வீரர்கள் கைப்பற்றிவிட்டனர். கோயிலும் கூட அவர்கள் கையில் சிக்கியது.

விடியற்காலம்; மணி மூன்றிருக்கும்; சுதேசிச் சிப்பாய்கள் போர்க்கோலம் பூண்டுள்ளனர் என்பதை அறிந்த லெப்டினட் ஈவிங் **(Lieutenant and Adjutant Eving)**, காப்டன் மாக்லாசலன் **(Captain Maclachlan)**, தளபதிகள் மிட்சல், பேபி, ஜெனோர் **(Lieutenants Mitchell, Baby and Jenour)**, சார்ஜன்ட் பிராடி **(Serjeant Brady)**, லெப்டினன்ட் கட்க்ளிப் **(Lieutenant Cutcliffe)**, ஜோன்ஸ் **(Surgeon Jones)** ஆகிய எட்டுத் தளபதிகளும் ஈவிங் இல்லத்தில் 'மந்திராலோசனை'க்காகக் கூடினர். இவ்வாறு இவர்கள்

கூடியிருக்கும் செய்தியைச் சுதந்தர உள்ளம் கொண்ட சிப்பாய்கள் அறிந்தனர். கால் மணி நேரத்தில் ஈவிங் வீடு முற்றுகையிடப்பட்டது; பெரும்படையொன்றால் பலமாகத் தாக்கப்பட்டது. எட்டு வெள்ளைத் தளபதிகளும் தங்கள் இன்னுயிரைக் காக்க கை ஓயுமட்டும் விடுதலை வீரர்களைச் சுட்டுத் தீர்த்தனர். அப்படியும் விடுதலை வீரர்களின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்கப் பறங்கித் துரைகளால் முடியவில்லை. எனவே அடுத்திருந்த ஜோன்ஸ் என்பவனின் பலம் பொருந்திய வீட்டில் ஒளிந்து கொள்ள முடிவு செய்தனர். இந்நிலையில் காப்டன் சார்ஜன்ட் பிராடி என்பவன் கோட்டை நிலையை ஊடுருவிப் பார்த்து வரும்படி அனுப்பப்பட்டான். அவன் ஒளிந்து ஒளிந்து பார்த்து வந்து தன் வெள்ளைத் தோழர்களை நடுங்க வைக்கும் செய்திகள் பலவற்றைப் பதட்டத்தோடு கூறினான். 'வெள்ளையர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டு விட்டனர். கோட்டை முழுதும் புரட்சி வீரர்கள் கையில்; கொடிக்கம்பத்தில் நம் நாட்டுக் கொடி - யூனியன் ஜாக் இல்லை. இந்தியக் கொடி - மைசூர் அரண்மனைக் கொடி - ஆடிப்பறக்கிறது; காணுமிடங்களில் எல்லாம் நம்மவரின் பிணக்குவியல்-' இவ்வாறு ஓலமிட்டான் பிராடி.

புரட்சி தொடங்கி ஐந்து மணி வரையில் எந்த வெள்ளையனுக்கும் வெளியே தலைநீட்டத் துணிச்சல் இல்லை. காலை 7 மணிக்கு லெப்டினன்ட் மிட்சல் என்பவன் மட்டும் வேலூர்க் கோட்டையிலிருந்த படைத் தலைவர்களுள் ஒருவனாகி பாரோ **(Captain Barrow)** வீட்டிற்குச் செல்ல முன் வந்தான். புதிய வீட்டில் அடைக்கலம் புகுந்த துரைமார்கள் அத்தனை பேரும் திருதிருவென விழித்துக் கொண்டு திகிலுடன் காலத்தைப் போக்கினர். அடைபட்டுக் கிடந்த அவர்கள் வீட்டைச் சுற்றிலும் இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்த வெடி முழக்கங்கள் அவர்களைக் குற்றுயிராக்கிக் கொண்டிருந்தன. காலை 8 மணி ஆயிற்று. துரைமார்கள் ஒளிந்திருந்த இல்லம் பின்புறவாயில் வழியாய்ப் புரட்சி வீரர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டது. இரு தரப்பிலும் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இதில் விடுதலை வீரர்களின் கையே ஓங்கி நின்றது. 'இனி மேலும் பிடிவாதம் பிடித்தால் நாம் நாசமாக வேண்டியதுதான்' என்று கருதி வீட்டின் தலைவாயில் வழியாக வெள்ளைத் தளபதிகள் அனைவரும் ஓடினர். ஓடியவர்கள் வெள்ளைச் சிப்பாய்கள் தங்கியிருக்கும் பகுதி **(Barracks)**க்குள் போய் மறைந்தனர். ஓடும் துரைகளைச் சுதந்திர வீரர்கள் விடாது பின்பற்றிச் சுட்டனர். வெள்ளைத் துரைகள் பாதுகாப்பிற்காகச் சென்ற பகுதியில் குழப்பமே மிகுந்து காணப்பட்டது. இரு பெரிய பீரங்கிகள் வாயிலாக வெள்ளைப் பட்டாளம் தங்கியிருந்த இடம் இடைவிடாது துளைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இந்நிலையில்தான் லெப்டினன்ட் மிட்சலைக் கண்டனர் அவன் தோழர்கள். வெள்ளை அதிகாரிகளும் சிப்பாய்களும் ஒளிந்து கொண்டிருந்த பகுதி **(Bar-**

racks) நம் சிப்பாய்களின் கடுமையான தாக்குதலுக்கு இரையாகியது. 'எப்படியாவது உயிர் தப்ப வேண்டும்' என்று ஆத்திரம் கொண்ட வெள்ளைப்பட்டாளம் காப்டன் மாக்லாச்சலன் தலைமையில் ஒன்று திரண்டு வீட்டுச் சன்னல்கள் வழியாகச் சாடி எதிரில் இருந்த பறையர் சேரியை நோக்கி ஓட ஆரம்பித்தது. அருகே இருந்த கொத்தளங்களைக் (Ramparts) கைப்பற்ற வேண்டும் என்பதே பறங்கிப் பட்டாளத்தின் திட்டம். ஆனால் வெள்ளைச் சிப்பாய்கள் அனைவரும் வெறும் கையினராய்த் தவித்தனர். காரணம் அதிகாலையில் நடைபெற்ற போராட்டத்திலேயே அவர்களிடமிருந்த குண்டுகள் எல்லாம் தீர்ந்து போயின. மேலும் கொத்தளத்தின் அடியில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த தளவாடக் கிடங்கினுள் (Magazine) புகுந்து அங்கிருந்த பொருள்கள் அனைத்தையும் நம் வீரர்கள் கைப்பற்றியிருந்தனர். இதைக்கண்ட துரைமார்கள் அடைந்த துக்கம் சொல்லி முடியாது. இஃதன்றி இதுவரை நடைபெற்ற போராட்டத்தில் கோட்டையிலிருந்த 372 பேரைக் கொண்ட ஒரு வெள்ளைப் படைப்பிரிவில் (non-commissioned) 191 பேர் கொலை செய்யப்பட்டிருந்தனர். இவற்றால் எல்லாம் பெரிதும் மனமுடைந்து போயினர் எனினும் முயற்சியைக் கைவிடக் கூடாது என்று உறுதி கொண்ட பறங்கிக் கூட்டம் நம் சிப்பாய்களின் கடுமையான தாக்குதலையும் பொருட்படுத்தாது கொத்தளச் சுவர்கள் மீது ஏறி நிற்பதில் வெற்றி கண்டது. இம்முயற்சியில் ஈடுபட்ட வெள்ளைத் தளபதிகளுள் ஒருவனாகிய காப்டன் மாக்லாச்சலனைத் தொடையில் குறிபார்த்துச் சுட்டனர் நம் வீரர்கள். படுகாயப் பட்டு வீழ்ந்த அவன் பின்னர் பறங்கிப் பட்டாளத்தைப் பொறுத்த வரையில் பயனற்றவனாகவே ஆகிவிட்டான்.

கொத்தளங்களை ஒருவாறு கைப்பற்றிய வெள்ளைப் பட்டாளம் தன்னை இரு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு நம் சிப்பாய்களைப் புடைக்க முந்தியது. ஒரு பிரிவு இந்தியச் சிப்பாய்கள் நிறைந்திருந்த ஒரு கோட்டைப் பகுதியைத் (Cavalier) தாக்குவதைக் குறியாய்க் கொண்டது. இன்னொரு பிரிவு வேலூர்க் கோட்டையின் கீழ்த்திசையிலிருந்த தலைவாயிலைக் கைப்பற்றுவதில் வெறிகொண்டு பாய்ந்தது. இக்கடு முயற்சியில் ஈடுபட்ட வெள்ளைப் பட்டாளத்தை நம் வீரர்கள் சுட்டுப் பொசுக்குவதில் போரார்வம் காட்டினர். கோட்டை வாயிலை அணுகிய படைகள் தலைவாயிற் கதவுகள் தாளிடப்பட்டுப் புரட்சி வீரர்களின் பலம் வாய்ந்த பீரங்கிகளால் பாதுகாக்கப்பட்டிருப்பதை அறிந்தனர். ஆம். சுதந்தரச் சிப்பாய்களின் நோக்கமெல்லாம் கோட்டைக்கு வெளியே இருந்து பகைவர் யாரையும் உள்ளே வர விடாமல் தடுப்பதும், கோட்டைக்குள்ளேயே இருந்த வெள்ளையரை அங்கேயே சுட்டுச் சாம்பலாக்குவதும் தானே! கோட்டைக் கதவை வெள்ளைப்பட்டாளம் நெருங்குவது கண்டு இந்தியச் சிப்பாய்கள் மிகுந்த சீற்றம் கொண்டு கடுமையாகப் போராடினர். இப்போராட்டத்தில்

ANNA CENTENARY LIBRARY
CHENNAI 600 085



பறங்கியர் பலர் உயிரிழந்தனர்; லெப்டினன்ட் மிட்சல் என்பவன் கையில் குறிபார்த்துச் சுடப்பட்டுப் பலத்த காயத்திற்கு இரையானான்.

வெள்ளைப் பட்டாளம் கோட்டையின் ஆயுத சாலையை - படைக்கலக் கொட்டிலை (**Arsenal**)த் தாக்கத் துடித்தது. ஆனால் துப்பாக்கிக் குண்டுகள் எதுவும் இன்றி வெறுங்கையாய் நின்ற வெள்ளைப் பட்டாளத்தால் ஆகும் காரியமோ அது? எனவே எப்படியாவது துப்பாக்கிக் குண்டுகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கொட்டிலைக் (**Magazine**) கைப்பற்ற முடிவு செய்தது பறங்கிப்பட்டாளம். காப்டன் பாரோ தலைமையில் வெள்ளைப் பட்டாளம் திரண்டது. பலம் வாய்ந்த புரட்சி வீரர்களின் படையை எதிர்த்து மீறிக்கொண்டு வெடிமருந்து இருக்கும் படைவீடு நோக்கிப் பாய்ந்தது அந்நியப் பட்டாளம். இச்சமயத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் காப்டன் பாரோ என்பவன் சிப்பாய்களால் உயிர்நிலையில் குறிபார்த்துச் சுடப்பட்டுக் கொல்லப்பட்டான். இவனுக்குப் பின் வெள்ளைப் பட்டாளத்தை நடத்திச் செல்ல எஞ்சி இருந்த அதிகாரிகள் ஜோன்ஸ், டீன் (**Surgeon Dean**) என்பவர்களே. இவர்கள் இருவர் முயற்சியால் கோட்டையின் புறஅரணும் (**Bastion**) கொத்தளத்தின் ஒரு பகுதியும் (**Cavalier**) பிடிபட்டன. ஆனால் பறங்கிப் பட்டாளத்தில் பலர் உயிரிழந்தனர்.

இனி கோட்டைக்குள் இருந்த களஞ்சியத்தைப் (**Granary**) பிடிப்பதில் அந்நிய சேனை தன் ஆவேசத்தைக் காட்டியது. இந்தியச் சிப்பாய்களின் கடுமையான தாக்குதலைச் சமாளித்துக் கொண்டு ஒருவாறு வெள்ளைப் பட்டாளம் களஞ்சிய வாயிலைத் தன்னதாக்கியது.

களஞ்சிய வாயிலைக் கைப்பற்றிய வேகத்திலும் களிப்பிலும் வெள்ளைப் பட்டாளம் கொடிமரத்தை (**Flag Staff**)க் கைப்பற்ற முந்தியது. ஆனால் கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்த சிப்பாய்கள் கொடிமரத்தில் பறந்து கொண்டிருந்த தங்கள் கொடியை - இந்தியக் கொடியை - திப்பு சுல்தானின் பிள்ளை வாயிலாக மைசூர் அரண்மனையிலிருந்து வெளிவந்த கொடியை - சிவப்புத் துணியில் பச்சைக் கோடுகளிட்டு நடுவே செங்கதிரோன் திகழ்ந்த சீரிய கொடியை - இறக்கச் சிறிதும் இணங்குவதாக இல்லை. ஆங்கிலப் பட்டாளத்தின் மீது இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கிகள் அனல் மழை பொழிந்தன. அதன் வெம்மைக்கு ஆற்றாது வெள்ளைப்படை பின்வாங்கியது. ஒரு வெள்ளையன் உயிர் துறந்தான். கொடியைக் கைப்பற்ற முடியாத அவமானத்தால் முகம் சிறுத்துப்போன சீமைப் பட்டாளம் காலங்கடந்து போவதற்கு முன்னே 'மருந்துக் கிடங்கை (**Magazine**)யாவது கைப்பற்ற வேண்டும்' என விரும்பி அத்திக்கு நோக்கி அம்புபோல் விரைந்தது. ஆனால் 'மருந்துக் கிடங்கில்' வெள்ளைப் பட்டாளம் கண்ட காட்சி அவர்கள் அடிவயிற்றைக் கலக்கியது. மருந்துக் கிடங்கு முழுவதும் ஏற்கனவே நம்

வீரர்களால் கொள்ளை கொள்ளப்பட்டிருந்தது. இதை அறிந்த வெள்ளைப்பட்டாளம் ஆத்திரம் கொண்டு இந்தியச் சிப்பாய்கள் தங்கியிருந்த இடத்தைத் தாக்கி எறியத் துடிதுடித்தது. ஆனால் தம் வலியையும் இந்திய வீரர்களின் வலிமையையும் சீர் தூக்கிப் பார்த்தது சீமைச்சேனை. 'இந்தியச் சிப்பாய்களைத் தாக்குவதானால் இனி வெளியே இருந்து வரும் உதவி பெற்றே தாக்க முடியும். இந்நிலையில் தாக்கினால் நாம் அழிவது நிச்சயம்' என்று தெளிவு கொண்டது. 'பழையபடி கோட்டையின் தலைவாயிலைக் காத்தலே போதும்' என்று திரும்பியது. கோட்டை வாயிலுக்குத் திரும்பும் வழியில் மீண்டும் பறங்கிப் பட்டாளத்தின் கண்கள் கொடி மரத்தின் மீது பட்டன. அதன் ஆத்திரமும் மான உணர்ச்சியும் அளவுகடந்து பொங்கியது. மாக்மனஸ் **(Serjeant Macmanus)**, பிலிப் **(Philip)** என்ற இரு வெள்ளையர்கள் இந்தியக் கொடியை இறக்கத் துணிந்தனர். நம் வீரர்கள் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆனால், எவ்வாறோ அவ்விரு வெள்ளையர்களும் தங்கள் முயற்சியில் வெற்றி கண்டனர். இவ்விருவர்கட்கும் பின்னர் பெரும் பரிசுகள் தரப்பட்டன. இந்தியக் கொடியை இறக்குவதில் வெற்றி கண்ட பிரிட்டிஷ் படைகள் காலை முதல் தங்கள் வர்க்கம் கண்ட 'இழவுகட்கு' எல்லாம் ஏதோ ஒருவகை ஆறுதல் கிடைத்ததாகக் கருதியது. அங்கிருந்து கொண்டு ஆர்க்காட்டிலிருந்து உதவிக்குப் பறங்கிப் பட்டாளம் எப்போது வருமோ - நமக்கு உயிர்ப்பிச்சை கொடுக்குமோ - என்று ஏங்கிய வண்ணம் இருந்தது.

வேலூர்க் கோட்டையில் கடந்த 8 மணி நேரங்களில் நடந்த புரட்சிச் செயல்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள அவ்வமயம் கோட்டையிலிருந்த மைசூர் இளவரசர்களின் மேற்பார்வை அதிகாரியாக இருந்த லெப்டினன்ட் கர்னல் மாரியட் **(Lieutenant Colonel Marriott)** என்பவன் தன் பெயரையே கொண்ட இன்னொரு தளபதியுடன் **(Captain Marriott)** கோட்டையில் வசித்து வந்தான். அவன் வேலூர்ப் புரட்சி முடிந்ததும் வெளியிட்ட அறிக்கையும் நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. கர்னல் மாரியட் கூறியதாவது: 'அதிகாலையில் துப்பாக்கி வெடிசத்தம் கேட்டதுமே நான் விழித்துக் கொண்டேன். சில வினாடிகளில் என் மெய்க்காப்பாளன் என்னிடம் ஓடிவந்தான். 'இந்தியச் சிப்பாய்கள் எல்லாத்திசைகளிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். பெரிய கலகம் நடக்கிறது' என்று முறையிட்டான். கீழே இறங்கிச் சென்ற நான் என் வீட்டில் அருகில் இந்தியச் சிப்பாய்களின் மனக்கசப்பிற்குப் பெரிதும் இரையாகியிருந்த லெப்டினன்ட் கோம்ப்ஸ்[20] **(Lieutenant Coombs)** அஞ்சி ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். இந்தியச் சிப்பாய்கள் அவனை விரட்டிக் கொண்டு வருவார்கள் என அறிந்ததும் அவனை என் வீட்டிற்குள் நுழைந்து பாதுகாப்பாக இருக்கும்படி கூறினேன். லெப்டினன்ட் கோம்ப்ஸ்

என் வீட்டிற்குள் நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் இந்தியச் சிப்பாய்களின் படை என் வீட்டின் வாசலில் வந்து அங்கிருந்த காவலாளிகளைப் பார்த்து 'உம்; புறப்படுங்கள். பொதுத் தொண்டில் ஈடுபடுங்கள்' என்று கட்டளை இட்டனர். ஆவேசங் கொண்ட சிப்பாய்களைக் கண்டதும் யான் மெல்ல வீட்டிற்குள் நழுவினேன். அங்குள்ள லெப்டினன்ட் கன்னிங் (**Lieutenant Gunning**) என்பவன் விழிபிதுங்கி நிற்பதைக் கண்டேன்.

பொழுது புலர்ந்தது; இந்தியச் சிப்பாய்கள் என் வீட்டை முற்றுகையிட்டனர். உள்ளே நுழைந்தனர். கீழே இருந்த அறைகளைத் தம் வசப்படுத்தினர். மாடியிலிருந்த எங்களை நோக்கித் துப்பாக்கிகளைத் திருப்பினர். அதன் விளைவாகக் காப்டன் மாரியட் படுகாயப்பட்டான். இந்நிலையில் சிப்பாய்களில் ஒரு பிரிவினர் விரைந்து சென்று லெப்டினன்ட் கோம்ப்ஸ் வீட்டிற்குத் தீ வைத்து ஆரவாரித்தனர். காலை மணி ஏழாயிற்று. கீழே இருந்தே சுட்டுக் கொண்டிருந்த சிப்பாய்கள் மாடிக்குள்ளே நுழைந்தனர். நானும் என் நண்பர்களும் அறைக்கு அறை துரத்தி அடிக்கப்பட்டோம். கடைசியாக நாங்கள் மெதுவாகப் பின்புறத்திலிருந்த படிகள் வழியாக இறங்கிவந்து ஓரிடத்தில் ஒளிந்து கொண்டோம். அவ்வாறு நாங்கள் ஒளிந்திருந்ததை அறியாத சிப்பாய்கள் 'வெள்ளைத் தளபதிகள் அனைவரும் ஓடி ஒழிந்தனர்' என நினைத்து 'நவாப், நவாப் வெளியே வருக! அச்சம் இல்லை; அச்சம் இல்லை; வெளியே வருக' என்று திப்புவின் பிள்ளைகளை நோக்கி வெறிகொண்டு கூவினர். காலை மணி எட்டுக்கெல்லாம் வெள்ளைச் சிப்பாய்கள் சிலர் வெளியே நடமாடுகிறார்கள் என்ற செய்தி எங்கட்கு எட்டிற்று. எனினும் $10^1/_2$ மணி வரையிலும் நாங்கள் வெளியே தலை காட்டத் துணியவில்லை.'

கர்னல் மாரியட் நிலை இதுவாக லெப்டினன்ட் ஈவீங், காப்டன் மாரியட், கர்னல் போர்பஸ் முதலியவர்கள் தங்கள் தோழர்களுடன் அண்மையிலிருந்த மலைமேல் அமைக்கப்பட்டிருந்த கோட்டைக்குள் (**hill fort**) சென்று பதுங்கினர்.

வேலூர்க் கோட்டையை இந்தியச் சிப்பாய்கள் பிணக்காடாய் ஆக்கிக் கொண்டிருந்த நிலைமையில் மேஜர் கோட்ஸ் (**Major Coates**) என்பவன் ஒரு காரியம் செய்தான்: அதிகாலையில் துப்பாக்கி வெடி முழக்கம் கேட்ட உடனேயே கோட்டைக்குள் நுழைய முனைந்த அவன் கோட்டைக் கதவுகள் மூடப்பட்டு உள்ளே பலத்த காவல் இருப்பதை அறிந்ததும் என்ன செய்வது என்று அறியாது திகைத்தான். இறுதியாக அவன் 'ராணுவ மூளை' வேலை செய்தது. 'கை நெறித்துப் பயனில்லை. இங்கிருந்து ஆர்க்காடு 16 மைல் தூரத்தில் தான் இருக்கிறது. அங்கே உள்ளே கண்டோன்மென்டின் காவலன் கர்னல் கில்ஸ்பீக்குச் (**Colonel Gillespie**) செய்தி அனுப்புவோம். 'வெளியிலிருந்து படைவந்தால் அன்றி வேலூர்க்கோட்டை நம்முடையதல்ல'

என்ற முடிவுக்கு வந்தான். ஒரு வெள்ளை அதிகாரியைப் பிடித்து ஆர்க்காட்டிற்கு விரட்டினான். அவன் எடுத்துச் சென்ற கடிதம் கர்னல் கில்ஸ்பீக்குக்[20-அ] காலை ஆறு மணிக்குத்தான் - வேலூர்ப் புரட்சி தொடங்கி 6 மணி நேரங்கட்குப்பின் தான்-கிடைத்தது. கடிதத்தைக் கண்ட ஆர்க்காட்டுத் தளபதியின் இரத்தம் கொதித்தது. ஒரு பெரும் படையுடன் காப்டன் யங் (**Captain Young**), லெப்டினட் ஊட்ஹவுஸ் (**Lieutenant Wood house**), கர்னல் கேன்னடி (**Colonel Kannedy**) ஆகியோருடன் வேலூர் நோக்கிக் காற்றாய்ப் பறந்தான்.

ஆர்க்காட்டிலிருந்து வந்த ஆங்கிலப்பட்டாளம் சுமார் பத்து மணிக்கு வேலூர்க் கோட்டை வாயிலை அடைந்தது. அங்கே கோட்டையின் முதல் இரு கதவுகளும் திறந்தே இருந்தன. மூன்றாவது கதவு மூடிக்கிடந்தது. வெள்ளைப் பட்டாளம் பெருமுயற்சி செய்து கோட்டைக்குள் சில வீரர்களைக் குதிக்கச் செய்து அங்கிருந்த சிப்பாய்களோடு போராடிக் கதவைத் திறக்கச் செய்தது. ஆனால் நான்காவது வாயிலிடம் பறங்கிப் பட்டாளம் வந்ததும் செயலற்று நின்றது. காரணம் அக்கதவுகள் மூடப்பட்டிருந்ததோடு உள்ளே இருந்த நம் சிப்பாய்கள் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் இருந்தனர்.

'விடுதலை வீரர்கள் தளர்ச்சி அடையாது நடத்திய இவ்விறுதிப் போராட்டத்தில் வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த மறமங்கையரும் பெரும்பங்கு கொண்டனராம். இவ்வுண்மை 'ஆர்க்காட்டு ரூபாயின் அருஞ்செயல்கள்' என்ற நூலின் ஆசிரியர் வரைந்துள்ள வாசகங்களால் புலனாகிறது. 'புரட்சிக் காலத்தில் ஆடவரும் மகளிரும் தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் இங்கும் அங்கும் திரிந்தவண்ணம் இருந்தனர். கோட்டைக்கு வெளியில் நடப்பதைப் பற்றி உளவுகளைச் சேகரித்துக் கொண்டு உள்ளே நுழைந்து தம் தோழர்களுடன் கலந்து கொண்டு இரகசியச் செய்திகளைத் தக்கவாறு உருவாக்கி அவற்றைத் தம் தலைவர்கள் பால் கொண்டு சேர்ப்பதே புரட்சியில் பங்குகொண்ட இவர்களின் முக்கிய நோக்கமாயிருந்தது. மேலும் இவர்கள் தங்கள் பணிகளை நினைந்து மகிழ்வதிலும், ஒருவருக்கொருவர் அறிவுரை கூறிக்கொள்வதிலும் புரட்சி வேலைகளைத் துரிதப்படுத்தப் புதிய வீரர்களை ஆராய்ந்து சேர்ப்பதிலும் தங்கள் காலத்தைச் செலவிட்டனர். புரட்சி உள்ளம் கொண்ட மகளிர் வழக்கத்திற்கு அதிகமான இரகசியத்துடன், மிக மெல்லிய குரலில் பேசித் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டிருந்தனர்.[21] இதுவே 'ஆர்க்காட்டு ரூபாயின் அருஞ்செயல்கள்' என்ற தலைப்பில் புனை கதைபோல் சென்னை ராணுவ வரலாற்றைக் கூறியுள்ள[22] மேஜர் கிர்லி (**Major Charles F.Kirly**) தெரிவித்துள்ள சுவைமிக்க செய்தி.

கர்னல் கில்ஸ்பீ ஆர்க்காட்டிலிருந்து பீரங்கிகள் வந்தால் ஒழியக் கோட்டையைக் கைப்பற்ற முடியாது என்று முடிவுசெய்து அதற்கு வேண்டுவன புரிந்தான். இடைவேளையில் தன் பட்டாள வீரர்கள் சோர்வுறாது இருக்கும் பொருட்டு வீரர்களோடு சேர்ந்து தானும் அரண்மேல் கிடந்த கயிறு[23] ஒன்றின் உதவி கொண்டு கோட்டையின்மேல் ஏறி நின்று கொண்டு உள்ளே இருந்தவர்களைத் துப்பாக்கிகள் கொண்டு சுடுவதில் முனைந்தான். இதற்குள் ஆர்க்காட்டிலிருந்து பீரங்கிகளுடன் பறங்கிப்பட்டாளம் வந்து சேர்ந்தது.

கர்னல் கில்ஸ்பீ அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவு இல்லை. ஆர்க்காட்டிலிருந்து வந்த கூலிப் பட்டாளத்தின் துணை கொண்டு வெள்ளைத் தளபதிகள் கோட்டைக் கதவுகளைப் பீரங்கிகளால் குறிபார்த்துப் பிளந்து எறிந்தனர். பறங்கிப்பட்டாளம் உள்ளே நுழைந்தது. கோட்டை மீதிருந்த கர்னல் கில்ஸ்பீ அவர்கள் மத்தியில் குதித்தான்; தலைமை தாங்கினான். நாலா திசைகளிலும் பாய்ந்தான்; சுட்டான்; சூறையாடினான்; கொன்றான்; கொளுத்தினான். இச்சந்தர்ப்பத்தில் பறங்கிப்பட்டாளம் கையாண்ட கொடுஞ் செயல்களை வெள்ளையர் எழுதி வைத்துள்ள வரலாற்று நூல்களே ஒளிவின்றிப் புலப்படுத்துகின்றன. 'புரட்சி வீரன் ஒருவனை அங்குலம் அங்குலமாகச் சாகடித்தனர் என்றும், கோட்டையைக் கைப்பற்றியதும் மைசூர் இளவரசர்களையும் அவர்களின் பணியாட்களையும் சித்திரவதை செய்யப் பறங்கிப் பட்டாளம் துடித்தது என்றும், ஆயினும் கர்னல் கில்ஸ்பீ பின் விளைவுகளை எண்ணிக் கொலைகள் பல நடவாது காத்தான் என்றும், எனினும் கோட்டைக்குள் இருந்த அரண்மனையில் சரண்புகுந்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட இந்தியச் சிப்பாய்கள் வெளியே இழுத்துவரப் பட்டுப் பெருஞ்சுவர் ஒன்றின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒரு ஆளும் பிழைக்கமுடியாத வகையில் சுட்டுத் தள்ளப்பட்டனர் என்றும் மேஜர் கிர்லியின் நூல் கூறுகிறது.[24]

அரை மணி நேரத்தில் மீண்டும் விழுப்புகழ் வாய்ந்த வேலூர்க்கோட்டை - எட்டுமணி நேரமும் விடுதலை வீரர்களின் பாசறையாய் விளங்கிய கோட்டை - ஆங்கில அரக்கர்கள் கையில் சிக்கியது. கோட்டையைப் பிடிப்பதற்காகக் கொள்கை வீரர்கட்கும் கொள்ளையடிக்கவந்த கூட்டத்திற்குமிடையே நடந்த வீரப் போராட்டத்தில் 800-க்கு மேற்பட்ட இந்தியச் சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்டனர். வேலூரிலும் சுற்றுப்புறங்களிலும் சுதந்தர வீரர்கள் வேட்டையாடப்பட்ட சில நாட்களில் 2222-க்கு மேற்பட்ட சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.[25] இச்சந்தர்ப்பத்தில் வேலூரிலும் திருச்சியிலும் ஒரே சமயத்தில் 600-க்கு மேற்பட்ட புரட்சி வீரர்கள் கைது செய்யப்பட்டு விலங்கும் கையுமாய் இருந்தனர் என்று 'வடஆர்க்காடு மானுவல்' கூறுகிறது.

வேலூர்க்கோட்டை இறுதியில் இவ்வளவு எளிதில் பிடிபட்டதற்குப் பல காரணங்கள் இருப்பினும் அவற்றுள் மிக முக்கியமானது கோட்டையின் முதல்

இரு வாயில்களையும் பலமாகக் காக்காமல் புரட்சி வீரர்கள் அலட்சியமாக இருந்துவிட்டதே. இல்லையேல் வேலூர்க் கோட்டையை வெள்ளையர்களால் இவ்வளவு விரைவில் கைப்பற்றியிருக்க முடியாது. இவ்வுண்மையை வெள்ளை வரலாற்று ஆசிரியர்களே மனமார ஒப்புக் கொள்கின்றனர்.[26]

இதுவரை நாம் பார்த்த வேலூர்ப் போராட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட வெள்ளையர் உயிரிழந்தனர். பதினான்கிற்கு மேற்பட்ட வெள்ளை அதிகாரிகள் சுதந்தர வீரர்களின் துப்பாக்கிக் குண்டுகட்குப் பலியாயினர். ஐந்துக்கு மேற்பட்ட வெள்ளைத் துரைகள் படுகாயப்படுத்தப்பட்டனர். அதிகாலையில் பல்லக்கில் ஏறி ஊர்சுற்றி வந்து கொண்டிருந்த மேஜர் ஆர்ம் ஸ்ட்ராங் **(Major Armstrong)** என்பவனை முதலில் ஒரு இந்துச் சிப்பாய் குத்தினான். அவனைத் தொடர்ந்து ஒரு முஸ்லீம் சிப்பாய் தன் காணிக்கையையும் செலுத்தி அவ்வெள்ளையனின் ஆவியை விண்ணுலகுக்கு அனுப்பினான். வேலூர்ப் புரட்சி வெறும் மத உணர்ச்சி காரணமாக மட்டும் எழுந்தது அல்ல - இந்து - முஸ்லீம் ஒற்றுமையின் அடிப்படையில் உருவாகியது என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சிறந்த சான்று அன்றோ? ஆயினும் என்ன? வேலூர்ச் சிப்பாய்களில் பெரும்பாலோர்க்கு இருந்த சுதந்தர உணர்ச்சிக்கு உலைவைக்கக் கோட்டைக்குள்ளேயே சில கருங்காலிகள் இருந்தனர். அதைக் காட்டிலும் கொடுமையானது வேலூர்ப் புரட்சியை அடக்க வெள்ளையர்க்கு உதவியாக ஆர்க்காட்டிலிருந்து வந்த இந்தியக் கூலிப் பட்டாளமே பேருதவி புரிந்தது. வேலூர்ச் சிப்பாய்கள் சினந்தெழுந்த நேரத்திலேயே சற்றும் தயங்காமல் தமிழகம் எங்கும் - பாரத நாடு எங்கும் - இருந்த சிப்பாய்கள் வீரவாளை உருவியிருந்தால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எப்பொழுதோ கல்லறையில் மூடப்பட்டிருக்கும். ஆனால் நாம் இந்தியச் சிப்பாய்களை நொந்து கொள்வதற்கில்லை. 'பருவத்தால் அன்றிப் பழா' என்ற பழமொழி மறுக்க முடியாத அனுபவ மொழியன்றோ? எனவே 1806-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ஆம் தேதி வேலூரில் வெடித்தெழுந்த புரட்சி தற்காலிகமாகத் தோற்றுவிட்டது. ஆம். தற்காலிக மாகத்தான். இல்லையேல் 1857-ல் பாரத நாடு முழுவதும் இந்தியச் சிப்பாய்களின் பெரும் புரட்சி ஏற்பட அது வித்திட்டிருக்குமோ? 1942-ல் நாற்பது கோடி மக்கள் புரட்சிப் பிரளயம் தோன்ற வழிகோலியிருக்குமோ? 'நமனுக்கு அஞ்சோம்; நல்லுயிரை ஈவோம்' என்று வேலூர் வீரர்கள் - தமிழ் மறவர்கள் - ஆரம்பித்த புரட்சியின் உடல் செத்திருக்கலாம். ஆனால் உயிர் ஒருநாளும் சாகவில்லை. இதற்கு இந்திய வரலாறும் விடுதலை பெற்ற பின்னும் அவ்விடுதலையைக் காக்க நம் நெஞ்சில் அணையாது எரிந்து கொண்டிருக்கும் - சுதந்தர விளக்குமே சான்று!

# 6. பலிபீடத்தில்!

வேலூரில் தோன்றிய ராணுவப்புரட்சி கொடுமையான அடக்கு முறைகளால் நசுக்கப்பட்டது. இத்தகைய புரட்சிகளின் முடிவில் வீரர்கள் அமரவாழ்வு அடைவதும் துரோகிகள் சுகவாழ்வு பெறுவதும் இயற்கை தானே! பல்வேறு நாடுகளின் சுதந்தரப் போர் பற்றிய வரலாற்றிலும் இந்தத் துயரம் நிறைந்த பகுதியை நாம் காணாதிருக்க முடியவில்லை. வேலூர்ப் புரட்சி முடிந்ததும் எத்தனையோ வெள்ளை அதிகாரிகளுக்குப் பொருளும் பதவியும் வலிந்து வழங்கப்பட்டன. கூலிப்பட்டாளத்தைச் சேர்ந்த கணக்கற்ற சிப்பாய்கட்குப் பண உதவியும் பதவி உயர்வும் அளிக்கப்பட்டன. ஆர்க்காட்டிலிருந்து பேய்போல் பறந்து வந்து வேலூர்க்கோட்டைக் கதவுகளைத் தகர்த்தெறிந்த கில்ஸ்பீக்கு இருபத்துநாலாயிரத்து ஐந்நூறு பொற்காசுகள் பரிசாக வழங்கப்பட்டன. மேலும் அவன் இராணுவப் பெருந்தலைவனால் 'இந்திய நாடு முழுவதும் கில்ஸ்பீக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது' என்று பாராட்டப்பட்டான்! சார்ஜண்ட் பிராட்லிக்கு இரண்டாயிரத்து எண்ணூறு வெண்பொற் காசுகள் பரிசளிக்கப்பட்டன. வீரச் சிப்பாய்களின் துப்பாக்கிக்கு இரையான ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி கர்னல் பான்கோர்ட்டின் மனைவிக்கு அவள் வாழ்நாள் முழுவதும் ஆண்டு தோறும் நூறு பவுன்கள் இனாம் அளிக்கப்பட்டன. அவள் ஆண் குழந்தைக்குப் பதினாறு ஆண்டுகள் ஆகும்வரையும் பெண் குழந்தைக்குப் பதினோரு வயது வரையிலும் ஆண்டுக்கு இருபத்தைந்து பவுன்கள் உதவிநிதி அளிக்கப்பட்டன. ஆர்க்காட்டிலிருந்து வந்த பரதேசிப் பட்டாளத்திற்கு ஒருமாதச் சம்பளம் இனாமாக அள்ளி வழங்கப்பட்டது. துரோகம் புரியத் துணிந்த முஸ்தாபாவுக்கு இரண்டாயிரம் பகோடாக்கள் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டன. மேலும் வாழ்நாள் முழுவதும் ஒரு சுபேதாருக்குரிய சம்பளம் பென்ஷனாகவும் அவனுக்குத் தரப்பட்டது. மேற்குறிப்பிட்ட தனி நபர்கட்கு மட்டுமேயன்றி வேலூர்ப் புரட்சியை ஒடுக்குவதில் துணை புரிந்த பல்வேறு படைப் பிரிவினர்க்கும் மொத்தமாகப் பல்வேறு வகையான சலுகைகள் காட்டப்பட்டன. இவ்வாறு துரோகிகள் பால் பொன்னும் பொருளும் பதவியும் போய்ச் சேர்ந்த நேரத்தில் வீரத் தியாகிகளைச் சாவும் புகழும் கட்டியணைத்தன. வேலூர்ப் புரட்சியில் சுதந்தர உணர்ச்சி காரணமாகப் பங்குகொண்ட மாவீரர்கட்குக் கொலைக்காரக் கும்பினிப் பட்டாளம் விதித்த கடுமையான தண்டனைகளை நினைக்கும்போது பாறை நெஞ்சும் பாகாய் உருகும். புரட்சியிலே தலைமை தாங்கிய வீரர்களை

விசாரிப்பதற்கு ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு தேசபக்தர்களைக் குற்றவாளிகள் எனப் பெயர் சூட்டிக் கைதிக் கூண்டிலே நிறுத்தி விசாரணை நாடகம் நடத்தியது. அதன் முடிவாக அவர்கள் அளித்த தீர்ப்பைக் கேட்டு எமனும் கூட நடுங்கி இருப்பான். விசாரணைக் குழுவிற்குத் தலைமை தாங்கிய கர்னல் ஹார்கோர்ட் **(Colonel Harcourt)** வேலூரிலிருந்து 1806-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ஆம் தேதி சென்னையிலிருந்த ராணுவப் பெருந்தலைவனுக்கு எழுதிய கடிதத்திலிருந்து தண்டனைகளின் முழுவிபரமும் நமக்குக் கிடைக்கின்றது.[27] விசாரணைக் குழுவின் முடிவின்படி ஆறுபேர் பேய்வாய்ப் பீரங்கிகளால் பிளந்தெறியப்பட்டனர். ஐந்துபேர் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். எட்டுபேர் தூக்கிலிட்டுச் சாகடிக்கப்பட்டனர். இரண்டுபேர் உத்தியோகத்திலிருந்து உதறி எறியப்பட்டதோடு நாடு கடத்தவும் பட்டனர். கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட வேலூர்ச் சிப்பாய்கள் அனைவருடைய ஆவியையும் கோட்டையின் மேற்குத் திசையில் வைத்தே உறிஞ்சிக் குடித்து உல்லாச நடனமாடியது பிரிட்டிஷ் பேயாட்சி. 1806-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் தேதி விடுதலை வீரர்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் கோரமான முறையில் கொலைபுரிந்த காட்சியை நேரில் பார்த்த ஒருவர் கூறிய சாட்சியத்தை வடஆர்க்காடு மானுவல் வெளியிட்டுள்ளது. அதைப் படிக்கும் போது நம் அங்கமெல்லாம் நெருப்பாகிறது. சுதந்தரச் சிங்கங்கள் கொலை செய்யப்பட்ட முறையை நேரில் கண்டவர் கூறிய விபரம்: 'வேலூர்க் கோட்டை மேல் (கடந்த பல நாட்களாய்ப் பிணக்காடாய் விளங்கியதை அனுபவித்து அறிந்திருந்த) வன்சிறைக் கழுகுகள் 'மாபெரும் கொலை நடக்கப்போகிறது; நாம் வயிறார உண்ணவிருந்து கிடைக்கப்போகிறது' என்று எண்ணி வானவெளியில் இடைவிடாது வட்டமிட்டுக் கொண்டிருந்தன. சிறகுகளைப் படபட என்று அடித்துக் கொண்டும், கோரக் குரல் எழுப்பியும் திரிந்து கொண்டிருந்த பருந்துகளின் மனம் குளிர பிரிட்டிஷ் பீரங்கிகள் சுதந்தர வீரர்களைச் சுட்டுத் தள்ளியது. குண்டுகளால் துண்டு துண்டாகப் பிய்த்தெறியப்பட்ட விடுதலை வீரர்களின் தசைகள் ஆகாயத்தில் நானா திசைகளிலும் சிதறிப் பறந்தன. நடுங்கும் தசைகள் மண்ணில் சென்று விழுவதற்கு முன் அவற்றை மேலே பறந்து கொண்டிருந்த கழுகுகள் கொத்திக் கொண்டன. பேயும் கண்டு நடுங்கத்தக்க இக்கொடிய காட்சியை அப்போது எட்டியிருந்து கண்ட மக்களும் வீரர்களும் 'ஐயோ!' என்று அலறித்துடித்து வீழ்ந்தனராம். கொடுமை! கொடுமை! நினைக்கவும் ஒண்ணா கொடுமை!

இவ்வாறு விடுதலை வீரர்களை உயிரோடு கொன்ற நேரத்தில் ஒருவித அசம்பாவிதமும் நடக்கவில்லை என்றும் பெருமைபட்டுக் கொண்டனர் வெள்ளைக் கொடுங்கோலர்கள். ஆம். கல்நெஞ்சம் படைத்த கும்பினி

அரசாங்கம் - உலக நாடுகளுக்கு எல்லாம் நாகரீகத்தை ஊட்டியதாகப் பெருமைபட்டுக் கொள்ளும் பிரிட்டிஷ் ஆட்சி - நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு சுதந்தர தாகம் கொண்ட இந்தியப் பிரஜைகளின் பால் இவ்வளவு காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டிருக்கிறதென்பதை நினைக்க நினைக்க நம் நெஞ்சம் வேகிறது. இன்று கூட இந்தியா விடுதலை பெற்றிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அண்ணல் காந்தியடிகளின் ஆத்ம சக்தியும் லட்சக்கணக்கான நம் சகோதர சகோதரிகளின் மாசுமறுவற்ற தியாகமும் உலக சூழ்நிலையுமே அல்லாது பிரிட்டிஷ் வல்லரசின் தாராள நெஞ்சமென்று எவரும் கனவில்கூடக் கருத இடமில்லை.

சுதந்தர வீரர்கள் வீர சுவர்க்கம் எய்தினர். மாபாதகர்கள் அம் மாவீரர்களின் நெஞ்சைப் பீரங்கியால் பிளந்து துண்டு துண்டாக்கினர். தமிழ்த் தாய் தன் தவப் புதல்வர்கள் உயிர் பிரியும் நேரத்தில் துடியாய்த் துடித்தது கண்டு துயர்க்கடலில் வீழ்ந்தாள். பாரதத் தாய் தன் மைந்தர்களுக்கு நேர்ந்த கதி கண்டு மனம் நடுங்கிக் கண்ணீர் உகுத்தாள். அவள் கண்ணீரும் மாவீரர்களின் மார்பிலிருந்து ஒழுகிய செந்நீரும் சேர்ந்து தொண்டை நாட்டை - தமிழகத்தின் வட எல்லையை - நிலமகளின் திருமேனியைப் புனிதமாக்கியது.

பிரிட்டிஷ் பீரங்கிகளால் இன்பத் தமிழகத்தின் இணையில்லா வீரர்களின் உடலைத்தான் துண்டு துண்டாக்க முடியும். உள்ளத்து உணர்ச்சியைத் துண்டாட முடியுமோ? முடியாது; ஒரு நாளும் முடியாது என்பதை வேலூர்ச் சிப்பாய்ப் புரட்சிக்குப் பின் அப்புரட்சியால் உயிர் துறந்த உத்தம வீரர்களின் பரம்பரையில் தோன்றிய எத்தனையோ இந்தியத் தியாகிகள் - தமிழ் நாட்டுத் தலையாய வீரர்கள் தங்கள் வாழ்வாலும் தியாகத்தாலும் நிறுவிக் காட்டிவிட்டனர். வேலூர்ச் சிப்பாய்களின் - தமிழகத்தின் அப்பழுக்கற்ற வீரர்களின் திருமேனி நச்சுக் குண்டுகளால் பிய்த்தெறியப்பட்டபோது எதை எதை எல்லாம் எண்ணிக் குமுறினார்களோ? சுதந்திர தேவதையே! உன்னையன்றி அவர் நெஞ்சம் குமுறிய குமுறலைக் கேட்டவர் யார்? ஒருவேளை நீ கேட்டிருந்த அவர்கள் குரலை எங்கள் வீரக் கவிஞன் பாரதியின் திருச்செவியில் ஓதியதாலோ என்னவோ கப்பலோட்டிய தமிழனின் வாயால் அம்மகாகவி,

சதையைத் துண்டு துண்டாக்கினு முன்னெண்ணம்
சாயுமோ - ஜீவன் - ஓயுமோ?
இதயத் துள்ளே யிலங்கு மகாபக்தி
யேகுமோ? - நெஞ்சம் - வேகுமோ?

என்று வெறிகொண்டு பாடினார்? சுதந்தர தேவதையே! உலகமெல்லாம் விடுதலை வெறிகொண்ட வீரர்களின் இன்னுயிரை விருந்தாய்க் கொண்டு

களிக்கும் கொற்றவையே! எங்கள் தாயகத்தின் சார்பில் தென்பாண்டி எல்லையில் பல்லாயிரக்கணக்கான வீரர்களை உன் திருவடிகளில் பலியிட்டோம். அவ்வாறே எங்கள் நாட்டின் வட எல்லையிலே உன் திருவடிகளில் நூற்றுக்கணக்கான வீரர்கள் தங்கள் தலைகளை மலர்களாகக் கொய்து வைத்தனர். அன்னையே! பலிகொடுத்த பரம்பரையினராகிய நாங்கள் உன்னிடம் கைகூப்பி வேண்டுவது ஒன்றுதான்: எங்கள் முன்னோர்கள் ஏற்றிவைத்த சுதந்தர விளக்கு என்றும் அணையாது ஒளிவிட நீ அருள் புரிவாயாக! ஆம். அந்த விளக்கின் ஒளியே எங்கள் வாழ்வு!

# 7. புரட்சியின் எதிரொலி

வேலூர்ப் புரட்சியில் விழுமிய பங்குகொண்ட வீரர்கட்கு வெள்ளை அரசாங்கம் சொல்லொணாக் கொடுமைகள் இழைத்ததோடு நிறுத்திக் கொள்ள வில்லை. 'சிப்பாய்களைப் புரட்சிசெய்யத் தூண்டியவர்கள்' என மைசூர் இளவரசர்களைச் சார்ந்த எண்மர் சித்தூருக்கு இழுத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். விசாரணையின் முடிவாக ஒருவனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது; இருவர்க்கு ஆயுள் தண்டனை தரப்பட்டது. பின் ஒருவனுக்குப் பத்தாண்டு கடும் சிறைவாசம் அளிக்கப் பட்டது. எஞ்சிய மூவர் விடுதலை செய்யப்பட்டனர். மைசூர் இளவரசர் களையும் தீர்த்துக் கட்டவே பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பியது போலும். ஆனால் அதன் விளைவுகள் நம்மால் சமாளிக்க முடியாமல் போய் விடக்கூடும் என்று அஞ்சி அவர்களை வேலூரிலிருந்து கல்கத்தாவிற்குக் கொண்டு சென்று மீண்டும் பலத்த காவலில் வைத்தது. இவ்வாறு கும்பினி அரசாங்கம் சிறிதும் கருணையின்றிச் செய்து வந்த செயல்கள் தென்னாடெங்கும் காட்டுத்தீ போல் பரவியது; எங்கெங்கும் இருந்த சிப்பாய்கள் நெஞ்சில் கோபத்தீ பொறி பறக்கும்படி செய்தது. 'வேலூர் வழியை நாமும் பின்பற்ற வேண்டியது தான்; எடு துப்பாக்கியை; உருவு வாளை' என்று அவர்கள் பொரும ஆரம்பித்தனர். வேலூர்ப் புரட்சியின் எதிரொலியாக ஐதராபாத், பெல்லாரி, வாலாஜாபாத், பங்களூர், நந்தியாதுர்க்கம், சங்கரிதுர்க்கம் ஆகிய இடங்களில் புரட்சிக்கான அறிகுறிகள் தோன்றின. மேற்குறிப்பிட்ட இடங்கள் அனைத்தினும் இவ்வச்சம் ஐதராபாத்திலேயே அதிகமாக இருந்தது. சிப்பாய்களைக் கிறிஸ்தவர்களாக்கப் போகிறார்கள் என்ற அச்சத்தோடு ஒரு புதுவகை வதந்தியால் விளைந்த அச்சமும் சிப்பாய்கட்குப் பெரு மனக்கலக்கம் தந்தது. ஐரோப்பியர் வாழும் இடங்களில் உள்ள ஒரு பெருங் கிணற்றில் ஏராளமான புதையல் இருக்கிறது என்றும் அதை எடுக்க மிகுந்த நரபலி தரவேண்டும் என்றும் அதற்காக இரவு நேரங்களில் நடமாடும் இந்தியர்கள் தலைகளைப் பறிக்க பிரிட்டிஷ் படைகள் தயாராக உள்ளன என்றும் உலவிய புதிய பயங்கர வதந்திகள் சிப்பாய்களை மட்டும் அன்றிச் சாதாரண மக்களையும் அச்சுறுத்தியது. எவர்க்கும் அச்சம் தரக்கூடிய இவ்வதந்தியை உண்மையாக்குவதுபோல் ஒரு நாள் தலையில்லா முண்டம் ஒன்றை மக்கள் பிரிட்டிஷ் படைகள் இருக்கும் இடத்தில் கண்டனர். இதனால் மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டது. இரவு நேரங்களில் ஊரெங்கும் ஒரே இருட்டின் அமைதி நிலவியது.

ஜூலை மாதம் 12-ஆம் தேதி. ஐதராபாத்தில் 'சிப்பாய்கள் புரட்சி'க்

கான அறிகுறிகள் தென்பட்டன. பிரிட்டிஷ் படைகள் எச்சரிக்கையாக இருக்கும்படி வெள்ளைத் தளபதியால் கட்டளையிடப்பட்டன. ஆனால் அன்று போராட்டம் எதுவும் நடைபெறவில்லை. ஆயினும் தொடர்ந்த சில நாட்களில் சிப்பாய்கள் தங்கள் மனக் கசப்பைப் பல்வகையாகவும் புலப்படுத்த ஆரம்பித்தனர். பகிரங்கமாகச் சிப்பாய்கள் 'நாங்கள் புதுவகைத் தலைப்பாகைகளை அணிய மாட்டோம். எங்கள் சமய உணர்ச்சியைப் புண்படுத்த அனுமதிக்க மாட்டோம்' என்று கர்ஜித்தனர். சிப்பாய்களின் நெஞ்சுரத்தைக் கண்ட வெள்ளைத் தளபதிகள் நடுங்கினர். தங்கள் மேலதிகாரிகட்கு, 'தேவையற்ற உத்தரவை மாற்றுங்கள்; இல்லையேல் புரட்சி மூளும். அப்போது நாங்கள் அதை அடக்கத் துணியோம்' என்று முறையிட்டனர்.[28] இதன் விளைவாக ஜூலை 23-ஆம் தேதி 'புதுவகைத் தலைப்பாகைகளை அணிய வேண்டும்' என்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மாற்றப்பட்டது. ஆனால் ஆங்கில ஏகாதிபத்தியம் இவ்வளவு அமைதியாகக் காரியத்தைச் செய்ய விரும்புமா? ஐதராபாத் படையைச் சேர்ந்த மூன்று சுபேதார்களுக்கும் ஒரு ஜமேதாருக்கும் ஆயுள் தண்டனை விதித்துப் பினாங்கில் சென்று சாகும்படி செய்தது.

வேலூர்ப் புரட்சியின் எதிரொலி ஐதராபாத் புகைச்சலோடு மட்டும் நிற்கவில்லை. முன்கூறிய படி நந்தியா துர்க்கம், பங்களூர், பல்லாரி, வாலாஜாபாத் ஆகிய இடங்களில் குமுறல் எழுந்தது. ஆனால் பிரிட்டிஷ் படைகள் துப்பாக்கி முனையில் அவற்றை அடக்கின.

நந்தியாதுர்க்கத்தில் சில சிப்பாய்கள் ராணுவத்தினின்றும் விலக்கப்பட்டனர். வாலாஜாபாத்தில் ஒரு படைப் பிரிவினர்க்கு வழங்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு தென்னாட்டில் பல்வேறு இடங்களிலும் தலைதூக்கிய புரட்சியை பிரிட்டிஷ் அரசாங்கம் அடக்கிக் கொண்டிருக்கும் வேளையில் பாளையக்காரர்கள் சுதந்தர யுத்தத்தை அடக்குவதில் கண்ணும் கருத்துமாய் இருந்த வெள்ளைத் தளபதிகளுள் ஒருவனாகிய மேஜர் வெல்ஷும், லெப்டினன்ட் கர்னல் கிராண்டும் தென்பாண்டிச் சீமையிலும் திருவனந்தபுரத்திலும் அடாத செயல்கள் புரிந்தனர். அவ்விருவரும் தம் கீழ் முறையே பாளையங்கோட்டையிலும் திருவனந்தபுரத்திலும் இருந்த படைகளின் பெரும்பகுதியை ஆயுத மற்றவர்களாக்கிக் காவலில் வைத்தனர். இச்செயல் கும்பினி அரசாங்கத்தாலேயே வெறுக்கப்பட்டது. ஆராய்ச்சி இன்றித் தக்க காரணங்கள் இல்லாமல் ஒற்றுமைச் சிதைவையும் நம்பிக்கைக் குறைவையும் சிப்பாய்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் மிகக் கடுமையான முறைகளைக் கையாண்டதற்காக இவ்விரு அதிகாரிகளும் சென்னைக் கோட்டைக்கு வரவழைக்கப்பட்டுக் கடுமையாக விசாரிக்கப்பட்டனர். ஆனால் இறுதியில் 'கவுரவமாக'க் கண்டிக்கப்பட்டு

விடுதலை செய்யப்பட்டனர். ஆம். அவர்கள் நிறம் வெள்ளை அன்றோ?

வேலூர்ப் புரட்சியால் நாடெங்கும் விளைந்த கிளர்ச்சிகளைக் கண்டு பெரிதும் மனங்கலங்கிய கும்பினி அரசாங்கம் இத்தகைய புரட்சிகட்கும் - கிளர்ச்சிகட்கும் - உரிய காரணங்களை 'ஆராய'த் தலைப்பட்டது. ஆம். அதுவும் ஒரு கண் துடைப்பு நாடகம்தான்.

1806-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12-ஆம் தேதி மேஜர் ஜெனரல் பேடர் **(Major - General Pater)** தலைமையில் ஐந்து வெள்ளையர்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு சிறப்புக் குழு **(Special Commission)** அமைக்கப்பட்டது. அக்குழு வேலூரில் அமர்ந்து பற்பல சாட்சியங்களை விசாரித்தது. முடிவாக ஆகஸ்டு மாதம் 9-ஆம் தேதி தன் 'முடிவுகளை' வெளியிட்டது. ஆம் 'முடிவுகளின்' சுருக்கம் வரலாறு:

'புதுவகைத் தலைப்பாகைகளை அணிவதன் வாயிலாகச் சிப்பாய்கள் சமூகத்தில் தங்கட்குள்ள அந்தஸ்தும், மரியாதையும் தொலைந்துவிடும் என்று கருதினார்கள். தங்களை வெள்ளையர்போல் நடை, உடை, பாவனைகளால் ஆக்கிக் கொள்ள அவர்கள் சற்றும் விரும்பவில்லை. ராணுவப் பயிற்சியின்போது தங்கள் தங்கள் சமயச் சின்னங்களை அணியக்கூடாது என்று வற்புறுத்தப்பட்டமையால் இந்திய வீரர்கள் பெரிதும் வெறுப்படைந்தார்கள். இரண்டாவது காரணம், திப்பு சுல்தான் குடும்பத்தினரை வேலூர்க் கோட்டையில் குடிவைத்தமையால் இவர்கள் தங்கட்கு இருந்த ஆத்திரத்தை வேறு வேறு வகைகளில் கர்நாடகச் சிப்பாய்கள் உள்ளத்தில் புகுத்துவதில் வெற்றி கண்டார்கள். அதுவும் தாங்கள் பேசும் உருது மொழியையே பேசியும், தாங்கள் பின் பற்றும் இஸ்லாமிய மதத்தையே பின்பற்றியும் வந்த இஸ்லாமியச் சிப்பாய்களிடம் புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவது இவர்கட்கு எளிதாக இருந்தது. எனவே இவ்விரு காரணங்களே வேலூர்ப் புரட்சிக்கான அடிப்படைகள்.'

இவ்வாறு தீர்ப்பளித்த 'சிறப்புக் குழுவின்' முடிவைச் சென்னை அரசாங்கமும் 'சரி' என்று ஒப்புக் கொண்டது. ஆனால் இம்முடிவுகளையும் எதிர்த்தான் ஒரு வெள்ளையன். அவனே சென்னையிலிருந்த ராணுவப் பெருந்தலைவனாகிய சர்.ஜே.எப். கிராடக் **(Sir J.F. Cradock)**. அவன் செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி கிழக்கிந்தியக் கம்பெனித் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தன் கருத்துக்களைத் தெளிவுபடுத்தினான். வேலூர்ப் புரட்சிக்கு அடிப்படைக் காரணம் உடைமாற்றமே என்று சொல்வது பொருத்தமற்றது என்று பிதற்றினான். ஆனால் அவனேதான் ஜூன் மாதம் 29-ஆம் தேதி புதுவகைத் தலைப்பாய்கள் பற்றிச் சிப்பாய்களிடம் ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பு ஒருமித்ததாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு எழுதி இருந்தான். இப்பொழுதோ அவன் எழுதிய கடிதத்தை அவனே மறந்துவிட்டான். ஒருவேளை புரட்சியால் விளைந்த

அதிர்ச்சி அவன் புத்தியை நிலைகலங்க வைத்து விட்டது போலும். கிராடக் மேலும் தன் கடிதத்தில் வேலூர்ப்புரட்சி விளைந்ததற்குக் காரணம் அங்கிருந்த திப்பு சுல்தான் பரம்பரையினர் முஸ்லீம் ராஜ்யம் ஒன்றை உருவாக்கத் தூண்டியதன் விளைவுதான் என்று வாதாடினான். வேலூரில் நடைபெற்ற சாட்சிய விசாரணைகளில் எந்தச் சிப்பாயும் ஆடை மாற்றத்திற்கு எதிராகத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவில்லை என்று சுட்டிக் காட்டினான். மாறாகச் சிலர் அதை வரவேற்றுச் சாட்சியங்களும் தந்தனர் என்று நினைவுபடுத்தினான். சமயச் சின்னங்களையும் காதில் கடுக்கன்களையும் அணிவதைத் தடைசெய்தது ராணுவ ஒழுங்கை நோக்கச் சரியானதே என்று சாதித்தான். வேலூர்ப்புரட்சி பற்றி விசாரணைக் குழுவின் தீர்ப்பை ஒப்புக் கொண்டால் சென்னை இராணுவத்தின் 'கவுரவம்' காற்றில் பறந்து விடும் என்று கருதினான். ஒருவேளை தான் போட்ட உத்தரவுகள் தவறு என்ற முடிவு ஏற்பட்டாலும் அதற்குக் காரணம் தான் அல்ல என்றும், உடை மாற்றத்தால் ஒரு தீங்கும் ஏற்படாது என்று தனக்கு யோசனை சொல்லிவந்த கர்னல் அக்கினியூவும் மேஜர் பியர்ஸ் ஸுமே அக்குற்றத்திற்குப் பொறுப்பாளிகள் என்றும் பழி சுமத்தினான். ஆனால் ராணுவப் பெருந்தலைவனின் வாதங்கள் எவ்வளவு அபத்தமானவை என்று நமக்கு எளிதில் விளங்கக் கூடியனவே. ஆடைமாற்றத்தால் அதிருப்தி ஏற்படவில்லை என்று அவன் சொல்லிய வாதத்தை அறிஞர் வில்சன் போன்ற சரித்திர ஆசிரியர்களே உண்மை என்று ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். வேலூரில் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களிலிருந்து புதிய தலைப்பாகைகளுக்கு எதிர்ப்பு எதுவும் இல்லை என்று சாதிக்க முயன்ற ராணுவப் பெருந்தலைவனின் வாதத்தை அறிஞர் வில்சன்தன் நூலுள் எள்ளி நகையாடியுள்ளார். அவர் இதுபற்றித் தன் நூலில் எழுதியுள்ள பகுதியின் சாரம் வருமாறு: வேலூரில் புதிய தலைப்பாகை பற்றிச் சில சிப்பாய்கள் கொடுத்த சாட்சியங்கள் பயனற்றவை. ஏனென்றால் அச்சாட்சியங்களைக் கொடுப்பதற்குச் சரியாக ஆறு நாட்களுக்கு முன்புதான் புதிய தலைப்பாகைகளை நாங்கள் அணியமாட்டோம் என்று வாய்மொழியாகக் கூறிய வீரர்களுக்குக் கும்பினி அரசாங்கம் விசாரணை கூட இன்றி மிகக் கடுமையான கொடிய தண்டனைகளை விதித்திருந்தது. எனவே தலைப்பாகைகளுக்கு விரோதமாகச் சாட்சியங்கள் சொன்னால் தங்கட்கு எக்கதி நேரும் என்பதை இந்தியச் சிப்பாய்கள் நன்கு அறிவார்கள். தங்கள் கண்ணெதிரிலேயே தங்கள் தோழர்களுக்கு நேர்ந்த சகிக்கமுடியாத துன்பத்தைப் பார்த்தபின் சிப்பாய்கள் கொடுத்த சாட்சியங்களை உண்மையானவை என்று விசாரணை செய்தவர்கள் சொல்லியதுதான் வேடிக்கையானது. விசாரணை நடந்து கொண்டிருந்த காலத்திலேயே சிப்பாய்கள் கூறிய சாட்சியங்கள் இவ்வாறு இருக்க அவர்களோடு நெருங்கிய தொடர்புடைய தளபதிகள் உண்மையை விளக்குவதற்கும்

முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய குறிப்புக்களெல்லாம் புறக்கணிக்கப்பட்டது விந்தையினும் விந்தை. இவ்வாறு சென்னை ராணுவத்தின் வரலாற்றைச் செம்மையுற வரைந்துள்ள ஒரு வெள்ளை ஆசிரியரே கூறியபின் நாம் சொல்ல என்ன இருக்கிறது! இனி ராணுவப் பெருந்தலைவன் முஸ்லீம் ராஜ்யத்தை உருவாக்க வேண்டும் என்று திப்பு சுல்தான் குடும்பத்தினர் தூண்டியதன் பேரில்தான் வேலூர்ப்புரட்சி விளைந்தது என்று கூறிய காரணம் எவ்வளவு உள்ளீடற்றது - மடமையானது - என்பது சிறிது சிந்தித்தாலும் புலனாகும். வேலூர்ப் புரட்சிக்குக் காரணம் முஸ்லீம் ராஜ்யத்தை உருவாக்குவதுதான் என்றால் அப்புரட்சியிலே சரிபாதிக்குமேல் இந்து சிப்பாய்கள் கலந்து கொண் டார்களே கசையடி பட்டார்களே, தூக்குமரத்தில் தொங்கினார்களே, பேய்வாய் பீரங்கிகட்கு இரையானார்களே, சித்திரவதைக்கு உள்ளானார்களே அவர்களும் கூட முஸ்லீம் ராஜ்யத்தை உருவாக்குவதற்காகத்தானா போராட்டம் நடத்தினார்கள்? எனவே ராணுவப் பெருந்தலைவனுக்கு மூளை குழம்பியிருந்தாலொழிய இத்தகைய ஒரு வாதத்தை அவன் சொல்லியிருக்க முடியாது.[29] சரி. இது ஒரு புறமிருக்க திப்புசுல்தான் குடும்பத்தினர் தூண்டுதலின் பேரில்தான் வேலூர்ப்புரட்சி வெடித்து எழுந்தது என்றால் பாளையங்கோட்டையிலும், ஐதராபாத்திலும், பங்களூரிலும், நந்தியா துர்க்கத்திலும், பெல்லாரியிலும், வாலாஜாபாத்திலும் சிப்பாய்கள் தங்கள் மனக்கசப்பைத் தெரிவித்ததேன்? புரட்சிக்குக் கச்சை கட்டியதேன்? அங்கெல்லாம் கூட திப்புசுல்தான் குடும்பத்தினரைப் பிரிட்டிஷ் அரசாங்கம் குடிவைத்திருந்ததா என்ன? இல்லையே.

வேலூர்ப்புரட்சியின் அடியொற்றி எழுந்த இந்திய மாபெரும் புரட்சிதான் 1857-ஆம் ஆண்டு நடந்த மாபெரும் சிப்பாய்ப்புரட்சி.[30] அதன் வீர வரலாற்றைத் தமக்கே உரிய சுதந்தர ஆவேசத்தோடு சித்திரித்துள்ளார் 'எரிமலை' என்ற நூலில் வீர சாவர்க்கர். வேலூர்ப் புரட்சிக்குக் காரணம் புதிய தலைப்பாகைகளை அணியும்படி வற்புறுத்தியதும், திப்புசுல்தான் பரம்பரையின் தூண்டுதலும்தான் என்ற பித்தலாட்டமான வாதங்களைக் கூறி உண்மைக் காரணங்களை மறைத்துப் பிரிட்டிஷ் அரசாங்கம் மக்களை ஏமாற்றப் பார்த்தது போலவே சிப்பாய்ப் புரட்சியைப் பற்றியும் பொய்ப் பிரச்சாரம் நடத்தினர். அதைப்பற்றி வீர சாவர்க்கர் தன் நூலில் வீசியிருக்குங் கண்டனக் கணைகள் வருமாறு:

'தோட்டாக்களில் கொழுப்பு தடவும்படி ஆங்கில அதிகாரிகள் உத்தரவிட்டதால்தான் புரட்சி கிளம்பியதென்று ஸ்தாபிப்பதற்காக ஆங்கில சரித்திராசிரியர்கள் தங்களுடைய புத்தி, கற்பனை சக்தி எல்லாவற்றையும் உபயோகித்திருக்கிறார்கள்! கூலிக்கு மாரடிக்கும் சில இந்தியர்களும் அந்தச் சரித்திராசிரியர்களின் கூற்றுக்குத் தகுந்தவாறு தாளம் போட்டிருப்பதுதான்

சகிக்க முடியாத அக்கிரமமாகும். ஆங்கிலேயர்களின் செல்லப் பிள்ளைகளில் ஒருவரான இந்திய சரித்திராசிரியர், தோட்டாக்களில் பசு, பன்றி இவற்றின் கொழுப்பு தடவப்பட்டிருக்கிறதென்ற வதந்தியைக் கேட்டவுடன் ஜனங்களுக்கு வெறி பிடித்துவிட்டதாயும், அது உண்மையா, பொய்யா என்று கூட யாரும் விசாரிக்கவில்லையென்றும் கூறியிருக்கிறார். ஆம், கூலிக்கு மாரடிக்கும் கோடரிக் காம்புகளிடமிருந்து நாம் வேறெதை எதிர்பார்க்க முடியும்!'

'அயோத்தியா ராஜ்யத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியதும் அப்புரட்சிக்கு ஒரு காரணமென்று ஆங்கில சரித்திராசிரியர்கள் கூறியிருப்பதும் சரியல்ல. ஒரு வேளை புரட்சிக்கான பல காரணங்களில் அதுவும் ஒன்றாயிருக்கலாம். எனினும் சுதந்திர யுத்தத்திற்கு அது மூலகாரணமல்ல.'

'அயோத்தியா ராஜ்யத்தைக் கைப்பற்றாமலும், தோட்டாக்களுக்குக் கொழுப்பு தடவாமலுமிருந்தால் கூட அப்புரட்சி ஏற்பட்டேயிருக்கும். ஏற்கெனவே புகைந்து கொண்டிருந்த கனல் ஜ்வாலையைக் கக்கும்படி அவ்விரு சம்பவங்கள் செய்தனவென்பதைத் தவிர, அவை புரட்சிக்கு மூலகாரணமல்ல. பிரான்ஸில் ஏற்பட்ட மகத்தான புரட்சிக்கு, உணவுப் பொருட்களின் விலை ஏற்றமும், அரசரின் அநீதிகளும், பாஸ்டில் கோட்டை பயங்கரச் சிறையும், பிரபுக்களின் அட்டூழியங்களும், சில்லறைக் காரணங்களேயொழிய மூல காரணம் வேறாகும்.'

'அப்புரட்சியின் மூலகாரணங்கள் சமதர்ம நோக்கமும், சுதந்திர தாகமும்தான். மத உணர்ச்சியை அழிப்பதற்காகத் தந்திரமும், அபாயகரமும் நாசகரமுமான முறைகளை ஆங்கிலேயர்கள் கையாள ஆரம்பித்தவுடன், ஜனங்களிடை எழுந்த 'தீன்! தீன்' என்ற கோஷமே அதை விளக்கப் போதுமானது. அரசியல் அடிமைகளாகி வரும் இந்திய ஜனங்களின் மத உணர்ச்சியையும் நசுக்கிவிட்டால், பின்னர் இந்தியாவைத் தாங்கள் எவ்வித தொந்தரவுமின்றி ஏகபோகமாக ஆளலாமென ஆங்கிலேயர்கள் நினைத்தே அதற்கான அக்கிரமத் திட்டமொன்றை வகுத்தனர். அதைக்கண்டதும்தான் இந்திய ஜனங்களிடை ஆத்திரம் பீறிட்டெழுந்தது. தங்கள் பிறப்புரிமைகளை அடியோடு நசுக்க ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி செய்து வருகின்றனரென்பதை அறிந்ததும் ஜனங்களின் மனத்தில் தேசாவேசம் மூண்டது'.

சிப்பாய்ப் புரட்சியைப் பற்றி வீர சாவர்க்கர் கூறியுள்ள இம்மணி மொழிகள் யாவும் வேலூர்ப் புரட்சிக்கும் நூற்றுக்கு நூறு பொருந்தும் என்பதை நடுவுநிலை பிறழாத நெஞ்சும் சரித்திர உணர்ச்சியும் படைத்த எவரும் ஒப்புக் கொள்வது திண்ணம்.

சிப்பாய்ப் புரட்சியை அடக்கி ஒடுக்குவதில் தான் கையாண்ட கொடுங்கோன்மைகளை எல்லாம் மறைக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம்

'சாகசங்கள்' பல செய்தது. ஜூலை மாதம் 17-ஆம் தேதி கும்பினி அரசாங்கம் உடையைப் பற்றிப் போட்டிருந்த வெறுக்கத்தக்க உத்தரவுகளை எல்லாம் நீக்கியது. செப்டம்பர் 24-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட பிறிதொரு உத்தரவின் வாயிலாகச் சுதேசி சிப்பாய்களிடம் எவ்வித அங்கீகார மற்ற தலையீடும் இருக்கக் கூடாதென்று கட்டளையிட்டது.

கொலையாளி ஒருவன் படுகொலை புரிந்தபின் தூக்குமேடைக்கு அஞ்சி 'ஐயோ! அறியாமல் செய்தேன்; தீயோர் தூண்டுதலால் செய்தேன்' என்று அழுது புலம்புவது போல் நீண்டதோர் அறிக்கை வெளியிட்டது. அவ்வறிக்கையில் 'வேலூர்ப் புரட்சிக்குக் காரணம் சற்றும் ஆராய்ச்சியின்றித் திணிக்கப்பட்ட புதிய மாற்றங்களே; நல்ல சுதேசி சிப்பாய்களின் நெஞ்சை நஞ்சாக்கியவர்கள் திப்புவின் பிள்ளைகளே; தங்கட்கு விடுதலை தேடிக் கொள்ளவும், இஸ்லாமிய ராஜ்யத்தை நிறுவவும் அவர்கள் செய்த சதிகளே புரட்சியாய் வடிவெடுத்தன; எனவே எதிர்காலத்தில் சுதேசி சிப்பாய்களின் சாதி, மதம் பற்றிய கருத்துக்கள் எவ்வளவு அறிவற்றனவாக இருந்தாலும் அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தும் வகையில் எவ்வித செயலிலும் ஆத்திரப்பட்டு ஈடுபடலாகாது! - இவ்வாறு ஓலமிட்டது கும்பினி அரசாங்கம். இதற்கும் மேலாக ஒரு பெரிய சாகசத்தையும் செய்தது. ராணுவப் பெருந்தலைவன் ஜூன் 29-ஆம் தேதி புதிய தலைப்பாகைகள் குறித்து ஒருமித்த அதிருப்தி ராணுவத்தில் நிலவுகிறதென்று எப்பொழுது தெரிவித்தானோ அதை உடனே கவர்னராகிய வில்லியம் பெண்டிங் பிரபு முற்றிலும் தீர ஆராயாதது பெருங்குற்றமென்று சீறியது. சொந்த ஆராய்ச்சித் தெளிவில்லாமல் 'என் சிப்பந்திகளின் யோசனையைக் கேட்டு உத்தரவுகளைப் பிறப்பித்தேன்' என்று சொல்லும் ராணுவப் பெருந்தலைவனையும் ஒருநாளும் மன்னிக்க முடியாது என்று கனல் தெறிக்கப் பேசியது கும்பினி அரசாங்கம். தன் கீழ் இருக்கும் ராணுவத்தின் மனப்போக்கைச் சிறிதும் தெரிந்து கொள்ளச் சக்தியற்றவனாயிருந்த சர். கிராடக் ராணுவப் பெருந்தலைவனாய் இனியும் நீடிப்பது அடாத செயல் என்றும், 'எவ்வளவோ நற்பணிகளை நாட்டுக்குச் செய்திருப்பினும் கடந்த ஓராண்டாகக் கவலைக் குறைவோடும் தேர்ச்சியில்லா மதியோடும் நடந்து கொண்ட கவர்னர் வில்லியம் பெண்டிங் பிரபுவிடத்தில் மேலும் நம்பிக்கை வைப்பதும் இயலாத காரியம்' என்றும் வெள்ளை அதிகாரவர்க்கம் முடிவு செய்தது. கர்னல் அக்கினியூவும் மேஜர் பியர் ஸும் ராணுவத்தின் உண்மை நிலை அறியாது காரியங்களைச் செய்தமைக்காக அவர்கள் தங்கள் பதவியினின்றும் நீக்கப்பட்டுப் பத்திரமாகத் தங்கள் தாயகத்திற்குத் திரும்பிவிடும்படி உத்தரவிட்டது.[31] ஆம். கணக்கற்ற கொலைகளுக்கு - சுதந்தர வீரர்களின் கோர மரணத்திற்குக் காரணமாயிருந்த கொலைகார வெள்ளைத் தளபதிகட்கு இதைவிடக் கடுமையான தண்டனையைக் கொடுப்பது அநியாயமல்லவா! அவர்கள்தான் சீமைத் துரைகளாயிற்றே!

மேற்குறிப்பிட்ட சில உத்தரவுகளின் வாயிலாகக் கும்பினி அரசாங்கம் நாட்டு மக்களின் கண்ணில் மண்ணைத் தூவிவிடலாம் - மாமாயம் செய்யலாம் - என்று எண்ணி நடத்திய விசாரணை நாடகத்தின் இறுதிக் காட்சியும் முடிந்தது.

இவ்வளவு கள்ள நாடகக் காட்சிகட்குப் பின்னும் வேலூர்ப் புரட்சியால் விளைந்த அச்சம் வெள்ளையர் உள்ளத்தினின்றும் நீங்கவில்லை. இக்கூற்றை மெய்ப்பிக்கவல்ல இரு குறிப்புக்களை மட்டும் ஈண்டு காண்போம். வேலூர்ப் புரட்சி நடந்து முடிந்த பின்னும் அதை எண்ணி எண்ணி நடுக்கம் கொண்ட ஒரு வெள்ளைத் தளபதி - வேலூர்ப் புரட்சியை ஒடுக்குவதிலும் பெரும் பங்கு கொண்ட பறங்கித்துரை - பின் வருமாறு தன் உள்ளக்கருத்தை வெளியிட்டுள்ளான்: 'வேலூர்ப் புரட்சிக்கான சதித் திட்டத்தின் எல்லையையும் ஆழத்தையும் பற்றி எவருக்கும் ஒன்றும் தெரியாது. எரிமலை ஒன்றின்மேல் ஏறி நிற்பது போல் இருந்தது வெள்ளையர் நிலை. ஏற்கெனவே வேலூர்ப் புரட்சியின் வாயிலாக அவர்கள் எரிமலையின் ஒரு கொந்தளிப்பின் விளைவை அனுபவித்துவிட்டார்கள். இக்கொந்தளிப்பை அடுத்து இன்னும் எத்தனைக் கொந்தளிப்புகள் எவ்வளவு விரைவில் தோன்றும் என்பதை அவர்கள் அறியார். இத்தகைய நடுக்கம் தீர நெடுநாள் பிடித்தது.'

வேலூர்ப் புரட்சி நடந்தது 1806-ல். அதன் எதிரொலி 1838-லும் 1869-லும் கூட இருந்தது. 1838-ஆம் ஆண்டில் வேலூரில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. தன்னைத் 'துருக்கி நாட்டான்' என்று சொல்லிக் கொண்ட ஒருவன் ஐதராபாத்திலிருந்து புறப்பட்டுக் கர்னூல் கடப்பை வழியாக வேலூர் வந்து சேர்ந்தான். இவனிடம் புரட்சியைத் தூண்டவல்ல கடிதங்கள் பல இருந்தன என்று வெள்ளை அரசாங்கம் இந்த 'மர்ம மனிதனை'ச் சடுதியில் கைது செய்தது. இந்நிகழ்ச்சியை ஒட்டி இவன் தோழர்கள் எனக் கருதப்பட்ட பன்னிருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் ஒருவர் வேலூரைச் சார்ந்த ஒரு மௌல்வி. இவர் ஆட்சியாளருக்கு விரோதமாகப் புரட்சி அனல் கக்கப் பேசினார் - புத்தகம் எழுதினார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்.

1869-ம் ஆண்டு மே மாதம் மீண்டும் வேலூரில் 'எரிமலை அனல் கக்குமோ?' என்று அஞ்சினர் வெள்ளையர். மே மாதம் 21-ஆம் தேதி வெள்ளைத் துரைமார்கள் அனைவரையும் புரட்சி வீரர்கள் பலியிடப் போகின்றனர் என்ற பலமான வதந்தி எழுந்தது. போலீஸ் அதிகாரிகள் வதந்தியின் உண்மையை ஆராயத் தீவிரமாக ஈடுபட்டனர். அவர்கட்கு அஞ்சத்தக்க சான்றுகள் பல கிடைத்தன. அப்போது வேலூரில் இருந்த வெள்ளையர் மன நிலையை விளக்கும் வகையில் ஒரு செய்தித்தாள் பறங்கித் துரைமகள் ஒருத்தியின் கடிதம் ஒன்றை வெளியிட்டது. அதில் அவள் கூறியிருந்தது வருமாறு: 'வேலூரில் இப்போது புரட்சி வெறி

தலைதூக்கி நிற்பதாகத் தெரிகிறது. நாங்கள் யாரும் தப்பிப் பிழைக்க முடியாது என்றே தோன்றுகிறது. ஏனென்றால் இந்தியச் சிப்பாய்களும் முஸ்லீம்களும் நிறைந்த நகரத்தின் பகுதியைக் கடந்தே நாங்கள் புகைவண்டி நிலையத்தை அடைய வேண்டும். 1806-ஆம் ஆண்டில் இதே வேலூரில் இருந்த வெள்ளை அதிகாரிகள் அனைவரையும் இந்தியச் சிப்பாய்கள் கொன்று குவித்தனர். வேலூரில் அப்போது ஒரே கல்லறையில் 45 வெள்ளை அதிகாரிகளின் பிணம் அடக்கம் செய்யப்பட்டது. எங்கள் அனைவரையும் இம்மே மாதம் 21-ம் தேதி கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. எனக்குத் தெரிந்த அளவில் ஏன் அவர்கள் எங்கள்பால் கொண்டுள்ள இந்த அன்பான எண்ணத்தை நிறைவேற்ற மாட்டார்கள் என்பது புலனாகவில்லை. நாங்கள் என்ன செய்ய முடியும்? நாங்கள் எழுபது பேர். அவர்களோ அறுநூறு பேர்.''

இவ்வாறு 1806-ம் ஆண்டு நடைபெற்ற பெரும் புரட்சியின் எதிரொலியாக ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் உணர்ச்சிகளும் ஓய அறுபத்துமூன்று ஆண்டுகட்கு மேல் ஆயின.[32]

வேலூர்ப் புரட்சிக்குப்பின் கும்பினி அரசாங்கம் மேற்கொண்ட செயல்களின் வாயிலாக 1806-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ஆம் தேதி பகிரங்கமாக வெடித்தெழுந்த பிரச்சனையை வெற்றிகரமாகத் தீர்த்துவிட்டோம் என்று அது கருதியது. ஆனால் வேலூர்ப்புரட்சியை அடக்கும் பிரச்சனையில் வெள்ளை அரசாங்கம் தற்காலிக வெற்றி கண்டது உண்மைதான். ஆனால் பாரத மக்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த சுதந்தரத் தீயை அடக்கும் பிரச்சனையில் அது ஒரு நாளும் வெற்றி காணவில்லை - வெற்றி கண்டிருக்கவும் முடியாது என்பதை இந்திய வரலாறு இன்றும் எடுத்து இயம்பிக் கொண்டிருக்கிறது. வேலூரில் நம் தமிழ் வீரர்கள் வித்திய புரட்சி விதைகள் தான் நாளடைவில் வளர்ந்து சுதந்தர இயக்கமென்ற பெரிய ஆலமரமாய்த் தழைத்தது. வேலூரில் நம் முன்னோர்கள் சிந்திய இரத்தத்திலிருந்து கிளம்பிய மாவீரர்கள்தான் பகவத்சிங், ராஜகுரு, திருப்பூர் குமரன், ஹேமு கல்யாணி முதலியோர். வேலூரில் நிகழ்ந்த முதல் ராணுவச் சுதந்தரப் போரின் எதிரொலிதான் 1857-ல் நடந்த சிப்பாய்ப் பெரும் புரட்சி. சுருங்கச் சொன்னால் வேலூரில் பாரத அன்னையின் பிள்ளைகள் செய்த தியாகத்தின் பெரும் பலன்தான் மகாத்மா காந்தி அடிகளின் பிறப்பும் இந்திய உபகண்டத்தின் அரசியல் விடுதலையும்.

■

## 8. நன்றி மறவோம்

இந்தியாவின் விடுதலைப் போரைத் துவக்கிவைத்த முதற் பெருமகன் பூலித்தேவரே. வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து கி.பி.1755-ஆம் ஆண்டு முதல் சில ஆண்டுக் காலம் அவர் நடத்திய போர் பலி பீடத்திலேயே முடிந்தது. வீரத்தலைவர் பூலித்தேவரைத் தொடர்ந்து பாஞ்சைப்பதி வேந்தனாகிய வீரபாண்டியக் கட்டபொம்மன் தொடங்கிய சுதந்தரப் போராட்டம் சில வாரங்களே நடந்தது; அவன் கோட்டைக்குள்ளேயே முடிவடைந்தது.

வீரபாண்டியன் துவக்கிவைத்த விடுதலைப் போரைத் தொடர்ந்து அவன் இளவலும் இணையிலா வீரனுமாகிய ஊமைத் துரையும் சிவகங்கையை ஆண்ட சகோதரர்களாகிய மருதிரு வரும் நடத்திய போராட்டம் பல மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றது; பல சதுர மைல் சுற்றளவில் - ஒரு சீமை முழுதும் - பரந்து நடை பெற்றது.

இவ்விரு போராட்டங்களுள் முன்னையதே தமிழகம் ஆரம்பித்து வைத்த இந்திய சுதந்தரப் போரின் முதற்கட்டம். பின்னைய இரண்டும் அப்பெரும் போராட்டங்களின் இரண்டாவது, மூன்றாவது கட்டங்கள். இப்போராட்டங்களை உணர்ச்சியால் அடியொற்றியும் முறையால் வேறுபட்டும் நடைபெற்ற மாபெரும் இந்திய முதல் ராணுவப் புரட்சியே வேலூர்ப்புரட்சி. இப்புரட்சியை நம் தாயகத்தின் சுதந்தரப் போராட்டத்தின் நான்காவது கட்டம் - முக்கிய கட்டம் என்று பெருமையோடு குறிப்பிடலாம்.

சுதந்தர உணர்ச்சி என்பது பரம்பரை பரம்பரையாய் நாடாளும் மன்னர்க்கு மட்டும் உரியதன்று; விடுதலை வேட்கை கொண்ட சாதாரண மக்கட்கு மட்டும் உரியதன்று; காலத்தின் கோளாறால் - வாழ்க்கையின் நெருக்கடியால் - அந்நியன் தலைமையில் உருவான ராணுவத்தில் சிக்கிய சிப்பாய்கட்கும் உண்டு என்ற உண்மையை உலகுக்கு உணர்த்திய முதல் இந்தியப் புரட்சி நம் இன்பத் தமிழ் நாட்டின் வட எல்லையில் நடைபெற்ற வேலூர் சிப்பாய்ப் புரட்சியே.

வீரபாண்டியன் துவக்கி வைத்த விடுதலைப் போராட்டமும், மருது பாண்டியர் நடத்திய போராட்டமும், வேலூர் நிகழ்த்திய வீரப் புரட்சியும் 'ராணுவ அகராதி'ப்படி தோல்வியே அடைந்தன. ஆனால் ஒரு நாட்டின் தேசிய வரலாற்றை - சுதந்தர இயக்கச் சரிதத்தைக் கூர்ந்து ஆராயும் சிறந்த வரலாற்றாசிரியன் அவை அனைத்தையும் 'வெற்றிக்கான படிகள்' எனக் கருதுவானே அன்றி வேறாக எண்ணமாட்டான்.

வேலூர்ச் சிப்பாய்ப்புரட்சி நடந்து, இந்த ஆண்டு 1961 ஜூன் மாதம் 10-ஆம் தேதி வந்தால் சரியாக நூற்றைம்பத்தைந்து ஆண்டுகள் ஆகப்போகின்றன. தமிழர்களாகிய நாம் பரந்த நோக்கம் படைத்தவர்கள்; இன மானத்தினும் தன் மானமே பெரிதென மதிப்பவர்கள். அதனாலேயே வாழ்க்கையில் பல தோல்விகளை வலிந்து மேற்கொள்கிறவர்கள். தற்பெருமையில் விருப்பில்லாதவர்கள்; அதனால் தன் புகழ் பரப்புவதையே நாகரீகமாகக் கொண்டு போட்டியிட்டுவரும் உலகில் தன் ஒளி பிறர் கண்கட்கு மங்கிக் காட்சி அளிப்பதுபற்றிச் சிறிதும் வருந்தாதவர்கள். இத்தகைய போக்கினால் நேரும் இடர்ப்பாடுகளையும் இகழ்ச்சிகளையும் இன்றையத் தமிழகம் மெல்ல மெல்ல உணர்ந்து வருந்தித் திருந்தத் தலைப்பட்டுள்ளது. காலமென்ற சுரங்கத்தில் புதைந்து கிடக்கும் வரலாற்றுப் பெருமை என்ற வைரங்கள் எவ்வளவுதான் விலையுயர்ந்தன எனினும் அவற்றை அரும்பாடுபட்டு அகழ்ந்தெடுத்துப் பட்டை தீட்டிப் பாருலகிற்குக் காட்டாதவரை வையகத்தின் கண்கட்கு - கண்ணாடித் தூள்களையே வைரமென ஒரோர் கால் கருதி மயங்கும் உன்மத்தம் கொண்ட உலகின் விழிகட்கு - உண்மை புலனாகாது என்ற வாய்மையினை இன்றைய தமிழன் நாளும் பல்வகையானும் உணர்ந்து வருகிறான்.

'மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்றல் உணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே'

என்ற பவணந்தியார் மணிமொழியை இந்நாள் வரை இலக்கியத் துறையிலும் - வரலாற்றுத் துறையிலும் பொதுநலம் கருதிப் போற்றாத குற்றத்தை உணர்ந்து குணவோராகும் நல்லுணர்ச்சி தமிழ் மக்கட்கு இப்போது வாய்த்துள்ளது. நம் பழைய வரலாற்று மாண்புகளை மன்பதை அறிந்து போற்றச் செய்ய வேண்டுமென்று நம்மவரிடையே எழுந்துள்ள இந் நல்லுணர்ச்சியைப் போற்றி வளர்த்துப் புனிதமுறச் செயல் நம் அனைவரின் கடமையுமாகும்.

வேலூர்ச் சிப்பாய்ப் புரட்சியின் முடிவை நினைக்கும் போதெல்லாம் சிலுவையிலே மாண்ட ஏசுநாதரும், கைத்துப்பாக்கிக்கு இரையான காந்தி அடிகளுமே நம் நினைவிற்கு வரவேண்டும். பரமண்டலத்திலுள்ள பிதாவின் சார்பாக மக்களின் ஆன்மீக விடுதலைக்குப் பாடுபட்ட கிறிஸ்துநாதரின் வாழ்க்கை சிலுவையிலேயே சித்திரவதை செய்யப்பட்டு முடிவடைந்தது. நாற்பது கோடி மக்களின் சுதந்தர நல்வாழ்விற்காகப் பாடுபட்ட மகாத்மாவின் திருமார்பம் தீக்குண்டுகட்கு இரையாயிற்று. இதனாலெல்லாம் இவ்வுத்தமர்கள் வாழ்வு 'தோல்வி' என்று கூறல் அறிவுடைமையாகுமோ? அவ்வாறே பீரங்கி வாயில் துண்டு துண்டாக்கப்பட்டத் தூயோர்களின் வாழ்வும் தோல்வியல்ல; அழியாப் புகழ்க்கு அடிப்படையான வெற்றியே.

வேலூர்ப் புரட்சி இந்திய சுதந்திர இயக்க வரலாற்றில் தனிச் சிறப்பு வாய்ந்தது. இப்புரட்சிக்குப்பின் வேங்கடத்திற்கு வடக்கே தோன்றிய பற்பல புரட்சிகளைப் பற்றி இந்திய தேசபக்தர்களும், சரித்திர ஆசிரியர்களும் காலமெல்லாம் பறைசாற்றிய வண்ணம் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் யாவரும் போற்றும் பெரும் புரட்சிகட்கெல்லாம் பாதை போட்டுத் தந்த வேலூர்ப் புரட்சி, தமிழர்களாகிய நம் புறக்கணிப்பால் இதுவரை மறைந்த - மறந்த - வரலாறாக இருந்துவிட்டது. இனியேனும் வேலூரின் விழுப்புகழை இந்தியா எங்கணும் எதிரொலிக்கும்படி செய்வது தேசபக்தியில் எவருக்கும் இளைக்காத தமிழினத்தின் தலையாய கடமையாகும்.

1857-ல் நடந்த சிப்பாய்ப் புரட்சியின் நூற்றாண்டு விழாவை 1957-ஆம் ஆண்டில் பாரதமெங்கும் கொண்டாட அரசாங்கமும் அறிஞர்களும் முயன்றனர்; வெற்றி கண்டனர். ஆனால் அவ்விழாவிற்கு ஓராண்டிற்கு முன்பே நம் வேலூர்ப் புரட்சியின் நூற்றைம்பதாவது ஆண்டு விழா வந்தது. இவ்விழாவைத் தமிழகம் எங்கணும் இந்தியா எங்கணும் சிறப்புறக் கொண்டாடச் செய்ய செந்தமிழ் நாட்டாரின் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்கவில்லை.

மேல்நாட்டுப் பேரறிஞன் ஒருவனும் தெளிவாகக் கூறினான்: 'எந்த ஒரு நாடு பெருமை மிக்கத் தன் பழைய வரலாற்றைப் போற்ற மறுக்கிறதோ அந்நாட்டிற்குப் பெருமை நிறைந்த புதிய வரலாறு ஏற்படலும் அரிது' என்று. அந்நல்லோன் கூறிய நன்மொழியின் ஆழ்ந்த பொருளை இனியேனும் தமிழகம் ஆராய்ந்து - உணர்ந்து - செயல்படல் வேண்டும்.

பாஞ்சாலப் படுகொலை நடைபெற்ற இடத்தில் மாண்டு மடிந்த வீரத் தியாகிகட்காகச் செம்மை சான்றதொரு நினைவுச் சின்னம் எழுப்ப அங்குள்ள பெருமக்கள் முயன்று வருகின்றனர். ஆனால் விடுதலை பெற்ற இந்தியாவில் சுதந்தரம் வந்த பதினான்கு ஆண்டுகட்குப் பின்னும் இன்னும் வேலூர்க் கோட்டையில் - தமிழகத்தைத் தம் குருதியால் கடவுள் தன்மை உடையதாக்கிய தியாகிகட்குத் தக்க நினைவுச் சின்னம் எழுப்பப்படாதிருத்தல் ஒரு பெரும் குறையே. 1961 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ஆம் தேதி வரும் வேலூர்ப் புரட்சியின் நூற்றைம்பத்தைந்தாவது ஆண்டுத் திருவிழாவிலாவது வேலூரின் வீரத்தை - தியாகத்தை - உலகமெல்லாம் அறிந்து போற்றும் வகையில் தக்கதொரு நினைவுத் தூண் எழுப்ப வேண்டும். இதற்கு அரசாங்கமும் மக்களும் முன்வர வேண்டும். இனிவரும் ஆண்டுகளில் ஜூன் 10-ஆம் தேதி தோறும் வேலூரில் உயிர்த்தியாகம் செய்த உத்தமர்கட்காக நினைவு வழிபாடு நிகழ்த்த வேண்டும். சுருங்கச் சொன்னால் வேலூர்க் கோட்டை இந்திய மக்கள் அனைவருக்கும் உரிய தேசியப் புனித யாத்திரைத் தலமாகத் திகழ வழிவகைகள் செய்ய வேண்டும்.

வேலூரில் நடந்த புரட்சியில் நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் நல்லுயிரை ஈன்ற சான்றோர்கள் பேர், ஊர் தெரியாத பெருமக்கள். இத்தகைய பல்லோரின் பழுதில்லா தியாகத்தால் உருவான சுதந்தர இந்தியாவின் உப்பைத்தான் நாம் உண்டு வளர்கிறோம் என்ற நன்றி உணர்ச்சி என்றும் நம் நெஞ்சைவிட்டு நீங்காதிருக்க வேண்டும்.

[33]'நன்றி மறப்பது நன்றன்று'

என்ற வள்ளுவர் திருமொழியும்,

[34] ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ!

என்ற புறநானூற்றுப் பொன்மொழியும் தமிழராகிய நம்மை உய்விக்க வழிகாட்டும் மணிவாசகங்கள் அன்றோ?

■

அடிக்குறிப்புகள்

1. ஆர்க்காடு என்ற பெயர் அமைவதற்கு இருவகைக் காரணங்கள் கூறுவர் ஆராய்ச்சியாளர்:

(1) 'ஆர் என்பது ஆத்தி மரத்தைக் குறிக்கும். அந்நாளில் ஆத்திமரம் நிறைந்திருந்த நிலப்பகுதி ஆர்க்காடு என்று பெயர் பெற்றது. இக்காலத்தில் ஆர்க்காடு ஒரு நாட்டுக்கும் நகருக்கும் பெயராக வழங்குகின்றது'

'இதனை ஆற்காடு என்று கொண்டு, ஆறு காடு அங்கிருந்தனவென்று புராணம் கூறும்; வடமொழியில் ஷடாரண்யம் என்பர்'.

- ஊரும் பேரும் - பக்கம் - 7, 42.

**(ii) The name Arcot, now applied to the town in which the Nabobs of the Carnatic held their court, seems originally to have referred to a large tract of country lying on either side of the Palar river. Here six rishis, or religious ascetics, are fabled to have lived a life of penance in as many jungle tracts or wildernesses, called in Sanskrit the Shadaranya, or six forests. The Tamil equivalent was arukadu, whence came the name Arcot. There is hardly a considerable stream or village with out its legend of the doings of some holy rishi in its neighbourhood, of the wanderings of the five Pandavas, and less commonly of Rama and Lakshman in search of the captive Sita; but the same stories are told with variations in places widely distant from one another, and it is evident that the legends have by pious frauds been adopted from elsewhere and incorporated in the local histories to add romance and importance to**

the vicinity. Early legend recognise the fact that the whole of the country now comprising the district was a wild impenetrable jungle, inhabited by demons and rakshasas, whom the gods expelled. Athondai, after conquering the Kurumbas, perceiving that the forests had been the residence of holy men, is said to have built many temples at conjeevaram and elsewhere. Gradually much of the jungle was cleared, and the soil brought under cultivation. Ptolemy*** probablyreferred to this neighbourhood, and from this we may infer that it was of importance in his day. Eventually the name appears to have been transferred from the tract to the town, which became the capital of the Carnatic Subah.

- North Arcot District Manual. Vol. 1 p.2

இவ்விரு காரணங்களுமே தொண்டை நாட்டின் இயற்கை வளம் பற்றி நாம் அறிந்து கொள்ள ஒருவாறு உதவுகின்றன.

2. At length after the discovery on the capture of Seringapatam, that a treasonable correspondence had been carried on by the two late Nawabs, Mohamed Ali and his son, with Tippu Sultan, the British Government determined to assume the entire possession and Government of the Carnatic, making a provision for the family of the Nawab. This was carried into effect by a treaty entered into with the grandson of Mahomed Ali on the 31st July 1801. On that happy day results were acheived by a single stroke of a pen which fiftyseven years of war & twenty years of negotiation had failed to effect.

- Caldwell's, History of Tinnevelly pp.169-70.

3. (i) The northern division of Arcot was so called in consequence of its originally comprising only that portion of the Subah of Arcot lying north of the Palar river, which was, in 1801, ceded to the company with the rest of the Carnatic. The portion of the Subah south of the Palar formed at first the southern division of Arcot. There have been repeated alterations in the composition of the district. After the cession there were added to the northern division the Zemindaris of Kalahasti, Karvetnagar, Venkatagiri, Saidapur, and Kangundi, with the Krishnagiri division of the Baramahal and the district of Hosur above the ghats. In 1808, Venkatagiri, Saidapur and part of Kalahasti were transferred to Nellore, and the Hosur and Krishnagiri divisions except the Kangundi Zemindari and the present Palmaner taluk, were incorporated with Salem; while at the same time the five taluks immediately south of the Palar were, with the Arni jagir, separated from the southern and added to the northern division of Arcot. The taluk of Satyaved and the Pulicat division were also received from Chingleput. The district was then divided into the taluks of Chittoor. Tirupati, Cuddapanattam, Satghur, Tiruvalam, Kaveripak, Sholinghur, Arcot, Vellore, Tiruvattur, Polur, Wandiwash and Satyaved, the Chittoor palayams, with those of Mamandur, Krishnapuram and Karakambadi, the jagirs of Arni, Avalkonda and Desur and the Zamindaris of Kalahasti, Karvetnagar and Kangundi.

- North Arcot district Manual - Vol. I pp. 2 & 3

(ii) In this year, 1808, the new distribution of the charges of collectors was made, the object being to make the revenue and judicial juris-

dictions in the country conformable. It was therefore arranged that at the close of the fasli, the Venkatagiri and Saidapur Zemindaris, hitherto under Mr. Graeme's charge, should be transferred to the collector of Nellore, while the Krishnagiri Division of the Baramahal was made over to the collector of Salem. Instead of these the Northern Division of Arcot received the Satyaved taluk from the Chingleput District and those taluks south of the Palar, hitherto included in the southern Division of Arcot, which had recently been transferred from the late Court at Arni to that of Chittoor. There were Tiruvattur, Polur, Arcot, Vellore, and the Arni jagir. As the southern taluks form an important portion of this district, as at present constituted, a brief account of their administration up to the date of their transfer may not be out of place.

**- North Arcot District Manual, Vol.I, page 125.**

4. பார்க்க: சேக்கிழார் - டாக்டர். மா. இராசமாணிக்கம்: பக்:7

5. நன்மா விலங்கை மன்ன ருள்ளு
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்.

- சிறுபாணாற்றுப்படை, 120-122

6. (i) 'ஆவியரைப் போலவே ஓவியர் என்னும் வகுப்பாரும் இந்நாட்டில் இருந்தனர். சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக்கோடன் என்னும் சிற்றரசன் அவ்வகுப்பைச் சேர்ந்தவன். அவன் ஆட்சிபுரிந்த நாடு ஒய்மாநாடு என்று சாசனங்களில் குறிக்கப்படுகின்றது. ஓவியர் பெருமானாகிய குறுநில மன்னனால் நெடுங்காலம் ஆளப்பட்ட நாடு ஓவியர்மான் நாடு என்று பெயர் பெற்றுப் பின்னர் ஒய்மா நாடென்று சிதைந்திருத்தல் கூடும். திண்டிவனம் கிடங்கில் வயிரபுரம் முதலிய ஊர்கள் அந்நாட்டைச் சேர்ந்தனவாகும்'.

*- ஊரும் பேரும், பக்கம் : 96.*

(ii) 'ஒய்மான் என்பது ஒய்மா நாட்டை யுடையவன் என்று பொருள் படும். திண்டிவனத்தைச் சார்ந்த நாடு முற்காலத்தில் ஒய்மா னாடென வழங்கிற்று. இதன்கண் மாவிலங்கை, வேலூர், எயிற்பட்டினம், கிடங்கில், ஆமூர் என்ற ஊர்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. நல்லியக்கோடன் மாவிலங்கையில் இருந்து கொண்டு இந்நாட்டை யாட்சி புரிந்து வந்தான்.'

*- புறநானூறு, ஔவை. சு.து. பதிப்பு, பக்கம் - 395.*

7. இன்று வட ஆர்க்காட்டில் உள்ள வேலூர் ஆரம்பத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில்தான் இருந்தது என்பதை விளக்கும் அடிக்குறிப்பை முன் இயலில் காணலாம். அவ்வடிக் குறிப்பால் தெளிவாகும் செய்தி ஈண்டும் நினைவு கூரத்தக்கது.

8. (i) 'இவனுடையதாகச் சொல்லப்பட்ட கிடங்கிலென்னும் ஊர் இப்பொழுது திண்டிவனத்தைச் சார்ந்துள்ளது; கிடங்காலெனவும் வழங்கும். திண்டிவனத்திலுள்ள திண்டீசுவரமென்னும் சிவபெருமான் திருக்கோயில்

இக்கிடங்கிலிலிருந்ததாகச் சாசனங்களால் தெரியவருதலின் இப்பொழுது திண்டிவனமென்று வழங்கும் பெரிய ஊரும் அதனைச் சார்ந்த இடங்களும் சேர்ந்த பெரியதொரு நகரமாகக் கிடங்கில் இருந்திருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது. இவ்வூர், காவிதிக்கீரங் கண்ணனார், காவிதிப் பெருங்கொற்றனார், குலபதி நக்கண்ணனாரென்னும் மூன்று நல்லிசைப் புலவர்களுக்குரிய இடமாகத் தெரிகின்றது. யாப்பருங்கல விருத்தியின் மேற்கோளாகிய, 'கிடங்கிற் கிடங்கில்' என்னும் வெண்பாவில் வந்துள்ள கிடங்கிலென்னுமூர் இதுவே. அதிற் சிதைந்த அகழியும் இடிந்த கோட்டையும் இன்றும் காணப்படுகின்றன.'

- பத்துப்பாட்டு, உ.வே.சா. பதிப்பு. பாடப்பட்டோர் வரலாறு, பக்கம் -1ii.

(ii) 'அகழி சூழ்ந்த கோட்டையைக் கிடங்கில் என்றும் கூறுவதுண்டு. முன்னாளில் கிடங்கில் என்னும் பெயருடைய கோட்டையின் தலைவனாகவும், கொடை வள்ளலாகவும் விளங்கிய நல்லியக்கோடன் என்ற சிற்றரசனது பெருமையைச் சிறு பாணாற்றுப்படை கூறுகின்றது. அவன் காலத்தில் அவ்வூர் கோட்டை மதில்களாலும், அகழிகளாலும் நன்றாக அரண் செய்யப்பட்டிருந்தது. இன்றும் அங்குக் காணப்படும் சிதைந்த சுவர்களும், தூர்ந்த கிடங்குகளும் அதன் பழம் பெருமையை அறிவிக்கின்றன. கிடங்கால் என்னும் பெயர் கொண்டு வழங்கும் அவ்வூருக்கு அண்மையில் திண்டிவனம் இப்பொழுது சிறந்து திகழ்கின்றது.'

*- ஊரும் பேரும், பக்கம் - 79.*

9. பார்க்க: பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சா. பதிப்பு, பாடப்பட்டோர் வரலாறு, பக்கம் 1ii.

10. பார்க்க: புறநானூறு, ஔவை. சு.து. பதிப்பு, 2-ஆம் பகுதி, பக். 384.

11. 'வட ஆர்க்காட்டில் ஆதியில் வேலப்பாடி என்னும் குடியிருப்பு உண்டாயிற்று. வேல மரங்கள் நிறைந்த காட்டில் எழுந்த காரணத்தால் அது வேலப்பாடி என்று பெயர் பெற்ற தென்பர். நாளடைவில் காடு நாடாயிற்று. வேலப்பாடியின் அருகே வேலூர் தோன்றிற்று. கோட்டை கொத்தளங்களையுடையதாய் வேலூர் சிறப்புற்றபோது ஆதியில் உண்டாகிய வேலப்பாடி அதன் அங்கமாய் அமைந்து விட்டது'.

*- ஊரும் பேரும், பக்கம் - 13.*

12. (i) 'நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட வழி அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவிற் கூறி அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்ததொரு கதை கூறிற்று. இதனாலே வேலூரென்று பெயராயிற்று.'

*- நச்சினார்க்கினியர்*

பார்க்க: பத்துப்பாட்டு, உ.வே.சா.பதிப்பு, பக்கம் 166.

(ii) பார்க்க: செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு - 19, பக்கம் - 219.

(iii) சிறப்புப் பெயரகராதி - ஈக்காடு - இரத்தின வேலு முதலியார் - (1908) - *பக் - எகசா*

✱ சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடப்பெறும் வேலூர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது என்றும் ஆராய்ச்சி அறிஞர் கருதுவர். - பார்க்க: 'சிறுபாணன் சென்ற பெருவழி' - மயிலை சீனி. வேங்கடசாமி - **Tamil Culture-Vol. IX.No.11**

13. **'The Fort is a perfect specimen of military architecture nearly an exact square.' - Manual of Madras Administration - Vol.3, p.975.**

**14. (i)** இச்சிற்பக்கலைச் செல்வங்களைப் பற்றி ஆனந்த விகடனில் முறையாக வெளிவந்துள்ள கட்டுரைகள் அவசியம் படித்து இன்புறத்தக்கன. பார்க்க: தென்னாட்டுச் செல்வங்கள்.

**(ii) The best sculpture in the calyanamantapam - Manual of Madras Administration - Vol. 3, p.975.**

**15. And at the very moment when the authorities were congratulating themselves upon their entire suppression Vellore became the scene of open mutiny and ferocious massacre.**

**- The Mutiny of Vellore - p:4.**

16. பழைய தொப்பிகள் மிகுந்த கனமுடையனவாகவும் அணிந்து கொள்வதற்கு இனியனவாகவும் இல்லாது இருந்தமையாலும் ராணுவம் முழுவதும் ஒரு பொதுவகைத் தொப்பியை அணிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டுவது அவசியம் எனக் கருதப்பட்டதாலுமே சிப்பாய்கள் புதுவகைத் தொப்பிகளை அணியுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர் என்று வெள்ளை ராணுவத் தளபதிகள் சார்பில் வன்மையாக வாதிக்கப்பட்டது. ஆனால் மேற்குறிப்பிட்டவாறு அவர்கள் கூறிய மூன்று காரணங்களில் முதல் இரு காரணங்களும் வெறும் உபசாரத்திற்காகக் கூறப்பட்டவையே. இல்லையெனில் ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவானேன்? மூன்றாவதாகக் கூறப்பட்ட காரணமோ சிறிதும் பொருத்தமற்றது என்பது 'சென்னை ராணுவ வரலாற்றை' அறிந்தார்க்கு நன்கு விளங்கும். இவ்வுண்மையை அறிஞர் வில்சனும் தம் நூலில் வற்புறுத்திக் கூறியுள்ளார். ராணுவம் முழுவதற்குமான பொதுவகைக் குல்லாயை 1797 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கூடிய ஒரு ராணுவக் குழு 'மிக முக்கியத்துவமும் சிக்கலும் வாய்ந்த' இத்தலைப்பாகைப் பிரச்சினையைத் தீர ஆராய்ந்தது. அதன் முடிவை, ஒட்டியே அரசாங்கம் புதுவகைத் தலைப்பாகையை நிச்சயித்தது. எனவே அதற்குப் பின் ஏதாவது அம்முடிவில் கோளாறுகள் இருந்திருந்தால் அவை அவ்வப்போது ராணுவ சோதனைக்கு வரும் அதிகாரிகளாலேயே நீக்கப்பட்டிருக்க வேண்டும்' என்று வில்சன் தம் நூலில் தெளிவாக

வரைந்துள்ளார். (பார்க்க: **History of Madras Army - p.169)**

17. இப்படைப் பிரிவு பற்றி இந்நாள் வரை ஒரு குறையும் கிடையாது என்றும் அதற்கு மாறாகச் சென்ற காலப் போர்களில் ஆங்கிலேயருக்குப் பேருதவிகள் புரிந்தவர்கள் இவர்கள் என்றும் அறிஞர் வில்சன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளது நாம் இங்கு நினைத்தற்குரியது. (பார்க்க: **History of Madras Army, p.170)**

18. பார்க்க: பிற்சேர்க்கை எண் : I

19. இந்நிகழ்ச்சி நடைபெற்ற நாளில் மட்டுமின்றி பின்னாளிலும் கும்பினி அரசாங்கத்தின் போக்கு வெள்ளை வரலாற்று ஆசிரியர்களாலேயே வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. இவ்வாய்மையை உணர்த்துவதே பின்வரும் பகுதி.

**But the match which set fire to all this intrigue (which might otherwise have continued to smoulder for a long time) was furnished by the injudicious conduct of the English themselves. The deputy Adjutant General of the Madras Army had drawn up, by desire of sir John Cradock, a code of regulations. Sir John had been in command but eighteen months, while his staff officers had been brought up in the native army from their youth. They ought to have known that the ideas of a martinet, running in one invariable groove, could not suit such troops and that nothing would induce the sepoys to wear the turban thus invented which, however beautiful in their own eyes for its uniformity, was considered but an ugly approach towards the hated topee (hat) of the Feringhees. Does not every one suppose that soldiers are like the rest of us, unwilling both to forego the religious customs they have been reared in' and to be made rediculous in the eyes of their fellow-country-men? yet these military regulations only tended to bring all this about....... But they flogged most severely several sepoys of the 4th regiment at Vellore for declining to wear this new turban, and marched the battallion away to Madras with handkerchiefs about their heads, And while they were thus trifling with men's feeling, they were living as the phrase is 'over a powdered Magzine.'**

**- Adventures of an Arcot Rupee. Vol. III. p.247.**

**20. The treachery of Mustapha Beg seems to have aroused the fear of his Coreligionists, and to have led them to hasten the execution of their schemes - North Arcot District Manual - p.108.**

20. இந்த வெள்ளைத் தளபதி இந்நிகழ்ச்சிக்குப் பின் பல்லாவரத்தில் ஒரு இந்தியச் சிப்பாயால் சுட்டுக் கொல்லப்பட்டான். பார்க்க : **History of**

the Madras Army, p.183.

20-அ: இந்த கர்னல் கில்ஸ்பீ எவ்வளவு அதிர்ஷ்டக்காரன் என்பது 'வேலூர்ப் புரட்சி' பற்றி வெள்ளையர் வரைந்து வைத்துள்ள நூல்களால் விளங்குகிறது. வேலூர்க் கோட்டையில் இருந்த கர்னல் பான்கோர்ட்டுக்கு இவன் நெருங்கிய நண்பன். கர்னல் பான்கோர்ட்டின் அழைப்பின்பேரில் இவன் புரட்சி எரிமலை வெடித்தெழுந்த ஜூலை 9-ம் தேதி இரவு வேலூர்க் கோட்டைக்குச் சென்று, அங்கு கர்னல் பான்கோர்ட் வீட்டில் குடித்துக் கூத்தாடிவிட்டு உறங்கியும் இருக்க வேண்டியவன். ஆனால் விடுதலை வீரர்களின் துரதிர்ஷ்டம் அவன் வேறு வேலைகள் காரணமாக வேலூர் செல்லாமல் ஆர்க்காட்டிலேயே தங்கிவிட்டான்.

21. To and fro went men and women, now single, now in parties bringing intelligence of what was taking place outside, crowding together and gathering news to be carried to their superiors inside; every one advising, many rejoicing many shuddering but all inquiring and searching for associates with more than their customary solicitude and shrillness of voice.

- Adventures of an Arcot Rupee, page-260.

22. Dr. Russell has published his 'Diary in India' after a personal acquaintance with that country of little more than a year. I have ventured to write in another form and of an earlier period, when the incidents were full of interest, if not equal, in their startling nature, to those which gave rise to his well-drawn narrative. He comments upon the last great Sepoy Mutiny of Bengal - I endeavour to mark the paths which lead to that of Madras in 1806.

- Adventures of an Arcot Rupee - Preface.

23. இக்கயிறு பறங்கிப்படைகள் கோட்டையைச் சூழ்வதற்கு முன் புரட்சி வீரர்களால் உள்ளே நுழையவும் வெளியே செல்லவும் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பர்.

24. (i) They left him dying by inches...

(ii) Colonel Gillespie was urged to let his men enter the palace, but he humanly prevented this, and spared the lives of princes and their attendants. Had he given way to his own outraged feelings, and to the wrath of his soldiers, by putting any of these princes, although they were deserving no better fate to the sword, the dead would have been remembered against the English for ever..... Upwards of one hundred sepoys, however who had taken refuge in the palace, were brought out and ranged in line at the foot of a wall. The guns were then loaded with Canister-shot and fired at them until they were all dispatched.

- Adventures of an Arcot Rupee - page 268.

(iii) All the buildings in the Fort were explored, and Mutineers found in them pitilessly slaughtered.

The total number of mutineers who were killed was very great, eight hundred being found dead in the fort alone.

- North Arcot District Manual - p. 112.

(iv) Eight hundred of the mutineers fell in the attack & 500 were made prisoners in Vellore and other places to which they had fled. The number of Europeans massacred was 113-among them Colonel Fancourt & thirteen others.

(v) The strength of the Sepoy battallion in Vellore was 1,600 men. Not more than 900 were killed. A great part of those who escaped were afterwards apprehended.

பார்க்க : Madras Engineers - Chap. XV.

25. பார்க்க : History of Madras Army, p.186.

25. பார்க்க : History of Madras Army, page.187.

27. பார்க்க: பிற்சேர்க்கை எண்.2.

28. Lieutenant - Colonel Doveton informed Colonel Montresor that the cavalry would not draw as word to put down any riot that might be occasioned by an attempt to force the new turband on the infantry. - History of the Madras Army, page.195.

29. 'முஸ்லீம் ராஜ்யத்தை' உருவாக்க ஏதும் சதி நடந்ததா என்று ஆராய சென்னை அரசாங்கமே ஒரு விசாரணைக் குழு நியமித்தது.

அக்குழு 1807-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19-ஆம் தேதி அளித்த தீர்ப்பில் 'இத்தகைய ஒரு சதி உருவாகியிருக்கும் என்று நம்ப சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை' என்று தெரிவித்தது. (பார்க்க : Madras Army, p.197)

30. இவ்வுண்மையை வெள்ளை வரலாற்று ஆசிரியர்களும் ஒப்புக் கொள்கின்றனர் என்பது பின்வரும் வரிகளால் விளங்கும்.

"In Comparing the two (Sepoy Mutiny and Vellore Mutiny) it may be noticed that, however materially the sepoys of these presidencies differ, the causes assigned for their conduct were to some extent, similar. Both were fostered by extraneous influences; in each, Caste prejudices had been needlessly offended the train prepared for explosion, and the authorities were blindly unexpectant.

-Adventures of An Arcot Rupee - preface.

31. ஆயினும் இவ்வுத்தரவு பின்னால் தணிக்கப்பட்டதன் விளைவாக இவ்விரு தளபதிகளும் சென்னை ராணுவத்திலேயே சற்றே குறைந்த மதிப்புடைய பதவிகளில் தொடர்ந்து வேலை பார்த்தனர் என்பது வரலாற்று நூல்களால் விளங்குகிறது.

32. பார்க்க : North Arcot Manual, pp. 113-4.

33. திருக்குறள் - 108. 34. புறநானூறு - 34.

ANNA CENTENARY LIBRARY
CHENNAI 600 085
0011016

# பிற்சேர்க்கை 1

## An Extract from the History of the Madras Army
(Page 170)

To Colonel Fancourt,

Commanding Vellore.

'Sir, - I have received your letter by express of yesterday's date, and I have submitted it to the commander - in - Chief.

'While the Commander-in-Chief regrets the cause which requires such measures, he feels it to be his duty to check, by the most decided resolution, the symptoms of insubordination which you have reported in the 2nd battalion 4th regiment of native infantry.

'His Excellency has therefore ordered to Vellore a detachment of H.M.'s 19th dragoons, who will receive and escort to the Presidency for trial, before a General Court-martial now sitting the 19 men confined by Lieutenant - Colonel Darley, against whom he will prefer charges, and prepare to support the same by the requisite evidence.

'You will also direct the non-commissioned officers of the grenadier company (the two, who did not object in the first instance to deliver their turbands, excepted) to be reduced to the ranks; the Commander-in-Chief deeming a man who hesitates a moment to obey an order unfit to bear the character of a non-commissioned officer.

'You will further, through Lieutenant-Colonel Darley, direct the native commissioned officers of the 2nd battalion 4th regiment N.I. *Immediately to make up, the wear* the turband of the prescribed pattern.

*'Disobedience, or hesitation, on their part will be instantly followed by their dismission from the service in public orders on your report.* Lieutenant-Colonel Kennedy has orders, should you require it, to march the 19th dragoons to Vellore to assist in enforcing obedience.

'It is the intention of the Commander-in-Chief immediately to relieve the 2nd battalion 4th regiment, but though he thinks proper to remove them from Vellore, he will not admit hesitation even in their obedience to the orders he has given.

Fort Saint George,
7th May 1806
9 p.m.

Signed P.A. Agnew,
*Adjutant-General of the Army*
*Army*

ANNA CENTENARY LIBRARY
CHENNAI

# பிற்சேர்க்கை 2

**An Extract from the History of the Madras Army**

**(Page 172)**

**To The Officer Commanding Vellore.**

**'Sir-Your letter of the 7th instant by express, covering one from Lieutenant - Colonel Darley, and stating your intention to suspend the execution of expected orders, has been received and submitted to the Commander - in - Chief.**

**'His Excellency sees no cause to relax from the orders he has already given, which you will accordingly enforce. The places of the non-commissioned officers whose reduction has been ordered will be supplied from other corps, as the commander-in-Chief deems the 2nd battalion of the 4th regiment of N.I.to be at present unworthy to participate in any promotion. From this prohibition, however, he excepts the non-commissioned of the grenadiers who did not refuse to obey orders. They, if naignes, are to be promoted in the place of the havildars reduced.**

**'The 2nd battalion of the 23rd regiment N.I. has been directed from Wallajahbad to relieve the 2nd battalion of the 4th in Vellore.**

**(Signed) P.A. Agnew**
***Adjutant - General of the Army.***

**Fort Saint George,**
***8th May 1806.***

# பிற்சேர்க்கை 3

**An Extract from the History of the Madras Army**

**(Page 188)**

**1st battalion 1st regiment.**

| | |
|---|---|
| Blown from a gun | 1 havildar, 1 naigue |
| Shot | 1 naigue, 4 sepoys |
| Hong | 1 jamedar, 4 sepoys |
| Transported | 3 havildars, 2 naigues, 1 sepoy |

**2nd battalion 23rd regiment.**

| | |
|---|---|
| Blown from a gun | 2 subadars |
| Hong | 2 havildars, 1 naigues |
| Blown from a gun | 2 lascars. |

1806

# முன்னுரை

வட இந்தியாவில் 1857-ல் நடந்த மாபெரிய இராணுவப் புரட்சியைக் குறித்தும் பாரதமெங்கணும் 1942-ல் கிளர்ந்தெழுந்த மாபெரு மக்கள் புரட்சியைக் குறித்தும் '1857', '1942' என்ற தலைப்புக்களோடேயே அறிஞர் அசோக் மேத்தா, பேராசிரியர் டாக்டர் சென், கலைச் செல்வர் திரு.கு. இராஜவேலு, எம்.ஏ., போன்ற பெருமக்களால் ஆராய்ச்சிவன்மை நிறைந்த வரலாற்று நூல்களும் கலையுணர்ச்சி நிறைந்த தொடர்நிலைக் கதைகளும் பலவாக எழுதப் பெற்றுள்ளன. ஆனால், இப்புரட்சிகட்கு எல்லாம் தாயாக நம் தாயகமாம் தமிழகத்தில் 1806-ல் நடைபெற்ற வேலூர்ப் புரட்சியைப்பற்றி அப்புரட்சி நடந்த ஆண்டின் எண்ணையே தலைப்பாகக் கொண்ட ஒரு நூலும் தமிழில் இல்லாமை ஒரு பெருங்குறையாக என் உள்ளத்தை நெடுநாட்களாய் உறுத்தி வந்தது. அக்குறை ஒருவாறு நீங்க எழுந்ததே இந்நூல்.

இந்நூலில் உள்ள இருகட்டுரைகளில் முன்னது சென்னை அரசாங்கம் 1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் வெளியிட்ட 'சுதந்தரச் சுடரில்' ஒளிர்ந்தது. பின்னது அதே ஆண்டு அதே திங்களில் வெளிவந்த 'சுதேச மித்திரன்' சுதந்தர நாள் மலரில் மலர்ந்தது.

இவ்விரு கட்டுரைகளும் நூலாக வெளி வரும் இத்தருணத்தில் சென்னை அரசினர்க்கும் சுதேசமித்திரன் ஆசிரியர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிமையும் பணிவார்ந்த வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் அச்சாகுங்காலத்துச் செப்பம் செய்துதவிய மகாவித்துவான் மே.வீ.வே. அவர்கட்கு என் நன்றி கலந்த வணக்கங்கள் உரியன.

வாழ்க தமிழினம்!

*ந. சஞ்சீவி*

வேலவன் குன்றம் மீட்ட

**வீரத் தமிழர்க்கு**

1

# வேலூர்ப் புரட்சி

'1806-ஆம் ஆண்டு மூண்ட வேலூர்ச் சிப்பாய்களின் புரட்சியும் சுதந்தர தாகத்தையே மூலகாரணமாகக் கொண்டது. பின்னர் ஏற்பட்ட முதலாவது சுதந்தரப் போருக்கு அது ஓர் ஒத்திகை.'

- வீர சவர்க்கார்

* * *

'இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராய் வளர்ந்து வந்த பெருவெறுப்பு முதல் முதலாக மக்கள் எழுச்சியாய் வெளிப்பட்டது. 1806-ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர்ப் புரட்சியே 1857-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியச் சிப்பாய் புரட்சியின் முன்னோடியாய் விளங்கியது. உண்மையில் 1857-ஆம் ஆண்டின் இந்தியச் சிப்பாய் புரட்சியின் சிறிய வடிவமே வேலூர்ப்புரட்சி.'

- ஹரிபாத சௌதிரி

* * *

இந்தியச் சிப்பாய்களின் பெரும்புரட்சி மூண்டெழுவதற்கு அரை நூற்றாண்டிற்கு முன்பே இன்பத் தமிழகத்தின் தலை வாயிலில் நடைபெற்ற முதல் இந்திய இராணுவப் புரட்சியே வேலூர்ப்புரட்சி.

இயற்கை அழகும் இலக்கியச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் ஒரு சேரப் படைத்து வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலை நகராய் விளங்கும் புகழ் பெற்ற வேலை மாநகரில் போர்க்கலை நுட்பங்களும் கவின்கலைச் சிறப்புகளும் கலந்து இலங்கும் பேறு பெற்றுத் திகழும் வேலூர்க் கோட்டையில் - அயல் ஆட்சிக் கொடுமையால் செம்மையெலாம் பாழாகிக்

கொடுமையே அறமாகிக் கிடந்த அஞ்சத்தக்க சூழ்நிலையில் 'நாமார்க்கும் குடியல்லோம்! நமனை அஞ்சோம்!' என்று தமிழ் நாட்டு மக்களின் சுதந்தர ஆவேசம் பிரிட்டிஷ் படையிலிருந்த கணக்கற்ற தமிழ் வீரர்கள் வாயிலாகப் பொங்கி எழுந்த விழுமிய நிகழ்ச்சியே வேலூர்ப் புரட்சி.

தென்பாண்டித் திருநாட்டில் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வீறுகொண்டெழுந்த பாளையக்காரரின் சுதந்தரப்போர், 1801-ஆம் ஆண்டில் தமிழகத்தின் மானங்காத்த மருது பாண்டியர்களைத் தூக்கிலிட்டதோடு முடிவுற்றது. அவ்வீர சகோதரர்கள் மறைந்த சில மாதங்களுக்குள் அவர்களையும் தமிழ்த்திரு நாட்டையும் காட்டிக்கொடுத்து அடிமை வாழ்வு வாழ்ந்த ஆர்க்காட்டு நவாபுகளின் கடைசி மன்னனாகிய உமதுத்-உல்-உமரா மரணமடைந்தான். அவனுக்குப் பின் வாள் முனையின் வலியின்றியே அவன் பரம்பரையைச் செல்லாக் காசாக்கியது ஆங்கில வல்லரசு.

அதே நேரத்தில் கர்நாடகம் முழுவதையும் கொடுங்கோலுக்கு இரையாக்கியது கும்பினி ஆட்சி. ஆம்! அந்தக் கொடுங்கோலின் தன்மையை அதன் விளைவுகளை அக்கொடுங்கோலர்களின் குடியில் தோன்றிய வெள்ளை வரலாற்று ஆசிரியர்களாலேயே மறைக்க முடியவில்லை.

இந்நிலையில் தமிழகத்தில் வடவெல்லையில் சுதந்தரமாக வாழ்ந்துவந்த எண்ணற்ற பாளையக்காரர்களை அடக்கி ஒடுக்கி நாசமாக்குவதில் வெள்ளை அரசாங்கம் தன் முழுக் கவனத்தையும் செலுத்தத் தலைப்பட்டது. அதன் பயனாக வடவெல்லையில் வாழ்ந்த பாளையக்காரர்களுக்கும் ஆங்கில வல்லரசிற்கும் இடையே போர் மூண்டது. பல மாதங்கள் போர் நடைபெற்ற தாயினும், இறுதி வெற்றி ஏகாதிபத்தியத்தின் சார்பிலேயே அமைந்தது. மாவீரர்களாகிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருதுபாண்டியர் ஆகியோரையே கொன்று தீர்த்த கும்பினிப் படைக்கு முன்பு போதுமான ஆயுதபலமற்ற வடவெல்லைப் பாளையக்காரர்களால் என்ன செய்ய இயலும்! அவர்கள் வீரப்போர் புரிந்து விண்ணுலகெய்தினார்கள். அதை ஒட்டித் தென்பாண்டி நாட்டில் செய்தது போலவே கும்பினி அரசாங்கம் தமிழகத்தின் வடவெல்லையிலும் பேயாட்டமாடிற்று. வானுயர்ந்த கோட்டைகளெல்லாம் குப்பை மேடுகளாயின. அடர்ந்த காடுகளெல்லாம் அழித்து நாசமாக்கப்பட்டன. தேச பக்தர்கள் வாழ்ந்த இடங்களில் எல்லாம் கொலையும் கொள்ளையும் வாளும் நெருப்பும் கொடுங்கூத்து நிகழ்த்தின. சில தினங்கள் முன்வரை குறுநில மன்னர்களாய்ப் பெருமையுடன் வாழ்ந்தவரெல்லாரும் கைவிலங்குகளோடு சிறைக் குகைகளிலே

தள்ளப்பட்டனர். காட்டிக் கொடுத்த துரோகிகட்குப் பணமும் பதவியும் பரிசாக அளிக்கப்பட்டன. இவ்வாறு பலவகையாலும் அல்லலுற்றும் அவமானமடைந்தும் மனங்கொதித்துக் கொண்டிருந்த வடவார்க்காட்டு மாவட்டத் தமிழர்கள் நயவஞ்சக வெள்ளை நரிகளைக் கொன்று குழியில் புதைக்க என்றேனும் ஒரு நாள் வாய்க்காதா என்று ஏங்கிக் கிடந்தார்கள்.

மக்களின் ஏக்கம் தீரும் நாள் விரைந்தோடி வந்தது. பெருமை வாய்ந்த வேலூர்க்கோட்டை கொடுங்கோல் வெறியர்களின் கல்லறையாகவும் சுதந்தர வீரர்களின் பாசறையாகவும் உருக்கொண்டது. ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குப் பலம் பொருந்திய பகைவர்களாய் விளங்கியவர்கள் ஐதர் அலியும் அவன் வீரமைந்தன் திப்புவுமாவார்கள். ஐதர் 1782-ல் காலமானான். அதற்குப்பின் அரியணை ஏறிய அவன் மகன் திப்பு, ஆங்கில ஆட்சிக்குக் கனவிலும் நனவிலும் கலக்கத்தையே விளைத்துவந்தான். வயப்புலி போலப்பதுங்குவதும் பாய்வதுமே அவன் பண்புகளாய் விளங்கின. பிரெஞ்சுக்காரர்களோடும் மாவீரன் நெப்போலியனோடும் தொடர்பு கொண்டிருந்தான் திப்பு. அவர்களுடைய ஆதரவைத் துணையாக்கிக் கொண்டு ஆங்கில ஏகாதிபத்தியத்தை இந்திய மண்ணினின்றும் வேரோடு கல்லி எறிவதே அவன் குறிக்கோளும் திட்டமுமாம். ஆனால், பல்வேறு காரணங்களால் அத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறவில்லை. 1799-ல் நடைபெற்ற சீரங்கப்பட்டினப் பெரும்போரில் திப்புவின் சேனைகள் தோல்வியுற்றன. திப்பு, போர் முனையில் தலையிலே சுடப்பட்டு விழுப்புண் எய்திப் பகைவர் கைப்படுதற்கு முன்பே மாண்டான். அயல் ஆட்சியினரும் பயத்தோடும் பத்தியோடும் அவன் பொன் உடலைப் புதைத்து ஆறுதல் கண்டனர். திப்பு மாண்டதும் அவன் வீரமைந்தர்களை - குடும்பத்தை - வேலூர்க் கோட்டையிலே சிறை வைத்தது கும்பினி ஆட்சி. ஆம்! பஞ்சுப் பொதிக்கு நடுவே நீறு பூத்த நெருப்புக் கட்டை ஒன்றை நுழைத்து வைத்தது போல ஆயிற்று அச்செயல்.

*மனக்குமுறல்:* ஏற்கெனவே கும்பினி ஆட்சியின் கொடுமையால் மனம் கொதித்துக் கிடந்தனர் வடவெல்லைத் தமிழர். அவர்தம் பிரதிநிதிகள் பலர் வேலூர்க் கோட்டையிலே நிலைத்திருந்த ஆங்கிலப் படையில் கூலிக்கு வேலை பார்த்து வந்தனர். அவர்கட்குத் துணையாகத் தென்பாண்டித் திருநாட்டில் அடக்கி ஒடுக்கி நாசமாக்கப்பட்ட பாளையக்காரர்கள் மரபிலே வந்த வீரர் பலர், தம் இயற்கைப் பண்பான போர்க்குணம் காரணமாகவும் வாழ்க்கைச் சூழ்நிலை காரணமாகவும் பசுத்தோல் போர்த்த புலிகளாய் வேலூரிலிருந்த ஆங்கிலப் படையில் வீரராய் விளங்கினர். இவர்களை எல்லாம் ஒன்று திரட்டி உபதேசங்கள் புரிந்து சுதந்தர வீரர்களாக உருவாக்கும் வாய்ப்பும் வல்லமையும் காலத்தின் கையிலும், சிறை வைக்கப்பட்டிருந்த திப்புவின் மைந்தர்களின் திறமையிலும் பெரும்பாலும் அடங்கியிருந்தன.

திப்புவின் மைந்தர் பன்னிருவரையும் மகளிர் அறுவரையும் அந்நாளில் வேலூர்க் கோட்டையில் சிறை வைத்திருந்தது கும்பினி ஆட்சி. பலம் பொருந்திய காவலில் அவர்கள் இருப்பதாகக் கருதப்பட்டாலும், உண்மை நிலை அதுவன்று. பெரிய அளவிற் சுதந்தரம் நிறைந்த சிறைக் கைதிகளாய் வாழும் வாய்ப்பினைத் தமது தந்திரத்தாலேயே தேடிக் கொண்ட திப்புவின் குடும்பத்தினருக்கு ஏராளமான உற்றாரும் உறவினரும் தோழரும் துணைவரும் கோட்டையின் உள்ளும் புறமும் நிறைந்திருந்தனர். மூவாயிரவருக்குக் குறையாத மைசூர் நாட்டினர், அவர்களது எதிர் காலத்தில் கருத்துடையவர்களாய், வேலூரில் குடியிருந்தனர். அவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அன்பு காட்டிய பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் வேலைமாநகரின் குடிமக்களாய் விளங்கினார்கள். கணக்கிட்டுப் பார்க்கும் போது வேலூரை இராணுவ பலத்தால் அடக்கி ஆண்ட பட்டாளத்தின் தொகையைவிட அதை முறித்து எறியக்கனன்று கொண்டிருந்த குடிமக்களின் தொகை பல மடங்கு அதிகமென்றே சொல்ல வேண்டும்.

*நீறு பூத்த நெருப்பு:* இந்நிலையில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நீறு பூத்த நெருப்புப் போலிருந்த மக்கள் நெஞ்சில் சுதந்தரச்சுடர் எழுநாவிட்டு எரியப் பெருந்துணை புரிந்தன வெள்ளை வர்க்கத்தினர் நேராகவும் மறைமுகமாகவும் செய்த சில அடாத செயல்கள். ஆளும் அரசாங்கத்தின் ஆதரவு பெற்று அந்நாளில் நடைபெற்ற கிறித்தவ மதமாற்றப் பிரசார முறை, மக்களின் மனத்தை நாளும் புண்படுத்திவந்தது; அந்த முறை மக்களின் மனத்தில் பயத்தையும் பகையையும் கிளப்பி விட்டது. அந்நிலையில் கும்பினி ஆட்சி சற்றும் ஆராய்ச்சியின்றி விதித்த சில உத்தரவுகள், படை வீரர்கள் - நாட்டு மக்கள் - மனத்திலிருந்த சுதந்தரக்கனல் காட்டுத்தீயாகக் காரணமாயின. ஆணவம் படைத்த ஆங்கிலத் தளபதிகள், இந்துக்கள் இராணுவப் பயிற்சிக்கு வரும்போது தங்கள் காதுகளில் கடுக்கன்களை அணியக்கூடாது என்றும், நெற்றியிலே திருநீறோ திருமண்ணோ இடக்கூடாதென்றும் கட்டளையிட்டார்கள். முகம்மதியர்களோ, தங்கள் தாடியை முற்றிலும் களைந்துவிட வேண்டும் என்றும் மீசையையுங் கூட ஒரு குறிப்பிட்ட வகையில் குறிப்பிட்ட அளவிற்கே கத்தரித்துக் கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, 1805-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள், 14-ஆம் நாள், சென்னையிலிருந்த இராணுவப் பெருந்தலைவன் இந்தியச் சிப்பாய்கள் தங்கள் தலையிலே ஒரு வகையான புதுத்தலைப்பாகையை அணிந்து கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டான்; இதனுடன் அவர்கள் புதுவகைக் காலுறைகளும் தோலாற் செய்யப்பட்ட குல்லாய்ச் செண்டுகளும் இறகுச் செண்டுகளும்

அணிய வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தான்; மேலும், மார்பிலே சிலுவை போன்ற சின்னம் ஒன்றைத் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினான். தேவையற்ற இத்திடீர்க் கட்டளைகளால் இந்தியச் சிப்பாய்களிடையே பெருமனக்கசப்பு ஏற்பட்டது. நாளடைவில் சுயமரியாதையையும் சொந்த மதத்தையும் இழந்து மதம் மாற நேரிடும் என்ற கலக்கமும் தமிழ் வீரர்கட்கு உண்டாயிற்று. அதனால், அவர்கள் அடைந்த மனத்துயர் மிக அதிகம். அந்நிலையில் 1806-ஆம் ஆண்டு, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் புதுத்தொப்பிகள் வேலூர்ப் பட்டாளத்திற்கு அனுப்பப்பட்டன. உடனே அவற்றை அணிந்து கொள்ளும்படி சிப்பாய்கள் வற்புறுத்தப்பட்டார்கள். இச்சமயத்தில் வேலூரிலிருந்த ஒரு படைப்பிரிவினர், "அரசாங்கத்தின் புதிய உத்தரவுகள் எங்கள் மனத்தைப் பெரிதும் புண்படுத்திவிட்டன. எங்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தொப்பிகள் கிழக்கிந்திய பாண்டு வாத்தியக்காரர்களின் குல்லாய்கள் போலிருக்கின்றன. எனவே, எங்களால் அவற்றை நிச்சயமாக அணிய இயலாது!" என்று உறுதியாக மறுத்து விட்டனர்.

*வேண்டுகோள் ஏறவில்லை:* அச்சமயத்தில் வேலூரில் படைத் தலைவர்களாய் இருந்த வெள்ளை அதிகாரிகளும் தங்கள் கீழிருந்த சிப்பாய்களின் மனக்கொதிப்பை மேலிடத்திற்குச் சுட்டிக் காட்டிப் புதிய உத்தரவுகளை மாற்றும் படி மன்றாடினார்கள். ஆனால், கொடுங்கோலர்களின் செவியில், அறம் பிறழா வகையில் படை வீரர்களும் அவர்கள் தலைவர்களும் செய்து கொண்ட வேண்டுகோள் சற்றும் ஏறவில்லை. உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த எண்ணங்களை ஒளியாமல் வெளியிட்ட வேலூர் வீரர்கள், கைக்குட்டைகளால் முக்காடிடப்பட்டு, சென்னைக் கோட்டைக்கு இழுத்துச் செல்லப்பட்டார்கள். விசாரணை நாடகத்திற்குப் பின் நீதியின் பெயரால் தீர்ப்புகளை வழங்கியது கும்பினி ஆட்சி. அதன்படி ஒரு முஸ்லீமுக்கும் இந்துவுக்கும் முறையே தொள்ளாயிரம் தொள்ளாயிரம் சாட்டையடிகள் கொடுக்கப்பட்டன. சாட்டை அடிகளால் பிழிந்து சக்கையாக்கப்பட்டவர்கள் உத்தியோகத்தினின்றும் நீக்கப்பட்டார்கள். மேலும் பத்தொன்பது பேர்கட்கு ஐந்நூறு ஐந்நூறு சாட்டையடிகள் கொடுத்ததுடன் 'மன்னிப்பும்' வழங்கப் பெற்றது. இவ்வாறு தனியார்களைத் தண்டித்ததோடு சுதந்தர உணர்ச்சி கொண்ட அவ்வேலூர்ப் பட்டாளத்தின் பிரிவையே கலைத்தொழித்து, அதன் இடத்தில் புதுப்படை ஒன்றை நியமித்தது கும்பினி ஆட்சி. இவ்வாறே வாலாஜாபாதில் தம்வெறுப்பை வெளிப்படுத்திய ஒரு சுபேதாரை வேலையை விட்டே வெளியேற்றியது வெள்ளை அரசாங்கம்.

அறவழிப்பட்டு உள்ளத்தைத் திறந்து காட்டிய வேலூர், வாலாஜாபாது வீரர்கட்கு நேர்ந்த இந்த அநீதிகளையும் அவமானங்களையும் நினைந்து

சிப்பாய்கள் மனம் குமுறினார்கள். அவர்கள் உள்ளத்தில் பழிவாங்கும் உணர்ச்சி கிளர்ந்து எழுந்தது. வேலூர்க் கோட்டையில் நள்ளிரவு நேரங்களில் இரகசியக் கூட்டங்கள் நடைபெற்றன. மறைமுகமாகப் புரட்சி வேலைகள் செய்ய மன்றங்கள் நிறுவப்பட்டன. அக்கூட்டங்களிலும் ஆவேசம் மிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அக்கூட்டங்கட்கெல்லாம் மாவீரன் திப்புவின் மக்களும் வேலூர்ப்பட்டாளத்தின் சுதேசி அதிகாரிகளுள் பெரும்பாலாரும் வந்திருந்து, 'ஓங்குக புரட்சி! உறுக வெற்றி!' என்று ஆசி கூறினார்கள். ஆரம்பத்தில் இந்நிகழ்ச்சிகள் இரகசியமாகவே நிகழ்ந்தன. ஆனால், நாளடைவில் ஊர் வாயை மூடுவது அரியதாகிவிட்டது. மெல்ல மெல்ல இச்செய்தி திக்கெட்டிலும் பரவியது. இரவு நேரங்களில் ஏராளமான பல்லக்குகளில் அஞ்சத்தக்க போர்க் கருவிகள் கோட்டைக்குள் போய்ச் சேர்ந்தன. வழி மறித்துக் கேட்ட வாயிற் காவலர்கட்குப் பல்லக்குகளில் திப்புக் குடும்பத்தின் அந்தப்புரத்துப் பாவையர்கள் இருப்பதாகச் சொல்லிக் காரியம் எளிதில் சாதிக்கப்பட்டது. இச்செய்திகளெல்லாம் பல்வேறு வழிகளில் வெள்ளைத் துரைமார்கள் செவிகளிலும் சிறிது சிறிதாகச் சென்று சேர்ந்தன. ஆயினும், அவர்கள் கவலையற்றவர்களாய்க் குடித்துக் கூத்தாடிக் கும்மாளமிட்ட வண்ணம் இருந்தார்கள்.

*திப்புவின் மகள் திருமணம்:* இந்நிலையை உணர்ந்த தமிழ் வீரர்கள் புரட்சி வேலைகளைத் துணிச்சலோடு விரைந்து நடத்தி வெள்ளையரை வீழ்த்தி வேலூர்க் கோட்டையைத் தங்கள் உடைமையாக்கும் நல்ல நாளை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்கள். அந்நிலையில் திப்புவின் மகளொருத்திக்கு 1806-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 9-ஆம் நாள் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு ஆயிரக்கணக்கான 'அன்பர்' விருந்தினராய் வந்து குழுமினர். மக்கள் உள்ளத்தில் புரட்சித்தீ மூளுவதற்கான சூழ்நிலை மிக நன்றாக உருவாகியது. அதன் பயனாக மறுநாள் ஜூலை மாதம் 10-ஆம் தேதி வியாழக்கிழமை, அதிகாலையில் பயங்கர வெடி முழக்கங்கள் விண்ணையும் மண்ணையும் அதிரச் செய்தன. ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதல் முதலாக இந்திய மண்ணில் இராணுவப் புரட்சி வீறுடன் கிளம்பியது. புரட்சி எழுவதற்கான பல்வேறு அறிகுறிகளையும் ஆங்கிலப்படை அதிகாரிகள் அறிந்திருந்தார்கள். எனினும், ஜூலை மாதம் 9-ஆம் தேதி, வெள்ளைச் சிப்பாய்களின் தளபதிகளும் இந்தியச் சிப்பாய்களின் மத்தியிலேயே தைரியமாக உறங்கச் சென்றது அனைவருக்கும் வியப்பை அளித்தது.

மேலும், இந்நாளிலேதான் வெள்ளை அதிகாரி ஒருவன் இந்தியச் சிப்பாய் ஒருவனால் பயிற்சி புரியுமிடத்தில் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டிருந்தான். இந்நிலையில் ஜூலை மாதம் 10-ஆம் தேதி, பொழுது விடிந்ததும் இராணுவ நாள் கொண்டாட ஏற்பாடு

செய்யப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முதல் நாள் இரவே சிப்பாய்கள் அனைவரும் கோட்டைக்குள்ளே உறங்குதற்கு அனுமதிக்கப்படுவது வழக்கம். அப்பொழுதுதான் அவர்கள் அதிகாலையிலேயே எழுந்து பயிற்சிக்குத் தயாராக முடியும். வேலூரிலிருந்த பட்டாளத்தின் ஒரு பிரிவில் மிக முக்கியமான புரட்சிக்காரர்கள் இருந்தார்கள். அவர்களே அன்றைய தினம் இரவு கோட்டையில் காவலாளிகளாகவும் நியமிக்கப்பட்டார்கள். முக்கியப் பொறுப்பிலிருந்த ஒரு முகம்மதிய அதிகாரி கோட்டையினுள்ளே இரவு காவலுக்காகத் தன் நம்பிக்கைக்குரிய ஆட்களில் எத்தனை பேர்களை நியமிக்க முடியுமோ, அத்தனை பேரையும் நியமித்தான். இன்னும் புரட்சி வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அனைவரும் பல்வேறு சாக்குகளைச் சொல்லிக்கொண்டே கோட்டைக்குள்ளேயே இரவு நேரத்தைக் கழிக்க முடிவு செய்தனர்.

*கோட்டைக்குள் கொந்தளிப்பு:* ஜூலை மாதம் 9 ஆம் தேதி, இரவு நேரத்தை வேலூர்க் கோட்டைக்குள்ளேயே கழிப்பதில் வெற்றி கண்ட வீரச்சிப்பாய்களுள் தலை சிறந்தவர் ஜமேதார் ஷேக் காசீம் என்பவரே. கோட்டையின் தலைவாயிலில் அன்றிரவு கண்ணுறங்காது பாதுகாக்கக் கடமைப்பட்ட ஒரு வெள்ளை அதிகாரி, ஏதும் விளையாது என்னும் இறுமாப்பால், சில சொந்தக் காரணங்களை முன்னிட்டு வீட்டிற்குச் சென்று ஓய்வு கொள்ள விரும்பினான். அவன் கருத்தறிந்த ஜமேதார் ஷேக் காசீம் மெல்ல அவனை அணுகி, நயமாகவும் பணிவாகவும் பேசி, தாமே அவன் கடமையை அன்றிரவு முழுவதும் கண்ணும் கருத்துமாய்ச் செய்வதாகக் கூறி ஏற்றுக் கொண்டார். வேலூர்ப் புரட்சிக்குக் காரணமாயிருந்த சிப்பாய்களுள் மிக முக்கியமானவரான ஜமேதார் ஷேக் காசீமின் திறமைமிக்க இச்செயல், மறுநாள் மூண்ட புரட்சிக்குப் பெருந்துணை புரிந்தது விந்தையன்று அன்றோ?

1806-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 9-ஆம் நாள் இரவு எங்கும் ஒரே அமைதி குடி கொண்டது. மறுநாள் பொழுது விடியும் நேரத்தில் பல மாதங்களாகக் கனன்று கொண்டிருந்த புரட்சி எரிமலை குபீரென வெடித்துத் தீக்குழம்பை வாரி வீசத் தொடங்கியது. இந்திய அதிகாரிகளின் ஆணையின் பேரில் இந்திய இராணுவத்தின் ஒரு பகுதி பயிற்சிக்களத்தில் அணி வகுத்து நின்றது. குறி பார்த்துச் சுடும் பயிற்சிக்கு ரவைகள் வழங்குவது போலத் துப்பாக்கிக் குண்டுகள் வழங்கப்பட்டன. இந்த ஏற்பாடுகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்கும் பொழுதே வெள்ளையர்களால் சூழப்பட்டிருந்த கோட்டையின் தலை வாயிலை நோக்கி நம் படையின் ஒரு பகுதி அரவமின்றிச் சென்றது. ஏற்கெனவே அவ்விடத்தில் காவல் புரிந்து கொண்டிருந்த சுதேசி சிப்பாய்களும் இப்படையினரின் வரவை எதிர் நோக்கி இருந்தார்கள். இரு படைகளும் ஒன்று சேர்ந்தன. 'டுமீல், டுமீல்'

என்று துப்பாக்கிகள் வெடித்தன. குழுமியிருந்த பறங்கிக் கூட்டத்தின் குலை நடுங்கியது. புரட்சி எரிமலையின் முதல் வீச்சு இவ்வாறு தொடங்கியதும், கோட்டை எங்கும் ஒரே கொந்தளிப்பு ஏற்பட்டது. சிப்பாய் படையின் முதல் முழக்கத்தைக் கேட்டவுடன் இன்னொரு படை சுதேசி அதிகாரிகள் ஆணையைத் தலைமேல் தாங்கி, குடித்துவிட்டு உறங்கிக் கிடந்த வெள்ளைப்பட்டாளத்தின் மீது பல குண்டுகளை வீசியது. அடியுண்ட அரவங்களைப் போலப் பறங்கித்துரைகள் சுருண்டு சுருண்டு நாற்காலி கட்கும் தூண்கட்கும் பின்னே ஓடி ஒளிந்தார்கள். சுதந்தர வீரர்களின் இம்முதல் வேட்டை முடிவதற்குள் தளவாடப் பேரறை உட்படக் கோட்டையின் முக்கிய இடங்களை எல்லாம் புரட்சியாளர் கைப்பற்றி விட்டனர். கோட்டைக்குள் இருந்த கோவிலுங்கூட அவர்கள் கையிற் சிக்கியது.

*துப்பாக்கிப் போர்:* விடியற்காலம் மணி மூன்றிருக்கும். சுதேசி சிப்பாய்கள் போர்க்கோலம் பூண்டிருக்கின்றார்கள் என்பதை அறிந்த லெப்டினன்டு ஈவிங், காப்டன் மாக்லா கலன், தளபதிகள் மிட்சல், பேபி, ஜனோல், சார்ஜன்டு பிராடிலி, லெப்டினன்டு கட்லிப்பு, சர்ஜன் ஜோன்ஸ் என்னும் வெள்ளையர் எண்மரும் ஈவிங் இல்லத்தில் மந்திராலோசனை செய்யக் கூடினர். கூடிய கால்மணி நேரத்தில் அவர்கள் கூடியிருந்த வீடு புரட்சி வீரர்களால் முற்றுகையிடப்பட்டது; பலமாகத் தாக்கப்பட்டது. தங்கள் இன்னுயிரைக் காக்க அவ்வெள்ளையர்கள் கை ஓயுமட்டும் விடுதலை வீரர்களைச் சுட்டுத் தீர்த்தார்கள். அப்படியும் விடுதலை வீரர்களின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்கப் பறங்கித் துரைகளால் முடியவில்லை. எனவே, அவர்கள் அண்மையிலிருந்த ஜோன்ஸ் என்பவன் வீட்டில் ஓடி ஒளிந்தார்கள். நிகழ்ச்சிகள் இவ்வாறு ஒரு புறம் நடந்து கொண்டிருக்கப் புரட்சி வீரர்கள் கோட்டைக்கொடி மரத்தையும் கைப்பற்றினார்கள். மேலும், கோட்டைக் கொடிக் கம்பத்தில் ஆடிப்பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக்கு அகற்றப்பட்டுத் திப்புவின் திருமகனால் தரப்பட்ட இந்தியக் கொடி - மைசூர் அரண்மனைக் கொடி - பட்டொளி வீசிப்பறந்தது.

புரட்சி தொடங்கி ஐந்து மணி வரை எந்த வெள்ளையனுக்கும் வெளியேதலை நீட்டத் துணிச்சலில்லை. காலை ஏழு மணிக்கு லெப்டினன்டு மிட்சல் என்பவன் மட்டும் வேலூர்க் கோட்டையிலிருந்த படைத்தலைவர்களுள் ஒருவனாகிய பாரோ வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான். புதிய வீட்டில் அடைக்கலம் புகுந்த துரைமார் அனைவரும் திருதிருவென விழித்துக் கொண்டு திகிலுடன் காலத்தைப் போக்கினர். காலை எட்டு மணி ஆயிற்று. துரைமார்கள் ஒளிந்திருந்த வீடு புரட்சி வீரர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டது. இரு தரப்பிலும் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இந்தியச் சிப்பாய்களின் ஆற்றலுக்கு

எதிர் நிற்க இயலாமல் வெள்ளைத் தளபதிகள் அனைவரும் சிப்பாய்கள் குடியிருக்கும் பகுதிக்குள் போய் மறைந்தனர். தப்பியோடிய அத்துரைமார்களை விடாது விரட்டி வேட்டையாடினர் புரட்சி வீரர். செய்வதறியாது திகைத்த சீமைத் துரைகள் தாங்கள் ஒளியச் சென்ற இடத்திற்கு எதிரே இருந்த பறைச்சேரியை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். எப்படியாவது கோட்டை கொத்தளங்களைக் கைப்பற்ற வேண்டுமென்பதே பறங்கிப் பட்டாளத்தின் திட்டம். ஆனால், வெள்ளைச் சிப்பாய்கள் அனைவரும் அதிகாலையில் நடைபெற்ற போராட்டத்திலேயே, இருந்த குண்டுகளை எல்லாம் இழந்து விட்டனர்; ஆதலின், வெறுங்கையராய்த் தவித்தனர்.

*கொத்தளங்கள்:* மேலும், கொத்தளத்தின் அடியில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த கிடங்கிலிருந்த பொருள்கள் யாவற்றையும் நம் வீரர்கள் முன்பே சூறையாடிவிட்டார்கள். இதையறிந்த துரைமார்கள் அடைந்த துக்கம் சொல்லி முடியாது. இதுவரை நடைபெற்ற போராட்டத்தில் கோட்டையிலிருந்த 372 பேரைக் கொண்ட ஒரு வெள்ளைப் படைப்பிரிவில் 199 பேர் கொலை செய்யப்பட்டனர். இவற்றால் எல்லாம் மனம் உடைந்து போயிற்று பறங்கிக் கூட்டம்; எனினும், நம் சிப்பாய்களின் கடுமையான தரக்குதலையும் பொருட்படுத்தாது வெறி கொண்டு சாடிக் கொத்தளத்துச் சுவர்களின் மீது ஏறியது. இம்முயற்சியிலீடுபட்ட வெள்ளைத் தளபதி ஒருவன் நம் வீரர்களால் தொடையில் குறி பார்த்துச் சுடப்பட்டு வாழ்க்கைக்குப் பயனற்றவனாக்கப்பட்டான். கொத்தளங்களைக் கைப்பற்றிய பட்டாளம், தன்னை இரு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு, நம் சிப்பாய்களைப் புடைக்க முந்தியது. ஒரு பிரிவு, இந்தியச் சிப்பாய்கள் நிறைந்திருந்த ஒரு கோட்டைப் பகுதியைத் தாக்குவதைக் குறியாகக் கொண்டது. இன்னொரு பிரிவு, வேலூர்க் கோட்டையின் கீழ்த் திசையிலிருந்த தலைவாயிலைக் கைப்பற்றுவதில் கவனம் செலுத்தியது. இக்கடுமுயற்சியில் ஈடுபட்ட வெள்ளைப் பட்டாளம் சுதந்தர வீரர்களால் சுட்டுப் பொசுக்கப்பட்டது. கோட்டை வாயிலை அணுகிய வெள்ளைப் படைகள் தலைவாயிற்கதவுகள் தாளிடப்பட்டுப் புரட்சி வீரர்களின் பலம் பொருந்திய பீரங்கிகளால் பாதுகாக்கப்பட்டிருப்பதை அறிந்தனர். ஆம், சுதந்தரச் சிப்பாய்களின் நோக்கமெல்லாம் கோட்டைக்கு வெளியே இருந்து பகைவர் யாரையும் உள்ளே வரவிடாமல் தடுப்பதும் கோட்டைக்குள்ளே இருந்த வெள்ளையரை அங்கேயே சுட்டுச் சாம்பலாக்குவதுந்தான். கோட்டைக் கதவுகளை வெள்ளைப்பட்டாளம் நெருங்காத வண்ணம் கடும்போர் புரிந்தார்கள் இந்தியச் சிப்பாய்கள். போரில் வெள்ளையர் பலர் உயிரிழந்தனர்.

*கொடிப்போர்:* வெள்ளைப்பட்டாளம் கோட்டையின் ஆயுதச் சாலையை அடுத்தபடியாகத் தாக்கத் துடித்தது. ஆனால், குண்டுகளை எல்லாம் இழந்து வெறுங்கையோடு நின்ற பட்டாளத்தால் ஆகும் காரியமா அது? எனவே, எப்படியாவது துப்பாக்கிக் குண்டுகள் சேமித்து வைக்கப்பெற்றிருக்கும் கொட்டிலையும் கோட்டையின் புற அரணையும் கொத்தளத்தின் ஒரு பகுதியையும் பொருட்களஞ்சியத்தையும் கைப்பற்ற முடிவு செய்தது பறங்கிப் பட்டாளம். அம்முயற்சியில் ஏகாதிபத்திய வெறியர் பலர் மாண்டு மடிந்தனர். ஒருவாறு பலத்த சேதத்திற்குப்பிறகு, எடுத்த முயற்சியில் வெற்றி கண்ட வெள்ளைப் படையினர் கோட்டைக் கொடி மரத்தில் பறந்து கொண்டிருந்த இந்தியக் கொடியை இறக்கப் பெருமுயற்சி செய்தனர். ஆனால், அவர்கள் முயற்சி படுதோல்வி அடையும் வகையில் ஆவேசப் போர் புரிந்தார்கள் இந்தியச் சிப்பாய்கள். பல மணி நேரப் போருக்குப் பின்னும் உயர்ந்த கொடி மரத்தில் ஓங்கிப்பறந்து கொண்டிருந்த இந்தியக் கொடியை இறக்க முடியாமல் அவமானம் அடைந்த பறங்கிப் பட்டாளத்தின் அடி வயிறு பகீரென, வேறோர் உண்மையும் சடுதியில் விளங்கியது. கையிலிருந்த குண்டுகளை எல்லாம் கரியாக்கித் தீர்த்துவிட்ட பின் கோட்டையிலுள்ள வெடிமருந்துக் கிடங்கையாவது கைப்பற்ற விரும்பிய வெள்ளைப் பட்டாளம் ஆத்திரம் கொண்டு அத்திக்கு நோக்கிப் பாய்ந்தது. ஆனால், மருந்துக் கிடங்கில் மருந்துக்குக் கூட மருந்தில்லாமல் ஏற்கெனவே சூறையாடி விட்டார்கள் இந்திய வீரர்கள்.

அவமானமும் ஆத்திரமும் பொறுக்க முடியாமல் கோட்டையின் தலைவாயிலை நோக்கிப் பின் வாங்கிக் கொண்டிருந்த ஆங்கிலப் படைகள் மீண்டும் ஒரு முறை ஆடிப்பறந்து கொண்டிருந்த இந்தியக் கொடியைப் பார்த்து அளவிடற்கரிய சினம் கொண்டு அதை இழுத்தெறியத் தாவிப் பாய்ந்தன. இம்முறையும் கடும் போர் நிகழ்ந்தது. பொழுது புலர்ந்தது. விடியற்காலை முதல் வெள்ளையாட்சி தான் கண்ட இழவுகட்கெல்லாம் ஏதோ ஒரு வகையில் ஆறுதல் பெறும் முறையில் கொடியை இறக்கும் முயற்சியில் கடைசியில் வெற்றி கண்டது.

இவ்வாறு வேலூர்க் கோட்டையை இந்தியச் சிப்பாய்கள் பிணக்காடாக்கிக் கொண்டிருந்த நிலைமையில் மேஜர் கோட்ஸ் என்பவன் வேலூரிலிருந்து 16 மைல் தொலைவிலுள்ள ஆர்க்காட்டிலிருந்த கர்னல் கில்லெஸ்பிக்குச் செய்தி அனுப்பினான். செய்தி கிடைத்ததும் ஆர்க்காட்டு வெள்ளைத் தளபதியின் இரத்தம் கொதித்தது. ஒரு பெரும்படையுடன் வேலூரை நோக்கிக் காற்றாய்ப் பறந்தான் கில்லெஸ்பி. ஆர்க்காட்டிலிருந்து வந்த ஆங்கிலப் பட்டாளம் சுமார் பத்து மணிக்கு வேலூர்க்கோட்டை வாயிலை அடைந்தது. கோட்டையின் முதல் இரு கதவுகளும் திறந்தே இருந்தன. மூடிக்கிடந்த மூன்றாவது கதவையும் வெள்ளைப்பட்டாளம்

பெருமுயற்சி செய்து சுதந்தர வீரர்களுடன் போராடித் திறந்தது. ஆனால், நான்காவது வாயிலிடம் வந்ததும் பறங்கிப்பட்டாளம் செயலற்று நின்றது. காரணம், கதவுகள் மூடப்பட்டிருந்ததோடு உள்ளே இருந்த நம் சிப்பாய்கள் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் இருந்ததேயாகும். எனவே, கர்னல் கில்லெஸ்பி ஆர்க்காட்டிலிருந்து பெரும் பெரும் பீரங்கிகள் வரும் வரை தவம் கிடந்தான். கடைசியாகப் பேய்வாய்ப்பீரங்கிகளும் வந்து சேர்ந்தன. கோட்டைக் கதவுகள் தகர்த்தெறியப்பட்டன. பீரங்கிப் பட்டாளம் பேய்களின் கூட்டமென உள்ளே சாடியது. அந்தோ! வேலூர்க்கோட்டை இரணக்களமாயிற்று. வெள்ளைப் பட்டாளம் வெறியாட்டம் - பேயாட்டம் - ஆடியது. கர்னல் கில்லெஸ்பி ஏகாதிபத்திய வெறியர்களுக்குத் தலைமை தாங்கினான்; எட்டுத் திசைகளிலும் பாய்ந்தான்; சுட்டான்; சூறையாடினான்; கொன்றான்; கொளுத்தினான். இச்சந்தர்ப்பத்தில் நடைபெற்ற கொடுமைகளைப் பற்றி வெள்ளையரின் நூல்களே வாய் விட்டுப் புலம்புகின்றன. புரட்சி வீரன் ஒருவனை அங்குலம் அங்குலமாகச் சிதைத்தனர். கோட்டையைக் கைப்பற்றியதும் அரண்மனையில் சரண் புகுந்திருந்த நூற்றுவருக்கு மேற்பட்ட இந்தியச் சிப்பாய்கள் வெளியே இழுத்து வரப்பெற்று, பெருஞ்சுவர் ஒன்றின் ஓரமாக நிறுத்திவைக்கப்பட்டு ஒருவனும் பிழைக்க முடியாத வகையில் சுட்டுத் தள்ளப்பட்டார்கள். கர்னல் கில்லெஸ்பியும் அவன் கூட்டாளிகளும் நம் வீரர்கட்கு இன்னும் எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்திருப்பார்கள். என்றாலும், எதிர் பாராத வகையில் வேலூர்க் கோட்டையிலே கிளம்பிய எரிமலைப் புரட்சியை நினைந்து நினைந்து நெஞ்சம் திடுக்குற்றுக் கையும் கருத்தும் சோர்ந்தார்கள்.

*எண்ணூற்றுவர் படுகொலை:* எட்டு மணி நேரம் விடுதலை வீரர்களின் பாசறையாய் விளங்கிய எழிலும் ஏற்றமும் நிறைந்த வேலூர்க் கோட்டை அரைமணி நேரத்தில் ஆங்கிலேயர் கையிற் சிக்கியது. கொள்கை வீரர்கட்கும் கொள்ளைக் கூட்டத்திற்கும் இடையே நடந்த வீரப் போராட்டத்தில் எண்ணூற்றுவருக்கு மேற்பட்ட இந்தியச் சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வேலூரிலும் சுற்றுப் புறங்களிலும் சுதந்தர வீரர்கள் வேட்டையாடப் பட்ட சில நாட்களில் இரண்டாயிரத்து இருநூற்று இருபத்திருவருக்கு மேற்பட்ட சிப்பாய்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளினின்றும் கைது செய்யப்பட்டார்கள். இச்சந்தர்ப்பத்தில் வேலூரிலும், திருச்சியிலும் ஒரே சமயத்தில் அறுநூற்றுவருக்கு மேற்பட்ட புரட்சி வீரர் சிறையிடப்பட்டனர். புரட்சித் தீயில் வெந்து மடிந்த வெள்ளையர்கள் நூற்றுக்கணக்கானவர்கள்.

*தோல்வி ஏன்?* வேலூர்க் கோட்டை இறுதியில் இவ்வளவு எளிதில் பிடிபட்டதற்குப் பல பொதுக் காரணங்களும், சிறப்புக் காரணங்களும் உண்டு என்பது ஆராய்ச்சியால் புலனாகிறது. வேலூர்ப்புரட்சிக்குப் பின்னே

அமைந்து கிடந்த திட்டம் மிகப்பெரியது; மெய் சிலிர்க்கச் செய்வது! புரட்சி நடந்த காலத்தில் இராணுவப் பெருந்தலைவனாய் இருந்த சர்ஜான் இராடக்கு என்பவனே இவ்வுண்மையை ஒளியாது உரைத்துள்ளான்; இணை காண முடியாத இரகசியத்துடனும் எச்சரிக்கையுடனும் வேலூர்ப்புரட்சி மிக விரிவாகத் திட்டமிடப்பட்டிருந்தது. புரட்சியின் குறிக்கோள் ஒவ்வொரு வெள்ளையனையும் கொன்று தீர்த்துவிட்டுத் திப்புவின் திருமகனை அரியணையில் அமரச் செய்வதே. இந்நோக்குடன் தென்னகத்தில் பல்வேறு பகுதிகட்கும் அனுப்பப் பெறுவதற்குப் புரட்சிக் கடிதங்கள் தயாராய் இருந்தன. ஏன்? ஏற்கெனவே அனுப்பப்பட்டும் இருந்தன.

மேலும், பின்னாளில் புரட்சி பற்றி நடைபெற்ற விசாரணையின் விளைவாகத் திடுக்கிடும் உண்மைகள் சில வெளியாயின. அவற்றுள் சில வருமாறு: புரட்சி வீரர்கள் கோட்டையைக் கைப்பற்றிக் குறைந்தது எட்டு நாட்களேனும் தங்கள் ஆட்சியில் வைத்திருக்க வேண்டும். இடை வேளையில் திப்புவின் அரசிளங்குமரன் பத்தாயிரம் வீரர்களைப் போர்க்கருவிகளுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளினின்றும் திரட்ட வேண்டும். சிறப்பாக மைசூர் மக்களின் துணையை நாட வேண்டும். வேலூர்க் கோட்டையும், பேட்டையும் பிடிபட்டவுடன் இந்திய இராணுவத்தினிடையே ஏற்படக் கூடிய பேரதிர்ச்சியைப் பயன்படுத்தி ஆங்கில அதிகாரத்தைச் சீர்குலைக்க வேண்டும். இவ்வாறெல்லாம் திட்டமிட்ட புரட்சி வீரர்கட்கு ஏற்கெனவே இராணுவப் பயிற்சி பெற்று ஓய்வு பெற்றிருந்த பலர் துணை புரியவாக்களித்தனர். வேலூர்க் கோட்டையை அடுத்திருந்த பேட்டை மக்களுள் பல்லாயிரவர் புரட்சி வீரர்களின் கட்டளை கிடைத்ததும் சுதந்தர தேவிக்குத் தம் தலைகளைக் காணிக்கையாக்கக் காத்திருந்தனர்.

*குடியைக் கெடுத்த குடி:* இவ்வளவு திட்டமிடப் பெற்றிருந்தும், புரட்சி வீரர்களின் முதல் இந்திய இராணுவப் புரட்சி தோல்வியுற்றதற்கு முக்கிய காரணங்களைச் சரித்திர ஆராய்ச்சி தெளிவுபடுத்துகிறது. தோல்விக்கான முதற்காரணம், எந்த நாளில் புரட்சி நடத்தப்பெற வேண்டுமென்று திட்டமிடப் பெற்றிருந்ததோ, அந்த நாளுக்கு நான்கு நாட்களுக்கு முன்பே திடீரெனப் புரட்சியை நடத்துவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்த விபத்திற்குக் காரணம் சுதந்தர வீரர்களின் பட்டாளத்திலிருந்த ஒருவன் இரவு நேரத்தில் குடிப்போதையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உண்மைகளை எல்லாம்பிதற்றித் தீர்த்தமையே. உண்மை வெளியாகிவிட்டால், குடி மோசம் போகுமே என்று அஞ்சிய சுதந்தர வீரர்கள், அவசரக் கூட்டம் கூடி, அன்றிரவே புரட்சிக் கொடியை உயர்த்த முடிவு செய்தார்கள். ஆம்! குடியைக் கெடுத்த குடியினால்

கோட்டையிலே ஜூலை மாதம் 10 ஆம் தேதி, புரட்சித் தீ மூளும் என்பதை முன் கூட்டியே அறிந்து வேலூர்ப்பேட்டை மக்கள் யாதோர் உதவியையும் செய்ய முடியாமல் போயிற்று.

தோல்விக்கு இரண்டாவது முக்கிய காரணம், புரட்சி வீரர்கட்குத் தக்க தலைவர்கள் இருந்து வழி காட்டாமையே. புரட்சி வீரர்கள் வெள்ளை அதிகாரிகளின் உயிரையும் உடைமையையும் பாழ்படுத்திவிட்டுப் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று மறைவதில் ஆத்திரம் காட்டினார்களே ஒழிய, நிலைத்து நின்று கோட்டையைக் கைப்பற்றுவதில் போதிய கவனம் காட்டவில்லை. மூன்றாவது காரணம், எதிர்பார்த்த அளவிற்குத் திப்புவின் குமாரர்கள் துணிந்து முன் வந்து சுதந்தர வீரர்களின் அணி வகுப்பிற்குத் தலைமை தாங்கத் தயங்கினமை, நான்காவது காரணம், நினைக்குந்தோறும் நம் மனத்தில் வெட்கத்தையும் வேதனையையும் வெறுப்பையும் நெருப்பென அள்ளிக் கொட்டுவதாகும். வேலூர்ச் சிப்பாய்களில் பெரும்பாலோர்க்கு இருந்த சுதந்தர உணர்ச்சிக்கு உலை வைக்கக் கோட்டைக்குள்ளேயே சில கருங்காலிகள் இருந்தார்கள். அதைக்காட்டிலும் புரட்சியை அடக்க வெள்ளையர்க்கு உதவியாக ஆர்க்காட்டிலிருந்து வந்த இந்தியக் கூலிப்பட்டாளமே பேருதவி புரிந்தது. ஆம்! ஒரு புறம் நம்மவரின் அனுபவக் குறைவும், ஒரு சிலரின் துரோகப் புத்தியும் - மற்றொரு புறத்திலே அனுபவ நிறைவும், ஆயுதப் பெருக்கமும் - இவை இரண்டிற்கும் இடையே சுதந்தர வீரர்களின் ஆன்மபலம் தாற்காலிகமாகத் தோல்வியுற்றது. என்றாலும், இறுதி வெற்றி தேசபத்தர்களிடமே சரண் புகுந்தது. இந்தியநாடு இன்று சுதந்தர நாடாய் விளங்குவதே - காந்தி அடிகள் போன்ற மாண்பு மிக்க மனித குல மாணிக்கங்கள் பிறந்தமையே - இவ்வுண்மையை மெய்ப்பிக்குமன்றோ?

*அடக்குமுறை:* வேலூர்ப் புரட்சி கொடுமையான அடக்குமுறையால் நசுக்கப்பட்டது. இத்தகைய புரட்சிகளின் முடிவில் உலக இயற்கைக்கு ஒப்ப இங்கும் வீரர் அமர வாழ்வு அடைந்தனர். துரோகிகள் சுகவாழ்வு பெற்றார்கள். ஆர்க்காட்டிலிருந்து பேய்போலப் பறந்து வந்து வேலூர்க்கோட்டைக் கதவுகளைத் தகர்த்து எறிந்த கில்ப்ஸிக்கு இருபத்து நாலாயிரத்து ஐந்நூறு பொற்காசுகள் பரிசாக வழங்கப் பெற்றன. சார்ஜன்டு பிராடிலிக்கு இரண்டாயிரத்து எண்ணூறு வெண்பொற்காசுகள் பரிசளிக்கப்பட்டன. கர்னல் பான்கோர்ட்டின் மனைவிக்கும் மக்களுக்கும் உதவி நிதி அளிக்கப்பட்டது. ஆர்க்காட்டிலிருந்து வந்த பரதேசிப் பட்டாளத்திற்கு ஒரு மாதச் சம்பளம் இனாமாக அள்ளி வழங்கப்பட்டது. துரோகியாகச் செயல் புரிந்த முஸ்தாபாவுக்கு இரண்டாயிரம் வராகன்கள் பரிசாகத் தரப்பட்டன. மேலும் வாழ்நாள் முழுவதும் ஒரு சுபேதாருக்குள்ள சம்பளம் அவனுக்கு உபகாரச் சம்பளமாகத் தரப்பட்டது. மேற்குறிப்பிட்ட

தனி நபர்க்கு மட்டுமேயன்றிப் புரட்சியை ஒடுக்குவதில் துணை புரிந்த படைப்பிரிவினர் பலருக்கும் மொத்தச் சலுகைகளும் காட்டப்பட்டன. துரோகிகள் வாழ்வு பெற்ற வரலாறு இதுவாக, வீரத் தியாகிகளைச் சாவும் புகழும் சேர்ந்து தழுவின.

புரட்சி நடத்தியதற்காக ஆறு தேசபத்தர்களின் மார்பகங்கள் பீரங்கிகளால் பிளக்கப்பட்டன. ஐந்து பேர் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். எட்டுப்பேர் தூக்கிலிடப்பட்டனர். புரட்சி நடைபெற்ற வேலூர்க் கோட்டையின் மேற்குத் திசையிலே நாகரிகக் காட்டுமிராண்டி வெள்ளையரால் மிகக் கோரமான முறையில் நாயும், நரியும், காக்கையும், கழுகும் சான்றாக நிற்க, விடுதலை வீரர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

புரட்சியில் பங்கு கொண்ட முக்கியமான வீரர்களுட் சிலரது கதி இதுவாக, புரட்சி புரிந்த இருபடைப்பிரிவைச் சார்ந்த வீரர்கள் தொகுதியாகக் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் பொன்னுடலை அழித்ததோடு ஆறுதல் கொள்ளாத அயல் ஆட்சி, இராணுவப் பட்டியல்களில் அவர்கள் பேரும் இல்லாதபடி அழித்து ஒழித்தது. வேலூர்ப்புரட்சி காரணமாகத் தமிழகம் எங்கணும் கைது செய்யப்பட்ட கணக்கற்ற வீரர்கள் பல மாதங்கள் வரை விசாரணையின்றிச் சிறையில் வைக்கப்பட்டுச் சித்திரவதையும் செய்யப்பட்டார்கள். புரட்சியைத் தூண்டியும், அது நடைபெற்ற காலத்தில் வீரர்களுக்கு வெற்றியின் மேலிருந்த வேட்கையில் தின்பண்டங்கள் வழங்கியும், படைக்கலங்கள் தந்தும், தலை சிறந்த புரட்சியாளன் ஒருவனுக்கு வீரவாள் ஒன்றைப் பரிசாக அளித்தும், பல் வகையாலும் ஊக்கம் ஊட்டிய திப்புவின் குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் துண்டு துண்டாக்கவே துடித்தது ஆங்கில ஆட்சி. என்றாலும் 'இன்று கோட்டையிலே பொங்கிய தீ நாளை குடிசைகளிலெல்லாம் பொங்குமானால் என் செய்வது!' என்று எண்ணித் தயங்கியது. ஆயினும், மாவீரன் திப்புவின் மதிப்பிற்குரிய குடும்பத்தினரையும் உற்றார் உறவினர்களையும் கல்கத்தாவுக்கு அருகே கொடிய மலேரியா நோயும் காடுறை விலங்குகளும் நிறைந்த காட்டிலே ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் 'வாழ்விலே சாவை'க்காண அனுப்பிவைத்தது 'நாகரிக' வெள்ளை ஆட்சி; புரட்சி வீரர்களோடு உறவு கொண்ட எவரையும் எக்காலத்திலும் இராணுவத்தில் சேர்க்கக் கூடாதென்று தடையும் விதித்தது.

இவ்வாறெல்லாம் கற்பனைக்கும் எட்டாத அடக்கு முறைகளைப் புரிந்தும் வேலூர்ப் புரட்சியின் எதிரொலிகளை வெள்ளை அரசாங்கத்தால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவ்வொரு நாள் நடைபெற்ற பூகம்பப் புரட்சியின் வேகம் மட்டும் அடங்க அறுபது ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று என்பதைச் சென்னை இராணுவ வரலாற்றையும் இம்மாநிலத்தில் கடந்த

காலத்தில் ஆங்கிலேயர் ஆண்ட ஆட்சியின் வரலாற்றையும் துருவி ஆராய்வார் உணர்தல் ஒருதலை.

வேலூர்ப் புரட்சியைப்பற்றி மக்கள் மனத்தில் வெறுப்புண்டாக்கும் வகையில் எத்தனையோ கதைகளைக் கட்டிவிட்டது பறங்கி ஆட்சி. ஆனால், அவையனைத்தும் காலப்போக்கில் அப்புரட்சியின் தூய்மையையும் ஏகாதிபத்திய வெறியர்களின் பொய்யையும் காட்டவே பயன்பட்டன.

*பாரி எழுதியது என்ன?* வேலூர்ப் புரட்சிக்குக் காரணம் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கண் மூடிச் செயல்களே என்பதை நாளடைவில் ஆங்கில ஆட்சியே ஒப்புக் கொண்டது. அவ்வுண்மையை இப்புரட்சி சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்த அத்தனை வெள்ளை வரலாற்று ஆசிரியர்களுமே ஒப்புக் கொண்டுள்ளார்கள். மேலும், அப்புரட்சியின் வேகத்தையும், அது வெற்றி கண்டிருந்தால் நேர்ந்திருக்கக் கூடிய விளைவுகளையும் நம்மைக்காட்டிலும் நாடாண்ட வெள்ளையரே நன்கு உணர்ந்திருந்தனர். இவ்வுண்மைக்கு உரை கல்லாய் விளங்கும் பல கூற்றுகளை ஜி.எச். ஹாட்ங்சன் என்பவர் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சென்னை மாநகரில் பெருவணிகராய்த் திகழ்ந்த தாமஸ் பாரியைப் பற்றி (சென்னை உயர்நீதி மன்றத்தின் அருகே உள்ள பாரிஸ் கார்னர் இவர் பெயரால் அமைந்ததே) விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ள வரலாற்று நூலில் காணலாம். அந்நூலில் ஓரிடத்தில் வேலூர்ப்புரட்சி நடைபெற்ற நான்கு நாட்கள் கழித்துத் தாமஸ்பாரி தம்முடைய வெள்ளை நண்பர் ஒருவருக்கு வரைந்த விளக்கமான கடிதம் ஒன்றில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'யாராவது இப்படிப்பட்ட அவலமான உத்தரவுகளைப் பிறப்பிப்பார்களென்று நீங்கள் கருத முடியுமோ? ஆனால், உண்மை என்னவோ அப்படித்தான் இருந்திருக்கிறது. ஆனால், அவற்றை இனியேனும் தொலைத்தாக வேண்டும்; ஏற்கெனவே அவை ஒழிக்கப்பட்டு வருகின்றன. சென்னைக் கவர்னர் பென்டிங்கு பிரபு இவ்வுத்தரவுகளை ஒழித்துக் கட்டி ஆணைகள் பிறப்பிக்குமாறு . இராணுவப் பெருந்தலைவனுக்குக் கட்டளையிட்டுள்ளார். இச்செயல் இனி இத்தகைய புரட்சிகள் தோன்றாது காப்பாற்று மென்று நம்புகிறேன். ஆனால், நாம் வேலூர்ப் புரட்சியின் போது இந்தியாவின் இப்பகுதியைத் தலை முழுகிவிடக்கூடிய நிலையிலேதான் இருந்தோம். இத்தகைய படுமோசமான உத்தரவுக்குக் காரணம் மேஜர் பியர்சி என்னும் இராணுவத் தலைவன்தான் என்பது இப்பொழுது எனக்குத் தெரிகிறது.'' ................

வேலூர்ப் புரட்சி முடிவு பெற்றதும் பிரிட்டிஷ் ஆட்சி சத்திய சோதனை நடத்தித் தன்னைத்தான் ஆராய்ந்தது; அதன் பயனாகத் தான் செய்த

தவறுகளை உணர்ந்தது. அதன் விளைவாகச் சென்னைக் கவர்னர் பென்டிங்கு பிரபுவும் இராணுவப் பெருந்தலைவனும் புரட்சி நடந்த ஓராண்டு கழித்துத் தங்கள் பதவியினின்றும் நீக்கப்பட்டார்கள். அச்சமயத்தில் தாமஸ் பாரி, தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் மீண்டும் ஒரு முறை பின் வருமாறு குறித்துள்ளார். ''பென்டிங்கு பிரபு பதவியிழந்தமையால் பலர் வருந்தினர் என்று யான் ஒரு போதும் சொல்ல முடியாது.''

தாமஸ் பாரியைப் போன்ற நடுவு நிலைமையுள்ளம் படைத்த நல்லோராலேயே வெறுக்கப் பெற்றுக் குற்றம் சாட்டப்பட்ட பென்டிங்கு பிரபுவும் அவரது கொடுங்கோலாட்சியும் புரிந்த அநீதிகளை எதிர்த்து எழுந்த வேலூர்ப் புரட்சி மாசு மறுவற்றது; அறநெறி பிறழா அருமைப்பாடு வாய்ந்தது. இவ்வுண்மையை மெய்ப்பிக்கப் பின்வரும் ஒரு சான்றே சாலும்:

கணவரை இழந்த விதவையார் பான்கோர்ட்டு என்பவர் பின் வருமாறு எழுதியுள்ளார்: ''புரட்சி வீரன் ஒருவன் எங்களைக் கோழி முதலியவற்றை அடைத்து வைக்கும் பட்டிக்குள் நுழைந்து கொள்ளுமாறு பணித்தான். எல்லோர் கண்ணுக்கும் புலனாகக் கூடிய நிலையிலிருந்த எங்களை மாற்றொணாச் சினம் கொண்டிருந்த புரட்சி மறவர்களின் பார்வையினின்றும் காப்பாற்றிக் கொள்ளத் துணை புரியும் வகையில் மறைத்துக் கொள்வதற்காக அவனே ஒரு பழம்பாயைக் கொண்டு வந்து கொடுத்தான். சிறிது நேரத்தில் அவ்வீரனே என் மைந்தன் பசியைத் தீர்க்க ஒரு ரொட்டித் துண்டையும் கொண்டு வந்து கொடுத்தான்.''

இத்தகைய நேர்மை நிறைந்த நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சிகளைக் கேட்ட கவர்னர் பென்டிங்கு பிரபுவின் மனமும் கசிந்தது. தம் கைப்பட அரசாங்க ஏடுகளில் அவர் வரைந்துள்ள குறிப்பொன்று பின் வருமாறு பேசுகின்றது: 'ஐரோப்பியர்களின் உயிரைக் காக்கச் சிப்பாய்களுள் சிலர் மிக்க கருணையோடு செய்த செயல்கள் சிலவும் புரட்சிக் காலத்தில் நடைபெற்றன.'

சற்று முன் நாம் குறிப்பிட்ட தாமஸ் பாரியைப் பற்றிய நூலில் அந்நூலாசிரியர், 'வேலூர் புரட்சியின் போது எந்தப் பெண்மணியும் அவமானம் செய்யப்படவில்லை; அதற்கு நேர்மாறாக மிகுந்த அன்புடனும் மதிப்புடனும் நடத்தப்பட்டனர்,' என்று வரைந்துள்ளார்.

*வாழிய வீரம்!* - இவ்வாறு தாய்க்குலத்தின் பெருமைக்கும், சேய்ச் செல்வங்களின் வாழ்விற்கும், தமிழ்க்குலத்தின் புகழிற்கும் மாசு ஏற்படாத வகையில் சாதி மத பேதங்களை எல்லாம் மறந்து தேச பத்தியே தெய்வபத்தி-தியாக உணர்ச்சியே மனிதப் பண்பாடு - என்று மனத்தில் கொண்டு அயல் ஆட்சியை எதிர்த்துக் களம் புகுந்து போர் புரிந்து

பீரங்கிகளால் பிளக்கப்பட்டும் தூக்கிலிடப்பட்டும் சிறைச் சாலைகளில் குற்றுயிராக்கப்பட்டும் வீரமரணம் அடைந்த பேர் ஊர் தெரியாத வேலூர்ப்புரட்சி வீரர்கட்குத் தமிழகமே! நீ எவ்வாறு நன்றி காட்டப் போகின்றாய்? இந்நாள் வரை அவர்கள் புனித வரலாற்றை அறிந்து கொள்ளவும் மறந்திருந்த நீ, இனியேனும் விழித்தெழுந்து இனமானத்தோடும் இந்திய தேசிய உணர்ச்சியோடும் மாண்டு மறைந்த மாவீரர்கட்கு வேலூரில் வெற்றித் தூண் எழுப்பி வீர வழிபாடு செய்வாயோ? தமிழ்க்குலமே! இன வழிப்பட்ட தேசிய உணர்ச்சிக்கு என்றென்றும் வழி காட்டும் கலங்கரை விளக்கமாய்த் திகழும் வங்க நாட்டு அறிஞர் ஒருவர் நம் தமிழ்த் திருநாட்டு வரலாற்றில் வைர எழுத்துக்களால் பொறிக்கப் பெற வேண்டிய வேலூர்ப் புரட்சி பற்றி விளம்பியுள்ள மணிவாசகம் இதோ:

"வேலூர்ப் புரட்சி இந்தியச் சிப்பாய்களின் பெரும்புரட்சியைப் போல ஓர் இலட்சுமி பாயையோ அசிமுல்லா கானையோ அறிமுகப்படுத்தவில்லை. ஆனால், இதனால் அதன் பெருமை எவ்வகையிலும் குறையுடையதன்று. அப்புரட்சியில் பங்கு கொண்ட, பேரும் வேண்டாத் தன்னலமற்ற அத்தியாகிகளே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதன்முதல் இராணுவப் புரட்சி புரிய வழி காட்டிய வல்லாளர்கள். பெருமை மிக்க அவர்களுடைய திருமரபைப் பின்பற்றியே பல்லாயிரக் கணக்கான மக்கள் சுதந்தரத்தைப் பெற்றுள்ளார்கள். விடுதலை பெற்ற இந்தியா அவர்களை என்றும் மறவாது போற்றித் தன் வீர வணக்கங்களை நன்றியுடன் நாளும் உரிமையாக்கும்!"

■

# 2

# சுடரும் சோதியும்

## முன்னுரை

இந்திய அரசாங்கத்தின் ஆதரவில் டாக்டர் சுரேந்திரநாத்து சென் அவர்களால் வரையப்பெற்று, மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாதின் முன்னுரையுடன் தில்லியிலிருந்து அண்மையில் வெளி வந்துள்ள '1857' என்ற ஆராய்ச்சிப் பெருநூல், 'சிப்பாய் புரட்சிக்கு வித்திட்டது வேலூர்ப் புரட்சியே,' என்று சுட்டிக்காட்டுகிறது. அவ்வாறே இலண்டன் மாநகரிலிருந்து புறப்பட்டு உலகெங்கும் சுற்றும் 'தி லிசனர்' (The Listener) என்ற அரிய வார இதழின் 1957-ஆம் ஆண்டு மே மாதம் 23-ஆம் நாள் வெளியீடு, ஒரு நூற்றாண்டிற்கு முன் நடைபெற்ற வட விந்திய சிப்பாய் புரட்சியின் அடிப்படை அப்புரட்சி நடைபெறுவதற்கு ஐம்பத்தோர் ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தில் நடைபெற்ற வேலூர் புரட்சியில் புதைந்து கிடப்பதைப் புலப்படுத்துகிறது. வேலூர்ப்புரட்சியின் தனிச் சிறப்பைப் புலப்படுத்தும் வகையில், டாக்டர் சென் அவர்களின் ஆராய்ச்சி நூல் எடுத்த எடுப்பிலேயே - முதல் இயலிலேயே - 'காரணங்கள்' என்ற தலைப்பில் வேலூர்ப்புரட்சியைப் பற்றி, இரண்டு பக்கங்களில் இயம்புகிறது. அவ்வாறே 'தி லிசனர்' பத்திரிகை 1806-ல் தமிழகத்தின் வடவெல்லையில் வெடித்தெழுந்த புரட்சியின் சரித்திரச் சிறப்பை வலியுறுத்தும் வகையில், வேலூர்க் கோட்டையின் படத்தையும் அக்கோட்டையிலே எழுந்த எரிமலைக் குமுறலை ஆயுத பலத்தால் அடக்கிய ஆங்கிலத் துரைமகன் கில்லெஸ்பியின் (Gillespie) படத்தையும் சேர வெளியிட்டுள்ளதைச் சிந்திக்கச் சிந்தை குளிர்கிறது! ஆம்! ஒருபுறம் ஆராய்ச்சி வேட்கையும் இன்னொரு புறம் கடந்த கால சாதனைகளை இன்னும் எண்ணி அடையும் இன்பமும் இறுமாப்பும் எழுகின்றன. ஆனால், ஒன்று: ஆங்கில ஆட்சி கலகலத்துப் போகும் வகையில், பேர் ஊர் தெரியாத எண்ணற்ற சிப்பாய்கள் வேலூரில் நிகழ்த்திய புரட்சியை நாமும் மறந்தோம்; நம் அரசாங்கமும் மறந்தது; மறந்து, வேலூரில் வெற்றித்தூண் எழுப்பி நன்றி பாராட்டும் கடமையையும் நழுவவிட்டு விட்டது. ஆனால், இலண்டன் பத்திரிகையாகிய 'தி லிசனர்' தன் ஆங்கிலச் சாதியின் ஆட்சியை

நிலைநாட்ட அரும்பாடு பட்ட கில்லெஸ்பியின் உருவத்தை வேலூர்க் கோட்டையோடு இணைத்து வைத்துப் பார்ப்பதில், சாம்ராஜ்யத்தை இழந்த இன்றைய நிலைமையிலும் பெருமை கொள்கிறது! ஆளும் சாதிக்கும் அடிமைப்பட்ட சாதிக்கும் உள்ள வேறுபாடு இதுதான் போலும்!

ஏன்? பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கிழக்கிந்தியக் கம்பெனி தமிழகத்தின் தெற்கெல்லையில் தனது முழு மூச்சுடன் கொடுங்கோலாட்சி நடத்தியது; வீரத்தலைவர் பூலித்தேவரையும் வீரபாண்டியக் கட்டபொம்மனையும், அவன் அருமைத் தம்பியும் மாவீரனுமாகிய ஊமைத்துரையையும், சிவகங்கைச் சிங்கங்களாகிய சின்னமருது, பெரிய மருது பாண்டியர்களையும் பலி கொண்டது. இச்சான்றோர்களின் தலைமையில் சுதந்தரப் போருக்கு வாளுருவி, வேலேந்தி, வளரி வீசி எழுந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் வீரர்களையும் அவர்கள் குடும்பங்களையும் கொன்று குவித்து நாசமாக்கியது! சுருங்கச் சொன்னால், சுதந்தர வீரர்கள் வாழ்ந்த தமிழ் மண்ணை - தென் பாண்டித் திருநாட்டைச் சுடுகாடாக்கியது எனலாம். இத்தனை கொடுமைகளையும் நிகழ்த்தி, 1801-ல் ஏகாதிபத்தியமே இறுதி வெற்றி கண்டது. ஆங்கிலப் பேரரசு நடுக்கமின்றி வேர் கொள்ளத் தொடங்கியது. அந்நிலையில் தமிழகத்தின் வடவெல்லையில் குறுநில மன்னர் பலர் செங்கோலோச்சி வந்தனர். எவர்க்கும் கைகட்டி வாழாது வாழ்ந்த அவர்கள் நோக்கையும் போக்கையும் கண்டு அஞ்சிய வெள்ளை ஆட்சி, அவர்களையும் அவர்கள் உடைமைகளையும் பட்டாள பலத்தால் பாழாக்கியது. தெற்கெல்லையில் தலை நிமிர்ந்து நின்ற சுதந்தர வீரர்களின் கோட்டைகளைக் குப்பை மேடுகளாக்கியது போலவே தமிழகத்தின் வடவெல்லையில் வானளாவி நின்ற பாளையக்காரர்களின் கோட்டைகளெல்லாம் தரை மட்டமாக்கப்பட்டன. பேய்கள் போலப் பாய்ந்து நாட்டைப் பிடித்து அலைக்கழித்துச் சூறையாடிய வெள்ளையரைக் கண்டு வடவெல்லையிலே வாழ்ந்த தமிழர் நெஞ்சம், கொல்லன் உலைபோலக் கொதித்தது. சுற்றுச் சூழ்நிலை இவ்வாறு அமைய, வேலூர்க் கோட்டைக்குள்ளே தங்கள் பிறவிக் குணமாய் அமைந்த போர்ப்பண்பு காரணமாகவும் வயிற்றுக் கொடுமை காரணமாகவும் கும்பினிப்பட்டாளத்தில் சேர்ந்திருந்த கணக்கற்ற தமிழ் வீரர்கள் அயல் ஆட்சியை அதன் அடியும் அடிசார்ந்த மண்ணும் இல்லாதவாறு அழிக்கத் திட்டமிடுவதற்கான சூழ்நிலைகள் பல தோன்றின. அவசியமற்ற, அறிவற்ற ஆணைகளை எல்லாம் பிறப்பித்தார்கள் வெள்ளையதிகாரிகள். இந்துக்கள் இராணுவப் பயிற்சிக்கு வரும் பொழுது சமயச் சின்னங்களை அணிந்திருக்கக் கூடாதெனக் கட்டளையிட்டார்கள்; முகம்மதியர்கள் தங்கள் தாடிகளை முற்றிலும் களைந்துவிட வேண்டும் என்றும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மீசையைக் கத்தரித்து விட்டுக் கொள்ள

வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தார்கள்; பசுவின் தோலாற் செய்யப்பட்ட குல்லாய்ச் செண்டுகளை அணிந்து கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார்கள்; மேலும், சிப்பாய்கள் மார்பிலே சிலுவை போன்ற ஒரு சின்னத்தைத் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். இவ்வுத்தரவுகளைக் கேட்டு முணுமுணுத்தார்கள் - முறையிட்டார்கள் - வெறுப்புக்காட்டினார்கள் - தமிழ்ச்சிப்பாய்கள். தங்கள் சமயப்பற்றையும் சுயமரியாதை உணர்ச்சியையும் ஏலம் கூற விரும்பாத அவர்கள் இதயம், எத்தனையோ முறை பணிந்து வேண்டியும், அறிவற்ற உத்தரவுகளை அகற்ற மறுத்ததுமன்றி, அறம் பிறழா வகையில் உள்ளக் கருத்துக்களை ஒளியாமல் கூறிய வீரர்களை அவமானப்படுத்தியும், கசையடி தந்தும் சித்திரவதை செய்தும் கொடுமைப்படுத்திய வெள்ளை ஆட்சியைப் பழி வாங்கத் துடித்தது! அதன் பயனே வேலூர்ப்புரட்சி.

*எவ்வாறு?* வேலூர்க் கோட்டையில் பெரியதொரு புரட்சி மூளப்போகின்றது என்பதற்கான அறிகுறிகள் பல வகையிலும் விளங்கிய வண்ணம் இருந்தன. ஆம்! எரிமலை ஏற்கெனவே புகையத் தொடங்கிவிட்டது. ஆயினும், வெள்ளை அதிகாரிகள் அதை அறியத் தவறிவிட்டார்கள். 1806-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 10-ஆம் நாள் அதிகாலையில் சுதேசி சிப்பாய்கள் போர்க்கோலம் பூண்டார்கள்; துப்பாக்கிகளை இயக்கினார்கள். கண்ணாடியும் சீப்பும் விற்கவந்து, நயவஞ்சகத்தால் கர்நாடகத்தின் அரசியல் உரிமைகள் அனைத்தையும் கைப்பற்றிக் கொள்ளையடிப்பதற்கென்றே கொடியுயர்த்திய கூட்டத்தைச் சின்னபின்னமாக்கின, வேலூர்ப்புரட்சி வீரர்கள் வீசிய வெடிகுண்டுகள். அம்மட்டோ! கோட்டைக்கொடி மரத்திலே பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக்கும் இறக்கப்பட்டது; அயற்கொடி பறந்த இடத்தில், அவ்வமயம் வேலூர்க் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டிருந்த மாவீரன் திப்புச் சுல்தான் மைந்தர்களின் துணையால் கிடைத்த இந்தியக் கொடி ஆடிப்பறந்தது. புரட்சி தொடங்கியவுடனே கோட்டை முழுவதையும் தமிழ் வீரர்கள் தங்கள் வசமாக்கினார்கள்; ஏகாதிபத்தியத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த கோடையில், பறங்கியரால் சேர்த்துப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த இராணுவத்தளவாடங்களையும் மருந்துக் கிடங்குகளையும் கண்மூடிக் கண் திறப்பதற்குள் தங்கள் உடைமைகளாக்கிக் கொண்டார்கள் புரட்சி வீரர்கள். இந்திய மண்ணில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வேலூர்க் கோட்டையில் ஆரம்பமாகிய இராணுவப்புரட்சியின் சார்பில் வெடிக்கப்பட்ட குண்டுகளின் பேரொலி எழுந்த நான்கு மணி நேரத்திற்குள், வேலூர்க்கோட்டையிலிருந்த வெள்ளைத் துரைமார் அனைவரும் குற்றுயிராக்கப்பட்டனர். அந்நிலையில், அதுசமயம் வேலூரிலிருந்து பதினாறு மைல் தொலைவிலுள்ள ஆர்க்காட்டில்

மூகாமடித்திருந்த கர்னல் கில்லெஸ்பிக்குச் செய்தி பறந்தது. அவன் தன் கீழிருந்த சுதேசிப் பட்டாளத்தின் துணைகொண்டும், வேலூரில் மலைமேலுள்ள கோட்டையில் ஓடி ஒளிந்திருந்த வெள்ளைச் சிப்பாய்களின் துணை கொண்டும், பேய்வாய்ப் பீரங்கிகளின் துணை கொண்டும், பெருமுயற்சி செய்து, புரட்சி வீரர்களால் அடைக்கப்பட்டிருந்த வேலூர்க் கோட்டைக்கதவுகளைப் பிளந்து எறிந்து, உள்ளே நுழைந்தான். காலைப்பத்து மணிக்கெல்லாம் வேலூர்க் கோட்டை கொலைக்களமாயிற்று! ஏகாதிபத்திய வெறியர்கட்கும் சுதந்தர வேட்கையினர்க்குமிடையே நேருக்கு நேர் போர் நடைபெற்றது. அந்தோ! அப்பொழுது நிகழ்ந்த பயங்கரக் காட்சிகளை யாரால் சித்திரித்துக் காட்ட இயலும்? சுதந்தர வீரர்கள், இராணுவ பலம் மிக்க வெள்ளைப் படைகளாலும் அவர்களுக்குத் துணையாக ஆர்க்காட்டிலிருந்து வந்த சுதந்தர உணர்ச்சியற்ற சுதேசிப் பட்டாளத்தாலும் சுட்டுப் பொசுக்கப்பட்டார்கள். அதன் விளைவாக வேலூர்க்கோட்டை வீர மாந்தரின் தியாக இரத்தத்தால் நனைக்கப்பட்டுப் புனித பூமியாயிற்று. வேலூர்க் கோட்டையில் நடைபெற்ற புரட்சி நெடுங்காலமாகத் திட்டமிடப்பட்ட புரட்சிதான்; அக்கோட்டையிலே காவலில் வைக்கப்பட்டிருந்த மைசூர் மன்னர் பரம்பரையினராலும், கோட்டைக்கு வெளியே இருந்த பேட்டை மக்களாலும் ஆதரவளித்து உருவாக்கப் பெற்றதுதான். என்றாலும், அப்புரட்சி தோற்றதற்குக் காரணம் எதிர்ப்பாராத இடையூறுகளும், ஆர்க்காட்டிலிருந்து வந்த சுதேசிப்பட்டாளத்தின் தேசத்துரோகச் செயலும், பலம் வாய்ந்த ஆங்கிலேய பீரங்கிகளின் ஆற்றலுமேயாகும். ஆனால், வேலூரில் 1806-ல் நிகழ்ந்த இச்செயல் மறைந்தாலும், இச்செயலுக்குக் காரணமான சிந்தனை மறையவில்லை. அதன் மலர்ச்சியே 1857-ல் நடைபெற்ற வடவிந்தியச் சிப்பாய்களின் பெரும்புரட்சி. வேலூர்ப் புரட்சி சுடர்; வடவிந்தியச் சிப்பாய்களின் புரட்சி சோதி. இவ்வுண்மையை 1955-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் வெளியிடப்பட்ட 'மாடர்ன் ரிவ்யூ'ப் பத்திரிகையில் ஹரிபாத சௌதிரி எழுதியுள்ள புலமை சான்ற வரலாற்றுக் கட்டுரை அழகாக ஆராய்ந்து விளக்குகிறது. அவர் ஆராய்ச்சியின் முடிவு வருமாறு:

'1857-ல் நடைபெற்ற பெரும்புரட்சியைப் போலவே வேலூர்ப் புரட்சியும் கொதிப்படைந்திருந்த மக்களின் ஆத்திரத்தாலேயே மூண்டது. ஆனால், தீர்க்க தரிசனம் நிறைந்த - நெறியான - தலைமையில்லாததாலும், சரியான ஒத்துழைப்பும் திறமையான திட்டமும் இல்லாமையாலும் பீரிட்டெழுந்த மக்களின் ஆத்திரம் - சிதறிக் குலைந்தது. 1806-ல் வேலூர்ப்புரட்சியின் போது மாவீரன் திப்புவின் மைந்தர்க்கு அரசுரிமை அளிப்போம்!' என்ற கூக்குரல் வானளாவ எழுந்தது. அவ்வாறே 1857-ல் பாராளும் உரிமையிழந்த கடைசி முகலாய அரசன் 'பகதூர்ஷாவை

அரியணையில் அமர்த்துவோம்!' என்பதே புரட்சியாளரின் ஆவேச முழக்கமாய் விளங்கியது. கொழுப்புத் தடவிய தோட்டாக்களைப் பற்றிய மத சம்பந்தமான உணர்ச்சி, 1857-ல் நடைபெற்ற புரட்சியை ஆட்கொண்டது; புரட்சிக்கு இறுதித் தூண்டுகோலாய் அமைந்தது. அவ்வாறே வேலூர்ப்புரட்சியும், தோலாலாகிய குல்லாய்ச் செண்டுகள் தரிப்பதைப் பற்றிய பிரச்சனையிலேயே இறுதியாக வெடித்தெழுந்தது. ஆனால், இவ்விரு பெரும்புரட்சிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளையும் நாம் உணர வேண்டும். வேலூர்ப்புரட்சி பின்னாளில் மூண்ட பெரும்புரட்சியைப் போல நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பரவி இலட்சக்கணக்கான மக்களைச் சுதந்தரப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லும் போராக உருக் கொள்ளவில்லை. மேலும், அப்புரட்சியின் பெருமை வெள்ளைச் சரித்திர ஆசிரியர்களாலும் அதிகாரிகளாலும் ஏதோ ஒரு சின்னஞ்சிறு உதிரிச் சம்பவமாக - மத உணர்ச்சிகள் காரணமாகத் தோன்றி மறைந்த சிறு நிகழ்ச்சியாக - ஒதுக்கி ஒளிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாகிய ஒரு முக்கிய உண்மை என்னவென்றால், வடவிந்தியச் சிப்பாய்களின் பெரும்புரட்சி நடைபெற்ற போது, இங்கு ஒரு பெருந்தொழிற்புரட்சியைக் கண்ட திருநாடாய்த் திகழ்ந்ததே. வெள்ளையர் வாணிபத்தில் அந்நாட்டில் உற்பத்தியான பொருள்களை ஏற்றுமதி செய்வது ஒரு முக்கிய கூறு பாடாய் இருந்தது. ஆனால், வேலூர்ப்புரட்சி நடைபெற்ற காலத்தில் இந்த நிலை சிறிதும் இல்லை; மேலும், வடவிந்தியப் பெரும்புரட்சி நடைபெற்ற காலத்தில் நாட்டில் அமைக்கப்பட்டிருந்த பலம் பொருந்திய போக்குவரவு சாதனங்களாகிய இரயில்வே, தந்தி, தபால் முதலியன இல்லை. எனவே, இந்தியச் சிப்பாய்களின் பெரும்புரட்சிக் காலத்தில் அப்புரட்சி நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பரவி, பெரியதொரு தேசிய எழுச்சியாக உருக்கொண்ட இந்தச் சூழ்நிலை வேலூர்ப் புரட்சி தோன்றிய காலத்தில் சிறிதும் இல்லை''.

இவ்வாறு பாரதத்தின் தெற்கேயும் வடக்கேயும் நடைபெற்ற இருபெரும்புரட்சிகளைப் பற்றியும் ஒப்பு நோக்கி ஆராயும் வரலாற்று அறிஞர் ஹரிபாத சௌதிரி அவர்கள், தம் கட்டுரையின் முதலிலும் முடிவிலும் ஐயந்திரி பின்றிக் கூறும் உண்மை ஒன்று உண்டு. அது 1857-க்கு வித்திட்டது 1806-ல் நடைபெற்ற வேலூர்ப்புரட்சி என்பதே.

*முடிவுரை:* இவ்வாண்டு ஆகஸ்ட் 15-ல் வடவிந்தியாவில் நடைபெற்ற இந்தியச் சிப்பாய்களின் பெரும்புரட்சியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படுகிறது. அப்புரட்சி விழாவிலே பாரத மக்கள் என்ற முறையில் மகிழ்ச்சியோடு கலந்து கொள்ளும் நாம், அப்புரட்சிக்கு வித்திட்ட பெருமை தமிழினத்திற்கு உண்டு என்று பெருமை கொள்வோமாக! உள்ளத்தளவில் பெருமை கொள்வதோடு ஓய்வு கொள்ளாது, முதல் இந்திய

இராணுவப் புரட்சி நடைபெற்ற வேலூரில் - நூற்றுக்கணக்கான வெள்ளைக் கொடுங்கோலர்களுக்குக் கல்லறையாகவும் பல நூறு சுதந்தர வீரர்களுக்குப் பலி பீடமாகவும் விளங்கிய வேலூர்க்கோட்டையில் 1806-ல் இராணுவப் புரட்சியில் ஈடுபட்டு மாண்டு மடிந்த பேர் ஊர் தெரியாத பெருமை மிக்க தமிழ் வீரர்கட்கு நன்றி உணர்ச்சியுடன் நினைவுத் தூண் - வெற்றித் தூண் எழுப்பிப் புகழெய்துவோமாக! 'பாரதமே, நின் விடுதலைக்காக வடவிந்தியாவில் எழுந்த புரட்சிப் பெருஞ்சோதிக்கு உணர்வும் ஒளிவும் உயிரும் கொடுத்த சுடர்க் கொடியாள், நீ பெற்ற நங்கையருள் தலை மகளாகிய தமிழணங்கு,' என்று கூறி, விடுதலை பெற்ற இந்தியா ஊழியையும்வென்று வாழ வாழ்த்தி வணங்குவோமாக!

001106
ANNA CENTENARY LIBRARY
21 JAN 2010
CHENNAI 600 085





பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் வரலாற்றில் ஆர்வம் கொண்டவர். விடுதலை இயக்க வரலாறு அவரது விருப்பத்திற்குரிய விஷயம். பூலித்தேவர், கும்மந்தான் கான்சாகிபு, மருதுசகோதரர்கள் ஆகியோரின் வரலாற்றையும் வேலூர்ப் புரட்சி பற்றியும் விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார். இது இந்தியாவிலேயே முதல் முதலாக வெள்ளையரின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடந்த சிப்பாய்க் கலகத்தின் வரலாற்றை விளக்கும் நூல்.